www.tamilarangam.net

# சரிநிகர்

**புடைக்கின்ற புஜங்கள்!**


பொட்டழிக்க நாட்டின் பூவழிக்க நம்மவரைச்
சுட்டழிக்க நாங்கள் துணைசெய்தோம் – நட்டமில்லை,
இடைக்கால அதிகாரம் எமக்களிப்பீர்! இல்லையெனில்
புடைத்துவிடு மெங்கள் புஜம்!

– ஈழமோகம்

இதழ் 106 செப்.26 - ஒக்.09, 1996 விலை 7.00



- **இடைக்கால நிர்வாகம் யாருக்கு?**
- **வளர்ந்து வரும் அரசியல் படுகொலைகள்!**
- **தகர்க்கப்பட்ட 'லொட்ஜ்'!**
- **மீண்டும் 'சத்ஜய'!**



- **யாழ்ப்பாணம்: விடுவிக்கப்பட்டது என்ன?**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே" பாரதி

ஆசிரியர்குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.ரஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்,
334,காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை - ரூபா 175/=
வெளிநாடு 30 U.$.$

(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெருக்கே எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகட்கும்
ஆசிரியர்,
சரிநிகர்,
04 ஜெயரட்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு -05
தொலைபேசி: 593615
தொலைமடல்: 594229

# மீண்டும் சத்ஜய!

கிளிநொச்சியை எப்படியாவது கைப்பற்றி விடுவது என கங்கணம் கட்டிக் கொண்டு மீண்டும் ஒரு பெரிய படை நகர்த்தலில் இறங்கியுள்ளன படைகள். இம்முறை பரந்து பட்ட ஒரு நகர்வு கிளிநொச்சியின் கிழக்குப் பக்கவாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. படைகள் தற்போது முரசு மோட்டைப் பகுதியில் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. புலிகள் தமது வியூகங்களை ஊடுருவி அதிரடிப்பதில் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளாமல் இருப்பதற்காகவே இந்த கைப்பற்றிய பகுதிகளில் அரண் நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் படைகள் தற்போது ஈடுபட்டுள்ளன. இப்படை நகர்வை பல நாட்களாக எதிர்பார்த்திருந்த புலிகள் தமது கைவசம் உள்ள பீரங்கிகள், எறிகணைச் செலுத்திகள் என்பவற்றைக் கொண்டு தாக்கியுள்ளனர்.

கண் எட்டும் தூரத்தில் வெடியெழும்புவதைக் காண முடியாத ஒரு சூழ்நிலையில் சக்திவாய்ந்த எறிகணைகளின் வெடிப்புகளுக்கு ஆளாகியுள்ளன முன்னேறும் படைகள். இவ்வாறான மேலாக கண்ணுக் கெட்டாது தொலைவிலிருந்து எறிகணைகள் வந்து வீழ்ந்து வெடிப்பது என்பது படைகள் அண்மைக்காலம் வரை அறியாத ஒரு பயங்கர அனுபவம். யாழ்ப்பாண மக்கள் 2ம் ஈழப்போரின்போது இவ்வகையான எறிகணை வீச்சுப் பயங்கரத்தில் எவ்வாறெல்லாம் நடுநடுங்கி வாழ்ந்தனர் என்பது தெரிந்ததே. ஞாயிறு அதிகாலையிலிருந்து திங்கள் மதியம் வரை 30 படையினர் இறந்தனர். 100 பேர் மட்டில் காயமடைந்தனர். இதிலிருந்து புலிகளின் புதிய எறிகணைவீச்சுப் பலத்தை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

முரசுமோட்டை-கிளிநொச்சிப் பகுதியில் பெரிய காடுகள் இல்லாவிடினும், அங்கு காணப்படும் வாய்க்கால்களும், அணைகளும், சமதரையில்லாத நில அமைப்பும் தாங்கி அணிகள் நகர்வதற்குச் சற்று இடைஞ்சலாக உள்ளன. சென்ற தடவை உமையாள்புரம் பக்கமாக சத்ஜய நடவடிக்கை முன்னேற முற்பட்டபோது போர்த்தாங்கிகளை இழந்ததற்கு தரை அமைப்பும் ஒர காரணம்.

ஆனால் இப்படி ஒரு பெரிய பக்கவாட்ட நகர்வு (flanking movement) மூலம் கிளிநொச்சியை வளைத்து அதை ஒரு நாற்புறமும் பரந்த கட்டுப்பாட்டுப் பிரதேசமாக்கிவிட்டால் இங்கிருந்து படிப்படியாக முறிகண்டி, கொக்காவில், மாங்குளம், புளியங்குளம், ஓமந்தை என முன்னேறிவிடலாம் என அரசு எண்ணுகிறது போலும். ஆனால் இரு பக்கமும் புலிகளின் பெருந்தளங்களும் படையணிகளும் உள்ள வன்னி மண்ணை இரண்டு படுத்தி செல்லும் பாதையில் படைகள் துரிதமாக முன்னேறுவது நாளைக்கோ, நாளையன்றைக்கோ முடிகிற காரியமல்ல.

புலிகளின் கையில் முல்லையில் எடுத்த பீரங்கிகளும், நீண்டதூர எறிகணைச் செலுத்திகளும் இருக்கையில் வெறுமனே கிளநொச்சீ-வவுனியா பாதையில் பெரிய தொகையில் குறிப்பிட்ட இடங்களில் குவிந்திருப்பது படைகளுக்கு ஆபத்து. பீரங்கிகள் ஓரிடத்தில் செறிக்கப்பட்ட படைகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் போது உச்ச அழிவை ஏற்படுத்த வல்லன.

வவுனியா-கிளிநொச்சி பாதையில் நிலைகொள்ளும் போது படைகள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதானால் பெருந்தொகையில் செறிந்து இருக்க வேண்டும். இந்நிலையில் புலிகள் பீரங்கிகளைப் பயன்படுத்தினால் என்னாவது எனப்பலரும் சிந்திக்கின்றனர். எனினும் மீண்டும் பரந்தனை நோக்கிப் பின்வாங்குவதில்லை என்ற உறுதியில் உள்ளது இராணுவத் தலைமைப்பீடம்.

யாழ்-வவுனியா பிரதான வழங்கற் பாதையை எப்படியாவது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டிய கட்டாயம் உள்ளது இராணுவத் தலைமைப் பீடத்துக்கு. இறக்கப்போவது மேலும் படையினரே

புலிகள் தற்போது பயன்படுத்தும் பீரங்கிகள் எறிகணைச் செலுத்திகளின் விபரம்.

இரு 122mm D 30 ஹொவிற்சர் ரக பீரங்கிகள்
தாக்கற் தூரம் 21.9 கி.மீ
சுடும் வேகம் நிமிடத்துக்கு 7-8 செல்
உற்பத்தி ஆரம்பம் 1960

இரு 120 mm பிரான்ட் எறிகணைச் செலுத்தி (Mortar)
தாக்கற்தூரம் 13 கி.மீ
சுடும் வேகம் நிமிடத்திற்கு 10-12 செல்
உற்பத்தி ஆரம்பம்-1961

இதே வேளை முரசு மோட்டையில் இராணுவத்தினை வழிமறித்து நடாத்திய தாக்குதல் காரணமாக படையினர் தமது பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிவிட்டர் என புலிகள் தமது வானொலியில் செவ்வாய் காலை அறிவித்துள்ளதாக ஊர்ஜிதம் செய்யப்படாத தகவலொன்று தெரிவிக்கிறது.

– எஸ்ஸார்

# காரைநகரில் துப்பாக்கிச்சூட்டுக்கு குழந்தை பலி!

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ் குடாநாட்டுப் பகுதிகளில் சுற்றிவளைப்புகள், திடீர்கைதுகள் மற்றும் இராணுவத்தினரின் வீதிச்சோதனை கெடுபிடிகளுக்கு மேலாக மோட்டார் சைக்கிள் பிரிவினரின் அடாவடித்தனங்களும் இப்போது நடைபெறுவதாகப் பொதுமக்கள் முறையிட்டுள்ளார்கள்.

காரைநகரைச் சேர்ந்த இராணுவ முகாம் வீரர்களே இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களது தறிகெட்ட நடவடிக்கைகளினால் இதுவரையில் அப்பாவிகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு வேளைகளில் 6 அல்லது 7 மணிக்கு சிலவேளைகளில் 10, 11 மணிக்கு காரைநகரில் இருந்து மோட்டார் சைக்கிளில் படுவேகத்தில் வருகின்ற இரண்டு இராணுவ வீரர்கள் ஊர்மனைகளுக்கு ஊடாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டு போவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

சில வாரங்களுக்கு முதல், முதல் தடைவையாக காரைநகரிலிருந்து பாலம் வழியாக வந்து மூளாயில் ஆஸ்பத்திரிக்குச் சென்று பொன்னாலை கிருஷ்ணர் கோவில் ஊடாகத் திரும்பி காரைநகர் சென்றுள்ளனர். இவர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தில் இரு அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர்.

ஒன்றிரண்டு வாரங்களின் பின்னர் மீண்டும் வந்த இவர்களது வெறித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்திற்குத் தனது வீட்டில் பால் கறந்துகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இறந்துள்ளார்.

கடந்த வாரம் மீண்டும் வந்த இவர்களது துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பொன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவரான வரதராஜா என்பவரின் மூன்று வயதுக் குழந்தை பலியாகியுள்ளது.

இந்த மோட்டார் சைக்கிள் துப்பாக்கித்தாரர்கள் எந்த நேரம் தோன்றுவார்களோ யார் யார் பலியாகப் போகிறார்களோ என்று இப்பகுதி மக்கள் மாலையாகியதும் பயப்பீதியுடனேயே வாழ்கின்றனர்.

## திருமலை:
# அடையாள அட்டை புதுப்பிப்பு

திருகோணமலை நகருக்குள் புலிகள் ஊடுருவி விடாதபடி பாதுகாப்புப் பிரிவினர் தங்கள் நடவடிக்கையைத் தீவிரப் படுத்தியுள்ளனர். அண்மைக்காலங்களில் இடம் பெற்ற கிரனைட் வீச்சுக்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சோதனைச்சாவடிகளின் சோதனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவராகத் தீவிர பரிசோதனைக்குள்ளாக் கப்படுகிறார்கள். இளம்பராயத்தினர் விஷேடகண்காணிப்புக்குள்ளாகிறார்கள். திடீர் திடீரென வீதிகள் மறிக்கப்பட்டு வருவோர் போவோர் ஒன்று திரட்டி சோதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள். இதனால் குறித்த நேரத்தில் தமது பணிகளை முடிக்க முடியாத நிலையும் பொதுமக்களுக்கு ஏற்படுகிறது.

நகருக்குள் நுழைகின்ற வாகனங்கள் அணுஅணுவாகப் பரிசோதிக்கப்பட்ட பின்பே அனுமதிக்கப்படுகின்றன. சகல வாகனங்களின் இலக்கங்களும் பதிவு செய்யப்படுகின்றன. அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் வெளிநாட்டு அமைப்புக்கள் என்பவற்றைச் சேர்ந்த வாகனங்களுக்கும் இதே முறைதான் கடைப்பிடிக்கப்படுகின்றது.

குடியிருப்புக்களு அடிக்கடி சுற்றி வளைக்கப்படுகின்றன. வீடுகள் கவனமாகச்சோதனையிடப்படுவதோடு வீட்டிலுள்ளோர் அனைவரும் பொது இடங்களுக்கு அழைக்கப்பட்டு முகமூடிகள் முன் நிறுத்தப்படுகிறார்கள்.

பாதுகாப்பு நடவடிக்கைகளின் பிரதான அங்கமாக இராணுவத்தினரால் வழங்கப்பட்ட சகல விஷேட அடையாள அட்டைகளும் புதுப்பிக்கப்பட உள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அடையாள அட்டைகளில் சிதைவுகள், மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாமென இராணுவம் கருதுவதாகவும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

பொலிஸாரின் வீதித்தடைச்சுற்றிவளைப் புகளில் மாட்டிக்கொள்பவர்கள் அநேகமாக பெண்களும், நடுத்தர வயதைக் கடந்தோரும்தான். இளைஞர்கள், குறிப்பாக மாணவர்கள் பொலிஸாரின் நடமாட்டத்தை வைத்தே எந்த வீதி திடீர்த் தடைக்கு உள்ளாக்கப்பட இருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டு அந்த வீதியைத் தவிர்த்துத் தங்கள் பயணங்களைத் தொடர்கின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சம்தான்.

*விவேகி*

# ஆயுதக்கிடங்கு எனக்கூறி கொட்டாஞ்சேனையில் லொட்ஜ்தகர்ப்பு!

கடந்த செப்டம்பர் 13ம் திகதியன்று கொட்டாஞ்சேனை ஜெம்பட்டா தெருவில் உள்ள லொட்ஜ் ஒன்று பொலிஸாரினால் தரைமட்டமாக இடிக்கப்பட்டது.

அந்த லொட்ஜிலிருந்து இரண்டு கிரனைட்டுகளை தாம் கண்டெடுத்ததாகவும் மேலதிகமாக அங்கு ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என்பதைத் தேடுவதற்காகவே அவ்வாறு இடித்தோம் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். ஆனால் சம்பவ தினத்தன்று அந்த லொட்ஜில் இருந்த நடுத்தர வயதுடைய பெண்ணொருவர் சரிநிகரிடம் இதுபற்றி தெரிவித்த போது அன்றைய தினம் திடீரென்று பஜிரோவில் வந்த பொலிஸார் குபுகுபுவென உள்ளே புகுந்து எல்லோரையும் அப்படியே இருக்கச் சொல்லிவிட்டு குறிப்பிட்ட ஒரு இடத்துக்குச் சென்று அங்கிருந்தோரை வெளியே போய் இருக்கச் சொல்லிவிட்டு பின்னர் மீண்டும் வெளியே சத்தம் போட்டுக்கொண்டு வந்ததாகவும் "கிரனைட் மறைத்து வைத்திருக்கிறீர்கள்..! உங்களைக் கொல்ல வேண்டும்!" எனக் கத்தியதாகவும் கூறினார். அதே நேரத்தில் உள்ளேயிருந்த அனைவரையும் தங்களது பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு ஓடும்படி கூறவே அங்கிருந்த எல்லோரும் எடுக்கக்கூடிய தமது பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியே வந்து பாதையில் போக்கிட மற்று நின்றதாகவும் கூறினார்.

மிகுந்த துயரங்களின் மத்தியில் இடம்பெயர்ந்து லொட்ஜ் வாழ்க்கையை அனுபவித்து வந்த இவர்களின் பல உடமைகள் கண்முன்னாலேயே கொள்ளை போயின. லொட்ஜை இடிப்பதற்கென கொச்சிக்கடையைச் சேர்ந்த போதைவஸ்து கும்பலையும் மற்றும் வேறு காடையர்களையுமே பொலிஸார் பயன்படுத்தியுள்ளனர். உள்ளேயிருந்த தளபாடங்கள், டி.வி, காற்றாடி, தண்ணீர் இறுக்கும் இயந்திரம், உட்பட பல மரச்சாமான்களையும் பொலிஸாரின் கண் முன்னாலேயே காடையர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

ஜெம்பட்டா வீதியிலுள்ள "செல்லையா" தோட்டத்தைச் சேர்ந்த சண்டியர்களாலேயே அதிகளவு பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டதாகப்பின்னர் தெரியவந்தது. இத்தோட்டத்துக்கு 15ம் திகதியன்று மாலை பொலிஸார் போய், லொட்ஜிலிருந்து எடுத்துச் சென்ற பொருட்களை திருப்பிக் கொண்டு வந்து கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கும்படி சத்தமிட்டுச் சென்றுள்ளதாகவும் தெரிகிறது. ஆனாலும் அத்தனை பெரிய அந்த லொட்ஜின் (பழமைவாய்ந்த கட்டிடம்) பெரும்பகுதி ஒரே நாளில் தரைமட்டமாக இடிக்கப்பட்டது.

இது பற்றி பல கதைகள் நிலவுகின்றன. குறிப்பிட்ட லொட்ஜ் கட்டிடம் இன்னொருவருக்கு தேவைப்பட்டதாகவும் அவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த "புலி" நாடகத்தை நடத்தி முடித்துள்ளதாகவும் ஒரு கதை அடிபடுகிறது.

ஆனால் கொழும்பு வரும் வட கிழக்கு தமிழ் மக்கள் போகிடமற்று ஆங்காங்கு தங்கியிருக்கும் வேளை அவர்களை இம்சித்து கலைக்கும் முயற்சிகளில் ஒன்றே இது வென்றும் நம்பத் தோன்றுகிறது.

கொழும்பு லொட்ஜ்கள் எந்நேரமும் படையினரால் சோதனைக்குள்ளாவதும் அங்கிருப்போர் கைது செய்யப்படுவதும், கடத்தப்படுவதும், லஞ்சம் வாங்கப்படுவதும் போன்ற பல சம்பவங்கள் இதுவரை நடந்து வந்துள்ளதுடன் சூரியக்கதிர் தாக்குதல் காலத்தில் பல லொட்ஜ்கள் இழுத்து மூடப்பட்டதும் அறிந்ததே. இன்றும் பல லொட்ஜ்களில் வதிந்திருப்போரை பதிவு செய்வதற்கும் பொலிஸார் மறுத்து வரும் சம்பவங்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அப்படிப் பதிவு செய்யாத ஒன்றே இவர்களுக்கு கைது செய்வதற்கு போதுமான காரணம் என்பதுவும் கவனிக்கத்தக்கது.

கொட்டாஞ்சேனை லொட்ஜில் அகப்பட்ட கிரனைட்டுகள் இரண்டும் புலிகளது என்று சொல்லப்பட்டாலும் அங்கிருந்து எடுத்ததற்கான கண்ணால்கண்ட சாட்சிகள் பொலிஸாரைத்தவிர வேறெவரும் இல்லை. கிரனைட் கண்டெடுக்கப்பட்ட போது லொட்ஜிலிருந்த பல தமிழ் இளைஞர்கள் எவரும் விசாரணைக்காகக் கூட கைது செய்யப்படாதது ஆச்சரியத்தைத் தரும் விடயம்.

மேலும் குறிப்பிட்ட அந்த பகுதியில் (கொச்சிக்கடையில்) இரு கிரனைட்டுக்கள் எடுப்பது என்பது கூட கடினமான காரியமுமல்ல. ஜெம்பட்டா வீதி பாதாள உலக கோஷ்டி சண்டைக்குப் பேர் போன இடம். அங்கு கிரனைட் மட்டுமல்ல பல புதிய ஆயுதங்கள் சாதாரணமாக பாவிக்கப்பட்டு வருவதும் பலர் அறிந்த விடயம். லொட்ஜ் உடைப்புக்கு இரு தினங்களுக்கு முன் அதாவது 11ம் திகதி கூட ஜெம்பட்டா வீதியில் கோட் சிவா கோஷ்டிக்கும், கனி கோஷ்டிக்கும் இடையில் நடந்த சண்டையின் காரணமாக விச்சித்திரா ஹோட்டலில்வைத்து கோட் சிவா கோஷ்டியினரால் அருணா என்றழைக்கப்படும் அருணாசலம் (வயது 20) தலையில் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டார். சரி அப்படியே புலியாலேயே வைக்கப்பட்ட கிரனைட்டுகளாக இருந்தால் கூட ஒரு லொட்ஜை தரை மட்டமாக்கி அழிப்பதற்கான என்ன நியாயமான காரணம் இருக்கிறது? தரையில் வைக்கப்படுள்ளது என நம்பினால் தரையை தோண்ட வேண்டியது தானே? இடிக்கப்பட்டுள்ள முறையை நேரில் கண்டோருக்கு ஏன் தரையைத் தோண்டாமல் விட்டுள்ளனர் என்ற கேள்வி நிச்சயம் எழும்.

1987-1989 பகுதியில் தென்னிலங்கையில் பயங்கரவாதம் என்ற பேரில் பல இளைஞர்கள் கொல்லப்பட்டனர் அரசியற் தலைவர்களின் தனிப்பட்ட விரோதங்கள் கூட 'பயங்கரவாத அழிப்பு' என்ற பேரில் மேற்கொள்ளப்பட்ட. அதன் போதும் இப்படியான பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. பிரேமதாசவின் அந்த ஆட்சிக்காலத்தை விமர்சித்து வாக்கு கேட்டு பதவிக்க வந்த சந்திரிகா அரசாங்கம் இன்று தமிழ் மக்களுக்கெதிராக பிரேமதாச பாணியைக் கையாளத் தொடங்கிருக்கிறது என்று சொல்லலாமா?

என்.எஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பொ.ஐ.மு பயங்கரவாதம்!

நாசமறுப்பான்

''ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் அரைச்சர்வாதிகாரத்தில் இருந்து பூரண ஜனநாயகத்திற்கு நாட்டை அடிப்படையாக மாற்றிய சில அரசாங்கங்களுள் நாமும் ஒன்று'' என்று இந்திய ஃபுரன்ட் லைன் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் போது ஜனாதிபதி அவர்கள் கூறிய வரிகள் இலங்கைக்கு வந்து சேர்ந்தபோது நீர்கொழும்பில் ஆறு ஐ.தே.க. உறுப்பினர்கள் பொ.ஐ.மு. இனைச்சேர்ந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படும் செய்தியும் வெளிவந்திருந்தது. நீர்கொழும்பு பிரதேசத்தில் கடந்த பல மாதங்களாக தொடர்ச்சியாக நடந்து வரும்பொ.ஐ.மு. - ஐ.தே.க. இழுபறியின் தொடர்ச்சியாகவே இப்படுகொலைகள் நடந்துள்ளன என்று கூறப்படுகிறது. பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்த பின் கட்டுநாயக்கா விமான நிலைய 'டக்சி' சேவை தொடர்பாக இக்கட்சியினர்க்கிடையில் நடந்து வந்த இழுபறிகள் அடிக்கடி சண்டைகளாக வெடித்ததும், விமான நிலையத்தில் குண்டுகள் வைக்கும் முயற்சிகள் நடந்ததும், அண்மையில் ஐ.தே.கவின் 50வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படவிருந்த சந்தர்ப்பத்தில் சூட்டுச்சம்பவம் ஒன்று நடந்து இரு கட்சிகள் தரப்பிலும் ஒவ்வொருவர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. இம்முறை ஐ.தே.கவினர் வந்த வாகனத்துக்கு கிரனைட் வீசப்பட்டு, அதன் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'பயங்கரவாதிகள்' என்று வர்ணிக்கப் படுபவர்கள் பாணியில் வாகனம் கடத்திவரப்பட்டு காத்திருந்து தாக்குதல் நடத்தியபின் தப்பியோடியுள்ள இந்த நடவடிக்கை குறித்து பலரும் 'அதிர்ச்சி' வெளியிட்டிருக்கின்றனர். இலங்கையின் ஜனநாயகத் தன்மைக்கு இது ஒரு சவால் என்றும் 'அரசியலை குற்றவியல் தன்மையானதாக்கும் ஒரு செயல்என்றும்' வார இதழ் ஒன்று எழுதியுள்ளது.

ஆனால் இலங்கையின் சமீபகால வரலாற்றைத் தொடர்சியாக அவதானித்து வருபவர்கட்கு இது ஒன்றும் திடீரென உருவாகிவிட்ட ஒரு விவகாரம் அல்ல, மாறாக உள்ளார்ந்த ரீதியாக வளர்ந்து வரும் இலங்கை அரசியலின் ஒரு அம்சமே இவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்வதில் சிரமம் இல்லை. குறிப்பாக பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முந்திய ஆண்டுகளில் அரசியல் எவ்வளவு தூரம் படுகொலைத்தன்மை வாய்ந்ததாக இருந்தது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. வீதிக்கு வீதி டயர் போட்டு எரிக்கப்பட்ட சடலங்கள், நாள் தோறும் ஆட்கடத்தல்கள், காணாமல் போதல்கள், சடலங்கள் கரையொதுங்குதல் என்று முழு நாடுமே கொலைக்களமோ என நினைவூட்டும் நிலை உருவாகியிருந்தது. ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் மட்டும் அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்டோர் (தென்னிலங்கையில்) கொல்லப்பட்டோ, காணாமலோ போயிருந்தனர். இன்றைய ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் எம்பிலிப்பிட்டியவில் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதும், புதையுண்டிருந்த சிதை;த சடலங்களின் பகுதிகள் மீட்கப்பட்டதும் கூட யாவரும் அறிந்த ஒரு விடயம்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது நாட்டில் படுகொலை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பது என்பதை தனது பல்வேறு இலட்சியங்களில் ஒன்றாக முன்வைத்திருந்தது. குற்றவாளிகளைத் தேடிப்பிடித்து தண்டிப்பது, பாதாள உலகத்தவர்களுக்கும் அரசியல்வாதிகட்குமிடையிலான தொடர்புகளை வெளிக்கொணர்வது என்பதெல்லாம் அதன் பிரபல பிரச்சாரங்களாக இருந்தன. ஆயினும், ஜனாதிபதி அவர்களிடமும் சரி, இந்த அரசாங்கத்திடமும் சரி, இருந்த ஆரம்ப சூரத்தனம் விரைவிலேயே காணாமல் போய்விட்டது. படுகொலையை - அரசியல் முரண்பாட்டை கொலைவழியாக தீர்ப்பது என்பதை எதிர்த்த அரசாங்கம், அதைக்கண்டிக்கும் அரசாங்கமாக மாறி அதன்பின், அது தவிர்க்க முடியாத ஒன்றோ என்று சந்தேகப்படத் தொடங்கி, ஈற்றில்தானும் அதைச்செய்யலாமா என்று சிந்திக்கும் நிலைக்கு 'வளர்ந்து' விட்டிருக்கிறது. எதிர்க்கட்சியினரின் கடந்தகால நடவடிக்கைகளை விசாரணைக் கமிஷன் போட்டு ஆராய்வதில் அக்கறை காட்டிய போதும், தனது அரசியலுக்கு வன்முறையை சாதகமாகப் பயன்படுத்துவது தவறல்ல என்ற முடிவுக்குப் படிப்படியாக அது வந்து சேர்ந்து கொண்டது.

''நாம் எப்போதும் சரியானவர்கள்; ஏனென்றால்; நாம் 'அரைச்சர்வாதிகார' ஐ.தே.கவை எதிர்க்கிறோம். நாம் ஜனநாயகத்தைக் காப்பாற்ற விரும்புகிறோம். நாம் சமாதானத்தை நேசிக்கிறோம். நாட்டிலே அமைதி உருவாகப் பாடுபடுகிறோம்; எனவே நாம் எது செய்தாலும் அது மக்களின் நன்மைக்காக செய்யப்படுபவையே...'' என்ற விதத்திலான தர்க்கத்தின் பொறிக்குள் இந்த அரசாங்கமும் தன்னை விரும்பியே விழுத்திக் கொண்டது. நான் 'விரும்பி' என்று சொல்வது காரணத்தோடு தான். அரசின் தன்மையில் ஒரு அங்கமாக வளர்ந்திருந்த வன்முறைச் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக அதன் அடிப்படைகளைத் தகர்க்க முயலாமல், அப்போக்குடன் சமரசம் செய்து கொண்டு 'நல்ல அரசாங்கம்' நடாத்த விரும்பியதன் காரணமாக விரைவிலேயே தன்னைத் தற்காத்துக்கொள்ளும் நெருக்கடி இந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்டு விட்டது. ஜனாதிபதிக்கு ஜனாதிபதிப் பதவியின் அதிகாரமும், அரசாங்கத்திற்கு முப்படைகளின் ஆயுதபலமும் தம்மைக் காத்துக் கொள்ள அவசியமானவையாகிவிட்டன. இதன் விளைவுதான் எம்பிலிப்பிட்டிய புதை குழிவிடயங்கள் முதல் அண்மையில் வெளிவந்த புல்லர்ஸ் வீதிப் படுகொலை விவகாரங்கள் வரை எல்லாமே பழங்கதைகளாகிப் போய் விட்டது ஆகும். இவையனைத்திற்கும் மேலான ஒன்றுதான் 'சமாதானத்திற்கான யுத்தம் புரிய வேண்டும்' என்ற கோட்பாட்டின் உருவாக்கம். 'பிரேமதாசகால நடைமுறைகளை நாமும் கடைப்பிடிக்க வேண்டாமா?'' என்று ஜனாதிபதி மிரட்டவும் தொழிற்சங்கப் போராட்டங்களை துப்பாக்கி முனையில் நசுக்கவும், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை வன்முறை மூலம் பறிக்க முனையவும் முடிகின்ற ஒரு நிலைமையை 'ஜனநாயகத்தை மௌனப் புரட்சி மூலம் மீட்டெடுத்த இந்த அரசாங்கம் உருவாக்கித் தந்துள்ளது. இந்தச் சூழலில் நீர்கொழும்பு படுகொலைகள் போன்றவை வெறுமனே 'டாக்சி' சேவை சண்டையொன்று என்பதற்காக மட்டுமோ அல்லது இரு கட்சி ஆதரவாளர்கட்கிடையில் நடந்த வெறும்போட்டிச் சண்டையின் வெளிப்பாடாக மட்டுமோ கருதப்படக்கூடியவை அல்ல. இவை வெறும் அங்கொன்று இங்கொன்றாக நடந்த/நடக்கின்ற சம்பவங்கள் அல்ல. மாறாக, இவை இன்றைய அரசியற்போக்கின் அதன் வன்முறைத் தன்மையின் துல்லியமான வெளிப்பாடுகள் ஆகும். குற்றவாளிகள் ஆட்சியாளர்களின் சகாக்களாக இருக்கும் பட்சத்தில், கண்டும் காணாமல் இருப்பதும், எதிராளிகள் என்றால், அதை ஊதிப்பெருப்பிப்பதும் அரசாங்க நடைமுறையாக இப்போது வெளிப்படையாக மாறிவிட்டது. இந்த நிலையில் அரசாங்கக் கட்சியினர் தாம் நினைத்தபாட்டிற்கு வன்முறையில் ஈடுபடுவதில் தயக்கம் காட்ட வேண்டிய அவசியம் தான் என்ன?

கடந்த ஆண்டு பெந்தோட்டையில் நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களது ஒன்றியத்தின் (பி.ல.ணு. அவிஞுன) கூட்டத்தின் மீது வன்முறையை பிரயோகித்த, யுக்திய பத்திரிகை ஆசிரியரைத் தாக்கியவர்களைப் பின் நின்று இயக்கியவர்கள் ஆளுங்கட்சியின் பெரும் புள்ளிகள் அல்லவா? சண்டே லீடர் பத்திரிகையைச் சேர்ந்தவர்களைத் தாக்கியவர்களுக்கும் அரசாங்க உயர் மட்டத்தினர்க்கும் சம்பந்தம் இல்லையா? இந்த உயர் மட்டத்தினர் அரசாங்கத்தின் ஆதரவு பெற்றிருப்பதாலும், சட்டத்திலுள்ள ஓட்டைகளின் வசதியாலும் தப்பிப் பிழைத்திருக்கவில்லையா? ஏன் ஜனாதிபதி பதவியின் பாதுகாப்பு இல்லாதிருப்பின் அவர் மீதே 'கிரிமினல் குற்ற வழக்கு தாக்குதல் செய்ய முடியும்' என்று வாசுதேவவே கூறியிருந்தாரே.... அண்மையில் கம்பஹா மாவட்டத்தில் பத்தர் கெதர என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா ஐ.தே.க.மீதான வன்முறையை நியாயப்படுத்திப் பேசியதாக பத்திரிகைகள் கூறிப்பிட்டு இருந்தன. இவையெல்லாம் மீள வளர்ந்து வந்த அரசியலின் வன்முறைப் போக்கிற்கு சில உதாரணங்கள். இவற்றினால் உற்சாகமூட்டப்பட்டவர்கள் இப்போது நீர்கொழும்பில் 'பயங்கரவாதி'களின் பாணியில் செயற்பட்டிருக்கிறார்கள்.

ஆக, இந்தப் படுகொலைகளின் குற்றவாளிகளைத் தேடிப்பிடித்து விசாரிப்பது போன்ற நடைமுறைகள் எவ்வளவுதான் வெற்றி பெற்ற போதும், மொத்தமான 'வன்முறை அரசியற் கோட்பாட்டி'லிருந்து அரசாங்கம் தன்னை விடுவித்துக் கொள்ளாதாவரை ஒரு போதும் இந்நிலைமைகளை மாற்றிவிட முடியாது.

கொழும்பில் இது போன்ற பல சம்பவங்கள் நடந்துள்ளன. டக்ளஸ் தேவானந்த அவர்கள் மீது நடந்த தாக்குதல் போன்றவை 'புலிகளின் முயற்சி' என்று இலேசாகத் தட்டிக் கழிக்கப்பட்டு விட்டன. பெரும்பாலான இத்தகைய 'தட்டிக் கழிப்புக்கள்' வேறுவிதமான 'அரசியல் குண்டர்படை'களின் உருவாக்கத்திற்கு உரமூட்டி விடும் என்பதை மறந்து விட முடியாது. ஏற்கெனவே ஜே.வி.பியின் பெயரால் 'கறுப்பு பூனை' போன்ற குழுக்கள் நடாத்திய படுகொலைகள் பற்றித் தெரிந்தவர்கள் வசதியான 'புலிவாய்ப்பாட்டில்' நம்பிக்கை வைப்பது புத்திசாலித்தனமானதல்ல. நாரஹன்பிட்டி விகாரையுள் ஆயுதங்கள் மீட்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டு கொழும்பிலிருந்து புலிகளின் தொடர்பாளராக செயற்பட்டவர் என்று கைது செய்யப்பட்ட தர்மலிங்கம் அவர்கள் இப்போது எந்தக் குற்றமுமற்றவர் என விடுவிக்கப்பட்டுள்ளார்; வவுனியாவில் வாகனத்துள் தடைசெய்யப்பட்ட பொருட்களும் காசும் கடத்திச் சென்றார்கள் என்று கைது செய்யப்பட்ட மதகுருமார் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்டுள்ளார். யாரையாவது குற்றம் சுமத்த வேண்டுமென்பதற்காக புகழ்பெற்ற மர்மநாவல் எழுத்தாளர்களை விடச் சிறந்த கற்பனை வளத்துடன் சோடிக்கும் பொலிஸ் படையினரை இந்த அரசு தமது பொக்கிசமாகக் கொண்டிருக்கிறது. வடக்கிலே நடப்பது என்ன என்பதை ஜனாதிபதிக்கு கூட தெரிவிக்காமல் பொய் கூறும் படையினரையும் (வட மாகாணத்தில் அரச கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில 60 -70% மக்கள் இருக்கிறார்கள் என்றும் நாம் கிளிநொச்சியை நோக்கி முன்னேறியுள்ளோம் என்றும் ஜனாதிபதி ஃபுரன்ற் லைன் பேட்டியில் தெரிவிக்கிறார்) சட்டரீதியாக ஏற்கப்பட்ட உரிமைகளைக் கூட அமுலாக்க மறுக்கும் அரச அதிகாரிகள் கூட்டத்தையும் கொண்டதாக இருக்கிறது இந்த அரசு.

ஆக, அரசின் இந்த தன்மைகளது 'வன்முறை அம்சங்கள்' அகற்றப்படுவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதவரை அரசாங்கம் இத்தகைய வன்முறைகள் வெடிப்பதையும் மாற்ற முடியும் என்பது வெறும் கற்பனையே.

வடக்கு கிழக்கு அரசியலுக்கு வன்முறையையும், மற்ற இடங்களுக்கு வேறுவிதமாகவும் அணுகுமுறையை விரும்பும் ஒவ்வொருவரும் இந்த விடயத்தை கவனித்தாக வேண்டும்.

நீர்கொழும்பு வெறும் உதாரணம் மட்டுமே. உள்ளே கனன்று கொண்டிருக்கும் வன்முறைத்தணலை தணிப்பதில் அக்கறை எடுக்கப்படாதவரை இத்தகைய வன்முறைகள் தவிர்க்கப்படுவது சாத்தியம் இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாய்ச் சொல்லில் வீரரடி!

*அமைச்சர் அஷ்ரஃப் சொன்னது:-*

✱ ''யார் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அம்பாறை மாவட்டத்தில் 42 மைல் நீளமான முஸ்லிம் அரசியல் அலகு அமையத்தான் போகிறது. அது தமிழர்களை ஆட்டிப்படைக்கும் அலகாக இருக்கமாட்டாது''

*கல்முனை வலய தமிழ் மொழித் தின விழாவில்...*
*(13.06.1996 - சம்மாந்துறை) தினகரன்*

✱ ''தமிழருக்கு என்றொரு அலகு, முஸ்லிம்களுக்கு என்றொரு அலகு வடகிழக்கில் ஏலவே தீர்மானிக்கப் பட்டவை. எனினும், முஸ்லிம் அரசியல் அலகின் நீளம், உயரம், அகலத்தைப் பற்றி சிந்திக்கிறோம்''

*கல்முனை மக்களுக்கு வீட மைப்பு நன்கொடை வழங்கு கையில் (12.08.96 கல்முனை நகர மண்டபம்) தினகரன்*

✱ ''அம்பாறை தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லையென்றால் என்னிடம் யாரும் கேட்க முடியாது. இந்தப் பதவியைத்தந்த ஜனாதிபதி மட்டும்தான் கேட்கலாம்.''

*- கல்முனை நகரமண்டபத்தில் - தினகரன்*

✱ ''அம்பாறை மாவட்டத்திலுள்ள 17%மான தமிழ் மக்களின் எந்தவொரு நியாயமான கோரிக்கைக்கும் எனது அமைச்சினால் அநியாயம் நடைபெற வில்லை. நண்பர் மொகைதீன் எம்.பி. தமிழ் மக்களின் பிரதிநிதியாகவுள்ளார். தமிழ் மக்கள் நல்லவர்கள் பயங்கரவாதிகள்தான் கெட்டவர்கள்''

*நிந்தவூர் மாவட்ட வைத்தியசா லையில் -(16.08.1996 ) வீரகேசரி*

✱ ''எந்த ஒரு தமிழ் மகனாவது உதவி கேட்டு வந்து நான் மறுத்ததாக வரலாறு இல்லை. நீதியாகவே நடக்கிறேன்''

*-நிந்தவூரில் வீரகேசரி*

✱ ''முகைதீன் எம்.பி.யின் வரவுசெல வுத்திட்ட நிதியில் கணிசமானளவு தமிழ்ப்பகுதிக்கே செலவிட்டுள்ளார். சம்மாந்துறையில் தமிழ் மக்களுக்கென வீடமைப்பு திட்டத்தையும் அறிமுகப் படுத்தவுள்ளார்....''

*கல்முனையில்20.08.1996 -தினகரன்*

**அப்படியாயின் அமைச்சர் அவர்களால் இவற்றிற்குப் பதிலளிக்க முடியுமா?**

✱ அம்பாறை மாவட்டத்திற்கு வந்த 6000 வீடமைப்புத் திட்டத்தில் 1000 வீடுகள் மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் தமிழர்களின் விகிதாசாரம் புறக்கணிக்கப்படவில்லையா?

✱ மீள் குடியேற்ற மாதிரிக் கிராம திறப்பு விழாவில் கூறியது போன்று தமிழ்க் கிராமங்களில் அபிவிருத்தியைக் காண வில்லையே ஏன்? (உ-ம்) திராய்க்கேணி.

✱ மாதிரிக் கிராமங்களின் வணக்க ஸ்தலங்களுக்கு ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு நியாயமானதுதானா?

வளத்தாப்பிட்டிக்கு மட்டும் ஒரு சிறு கோயில் ஏனைய 3 கிராமங்களுக்கு ஒன்றுமே இல்லை. (விபரத்திற்கு அட்டவணையைப்பார்க்க)

✱ முகைதீன் எம்.பி.யின் நிதி ஒதுக்கீட்டைக் காட்ட முடியமா? கணிசமானளவ என்றால் ஆகக்குறைந்தளவு எனபதாகுமா?

✱ துறைமுக அதிகார சபையில் இலிகிதர் காவலாளி என்று எத்தனை தமிழருக்கு தொழில் கொடுத்துள்ளீர்கள்?

✱ ஆஸ்பத்திரிகளுக்கு பௌசியை அழைத்துவந்தபோது தமிழ் பிரதேச ஆஸ்பத்திரி ஒன்றுக்காவது சென்றீர்களா?

✱ பல வித அபிவிருத்தியில் தமிழ்ப் பகுதி புறக்கணிக்கப்படவில்லையா?

ஒரு உதாரணம்:

**நெதர்லாந்து உதவியுடன் புனர்வாழ்வு அமைச்சு அம்பாறை மாவட்டத்தில் ஒதுக்கிய விகிதாசாரம்:**

கிழக்கில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையேயான உறவுகள் மெல்லமெல்ல சுமுகமாகி வரும் இவ்வேளையில் இவ்வாறான நடவடிக்கைகள் அதனை முட்டுக்கட்டை போட்டு நிறுத்தி விடும். வெறும் வாய்ப்பேச்சு எதையும் சாதித்து விடாது.

கிழக்கில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களுக்குமிடையையேயான உறவுகள் மெல்ல மெல்ல சுமுகமாகி வருகிறது. இவ்வாறான நடவடிக்கைகள் அதனை முட்டுக்கட்டை போட்டு நிறுத்தி விடும். வெறும் வாய்பேச்சு எதையும் சாதித்து விடாது.

**மீள் குடியேற்ற கிராமங்களில் வணக்கஸ்தலங்களுக்கு ஒதுக்கப்பட்டவை**

| கிராமத்தின் பெயர் | 1ம் கட்ட கொடுப்பனவு | 2ம் கட்ட கொடுப்பனவு |
|---|---|---|
| 1. ஆலிம் நகர் இலுக்குச் சேனை | 3,400,000 | 5,900,000 |
| 2. ஹுசைனியா நகர் | 9,950,000 | 300,000 |
| 3. மீராநகர் (புட்டம்பை) | 10,500,000 | 3,700,000 |
| 4. ஹிஜ்ரா புரம் | 300,000 | ---- |
| 5.வளத்தாப்பிட்டி | 250,000 | ----- |
| 6. கண்ணகி கிராமம் | ------ | ------ |
| 7. இன்ஸ்பெக்டர் ஏற்றம் | ------ | ------- |
| 8. திராய்க்கேணி | ------ | -------- |

| முஸ்லிம்கள் | ரூபா | தமிழர் | ரூபா | சிங்களவர் | ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. பொத்துவில் | 3,400,000 | ஆலையடிவேம்பு | 1,420,000 | அம்பாறை | 3,900,000 |
| 2. கல்முனை | 7,047,000 | திருக்கோயில் | 1,000,000 | வாகுகலை | 980,000 |
| 3. நிந்தவூர் | 2,928,000 | காரைதீவு | 1,750,000 | | |
| 4. சம்மாந்துறை | 3,550,000 | கல்முனை | 2,550,000 | | |
| 5. அட்டாளைச சேனை | 3,700,000 | சம்மாந்துறை | 1,805,000 | | |
| 6.அக்கரைப்பற்று | 4,400,000 | | | | |
| மொத்தம் | 25,025,000 | | 8,525,000 | | 4,880,000 |

*- வி.ரி.சகாதேவராஜா*

# ஆதரவு யாருக்கு?

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்பிரதேசங்களில் யார் கூடிய ஆதரவுள்ளவர் என்பதனை நிலைநாட்டுவதற்கான போட்டியில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவும், அலிசாஹிர் மௌலானாவும் இறங்கியுள்ளனர். வீதிகளை நிர்மாணித்தல், உபதபாலகங்களைத் திறந்து வைத்தல், தொலைபேசி இணைப்புக்களை வழங்குதல் என ஹிஸ்புல்லா தனது ஆதரவினைத் திரட்ட முற்படுகிற வேளை, அலிசாஹிர் மௌலானா அவர்கள் விஷப் பாம்புக் கண்காட்சி, இசை நிகழ்ச்சி என்று ஒழுங்கு செய்து ஆதரவினைத்திரட்ட முற்பட்டு வருகிறார். இவர் ஒழுங்கு செய்யும் இசை நிகழ்ச்சிகளின் இடையிடையே அலிசாஹிர் மௌலானாவின் அழைப்பின் பேரிலேயே தாம் இங்கு வந்ததாக அவர்கள் கூறுவர். ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்வார்கள். இந்த இருதரப்பு ஆதரவாளர் ஆரவாரங்களிடையே முஸ்லிம்களின் கட்டிய கோவணமும் களவாடப்பட்டுக் கொண்டிருப்பதை யாராவது உணர்வார்களா?

*அஹமட் ஹிஸாம்.*

# தொலைபேசிக்கு போசாக்கு தேவை!

தபால், தந்தி, தொலைத்தொடர்புகள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களின் பிரதேசமான மட்டக்களப்பு மாவட்டத்திலேயே தொலைபேசிக்கு பாரிய கொடிய வியாதிகள் ஏற்பட்டு அடிக்கடி பாதிப்படைகின்றன. இதற்கு அதிகாரிகள் அசமந்த போக்குகளும் ஒரு காரணமென்று உயர் மட்டத்தில் பேசப்படுகின்றது. குறிப்பாக வாழைச்சேனை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த நிலையத்தின் ஊடாக ஒட்டமாவடி, வாழைச்சேனைப் பிரதேசங்களுக்குள்ளே மட்டுமே பேசமுடியும். அதுவும் வாரத்தில் இரண்டு தடவைகள் இயங்கமறுக்கின்றது. இதற்கு போசாக்கு பற்றாக்குறையென அங்குள்ள அதிகாரிகள் தெரிவிக்கின்ற அதேவேளையில் பிரதியமைச்சர் கவனித்தால் போசாக்கு வழங்க முடியும் என்கிறார்கள். பிரதியமைச்சர் அவர்களே! நினைத்த நேரத்தில் உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளக் கூடிய இந்த யுகத்தில் நாங்களும் நினைத்த நேரத்தில் எங்களுடைய உள்ளூர் பகுதிகளுக்குள்ளேயாவது தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் பரிவர்த்தனை நிலையத்திற்கு போசாக்குள்ள உணவுகளை வழங்குவீர்களா?

*அ.ஹரி*

# சொல்வதைத் தவிர வேறு வழியில்லை..

## அரந்தலாவப் படுகொலை: கறைபடிகிறது...!

கடந்த சில தினங்களுக்கு முன் அம்பாறை மாகோ வீதியில் வைத்து விடுதலைப் புலிகளினால் 11க்கும் மேற்பட்ட அப்பாவி சிங்கள மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டனர். மனிதாபிமானத்தையும், மக்கள் விடுதலைக்காக போராடும் இயக்கங்களின் தார்மீகக்கோட்பாடுகளையும் அப்பாவி மக்கள் மீதான தொடர்ச்சியான படுகொலைகள் சிதைத்து வருகின்றன. அப்பாவி ஏழை சிங்கள மக்கள் மீதான விடுதலைப் புலிகளின் படுகொலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதானது; தமிழ் மக்களுடைய நியாயமான போராட்டத்தை களங்கப்படுத்தும் கறைபடிந்த வரலாற்றை மட்டுமே தருமன்றி, முடிவில் வேறு எதையும் தந்துவிடப்போவதில்லை.

அரச இராணுவ போராட்ட இயக்கங்களின் யுத்த வீறாப்புக்கு மத்தியில் அப்பாவி மக்களின் வாழ்வு இந்த நாட்டில் தொடர்ந்தும் சூதாட்டமாக்கப்படுவது கண்டிக்கப்படவேண்டியது. அது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அரந்தலாவ, அநுராதபுர, திருமலை கல்லாறவ படுகொலைகள் என்றால் என்ன, இலங்கை இராணுவத்தால் அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குமாரபுரம், தங்கவேலாயுதபுரம், கொக்கட்டிச்சோலை, நவாலி, குமுதினிப்படகு படுகொலை என்றால் என்ன, தமிழ் முஸ்லிம் வன்முறைச் சூழலில் எழுந்த இயக்கங்களின் அப்பாவி முஸ்லிம் மக்கள் மீதான படுகொலைகள் என்றால் என்ன, அதன் பின் அப்பாவி தமிழ் மக்களுக்கெதிரான முஸ்லிம்களின் படுகொலைகள் என்றால் என்ன அனைத்தும் எவ்வித நியாயப்படுத்தல்களுக்கும் அப்பால், எவ்வித தயக்கமும் இன்றி, வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவை.

இவ் அப்பாவி மக்கள் மீதான படுகொலைகளை எக்காரணம் கொண்டும் யாரும் நியாயப்படுத்துவது தார்மீகமாகாது! எப்போதும், எங்கேயும், எக்காலத்திலும் இக்கொடூரமிக்க மிலேச்சத்தனமான படுகொலைகள் நன்மைகளைத் தந்து விடப்போவதில்லை. மனிதாபிமானத்தின் மீது இறுதியாக விழுந்து கறைபடிந்த வரலாறாக அரந்தலாவ இரத்த அபிஷேகம் நடந்து நிற்கிறது. சிந்தனை மிக்க, நாகரீகம் வாய்க்கப்பெற்ற மனித சமூகம் வெட்கித் தலைகுனிய வேண்டிய கொடூரமிது!

இப்படுகொலை நடந்த வீதியில் கொழும்பை நோக்கி தமிழ் சகோதரர் ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார். பஸ்ஸினுள் பெரும்பான்மையானோர் முஸ்லிம்கள். இராணுவத் தடைக்குப்பின் பல மணி நேரத்தின் பின் பஸ் இராணுவத்தால் மீண்டும் கொழும்பு நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டது. படுகொலை நடந்த இடத்திலிருந்து பஸ்ஸில் ஒரு முஸ்லிம் வாலிபர் ஏறிக்கொண்டார்.

தான்படுகொலை நடந்த பஸ்ஸில் வந்ததாகவும், நடந்த சம்பவம் பற்றி அவ்வாலிபர் விபரமாக விபரிக்கத் தொடங்கினார். பஸ்ஸிலிருந்தவர்கள் ஆவலுடன் மேலும் மேலும் விபரங்கள் கேட்டுக்கொண்டிருந்தனர்.

பஸ்ஸினுள் பிரயாணம் செய்த தமிழ் சகோதரர்கள் பீதியின் காரணமாக சிங்களப் பிரதேசங்களின் ஊடாக பஸ் செல்லும் போது மிகவும் பயத்துடனும், அச்சத்துடனும் பிரயாணம் செய்ததால் அவ்வாலிபரின் கதை மீது அக்கறைகாட்டவில்லை. சுமார் 50 மைல்களுக்கு மேல் பிரயாணம் செய்து பஸ் பகலுணவுக்காக கடுகண்ணாவை என்ற இடத்தில் நிற்பாட்டப்பட்டது.

அனைவரும் பகலுணவு சாப்பிடுவதற்காக ஹோட்டலுக்குள் சென்று விட்டனர். படுகொலை முயற்சியில் இருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பிய அவ்வாலிபர் மட்டும் பையினுள் பணமில்லாத காரணத்தினால் பஸ்ஸை விட்டு இறங்காமல் பஸ்ஸினுள்ளேயே இருந்தார். பஸ்ஸினுள் பயணம் செய்த தமிழ் சகோதரர் ஒருவர் அவ்வாலிபரின் நிலைமையைப் புரிந்துகொண்டு ஒரு சாப்பாட்டு பார்சலுடனும் ஒரு குளிர்பான போத்தலுடனும் முஸ்லிம் வாலிபர் அருகில் வந்தார். அவரும் சாப்பாட்டைக் கொடுத்து சாப்பிடச்சொன்னார். முஸ்லிம் சகோதரர் வாங்கவில்லை, ''எனக்குப் பசியில்லை'' என்றார். ''இல்லை சாப்பிடுங்கள்'' என தமிழ் சகோதரர் வற்புறுத்தத் தொடங்கினார். முஸ்லிம் வாலிபர் சாப்பாட்டுப் பார்சலை வாங்கி உண்ண ஆரம்பித்தார்.

பகலுணவை முடித்துக் கொண்டு பஸ் புறப்பட்டது. முஸ்லிம் வாலிபருக்கும் பகலுணவு வாங்கிக்கொடுத்தவருக்கு மிடையில் சம்பாஷணை தொடங்கியது.

''நீங்கள் எந்த ஊர், மருதமுனையா?''

''இல்லை, பாண்டிருப்பு - காளி கோயிலடி''

இவ் இரண்டு வசனங்கள் தான் இருவரிடையேயும் நடந்த சம்பாஷணை, மீண்டும் சம்பாஷணை தொடர்வதற்கான சாத்தியங்களை ''பாண்டிருப்பு காளிகோயிலடி'' என்ற பதில் இல்லாமலாக்கிவிட்டது. அவ் முஸ்லிம் வாலிபர் நம்ப முடியாதவர் போல் மிரண்டு நின்றார்.


பாண்டிருப்பு என்ற ஊரின் அடையாளத்தை வைத்துக்கொண்டு தனக்கு பகலுணவும், குளிர்பானமும் வேண்டித் தந்து தன்னை ஆதரித்தவர் ஒரு தமிழ் சகோதரர் என்பதை அவரால் நம்ப முடியவில்லை போலும், அல்லது இந்த பஸ்ஸினுள் இவ்வளவு முஸ்லிம்களுக்கும் என்மீது இல்லாத அக்கறை இவருக்கு ஏற்பட்டதே என்ற தன்னுணர்வும் வெட்கமும் மேலெழுந்ததால் சம்பாஷணை நின்று விட்டது போலும், பஸ் கொழும்பை அடையும் வரை அவர் தமிழ் சகோதரருடன் பேசவில்லை என்பதும், பஸ் கொழும்பை அடைந்தவுடன் நம்ப முடியாத கண்களுடனும், ஆச்சரியம் கலந்த முகபாவத்துடனும் பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்று விட்டார்.


மனிதாபிமானத்தின் கழுத்து நெரிக்கப்பட்டு ஒருபுறம் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் போது இன்னொரு பக்கம் மனிதாபிமானம் துளிர் விட்டுக் கொண்டிருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டாயிற்று.

மனிதாபிமானத்தை அசுர அரக்கர்களாலும், துப்பாக்கிகளாலும், கலவரங்களாலும், வகுப்புவாத பிரச்சாரங்களாலும், படுகொலைகளாலும், முற்று முழுதாக கொல்ல முடியாது என்பதை நமது வாழ்வியில் அனுபவங்களின் ஊடே காண்கின்ற உண்மையாயிற்று.

-அபுநிதால்

# வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக சபை யாருக்காக?





– ச.பாலகிருஷ்ணன்

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தி தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகம் ஏற்படுத்தப்படும் வரை இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தல் வேண்டும் என ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு (EPDP, DPLF, EPRLF, EROS, TELO) அரசைக் கோரியுள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தண்ணம் இருக்கின்றன. இக்கோரிக்கையை வென்றெடுப்பதில் மிக முன்னணியில் முயன்று வருபவர்களாக EPDP, DPLF ஆகியவற்றின் தலைவர்கள் திகழ்கின்றனர். இவ்விரு கட்சிகளுக்கு மட்டுமே பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இருக்கின்றது.

இக்கோரிக்கைப்பற்றி எவ்விதமான பதிலையும் முன்வைக்காத ஜனாதிபதி திடீரென கப்பற்போக்குவரத்து புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரஃப் அவர்களைத் தலைவராகக் கொண்ட இடைக்கால ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை வடகிழக்கு மாகாணங்களுக்கு நியமித்துள்ளார். இதன் செயலாளராக வடகிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு அமைச்சரின் தலைமையின் கீழ் ஒரு ஆளுநர் செயலாளராக செயற்படுவது, அவ்வாளுநர் பதவியின் கௌரவத்தைக் குறைக்கின்றது என ஆளுநர் பொன்சேகா ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியதன் பின் இவர் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவருகின்றது. இவ்விதமான குழுவை அமைத்து அதன் தலைமைப்பதவியை அமைச்சர் அஷ்ரஃப் அவர்களுக்கு வழங்கல் வேண்டும் எனும், ஆலோசனையை அரசுக்கு வழங்கியவர் கலாநிதி நீலன் திருச்செல்வம் எனப் பத்திரிகைகள் கூறுகின்றன. இவரைத் தமது தேசியப் பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி இக்குழுவின் நியமனத்தை நிராகரித்திருக்கின்றது. இக்குழுவின் அதிகாரங்கள் என்ன என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்பு வெளிக்கிளம்பியவுடன் அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் அவசர அவரசமாக தொலைக்காட்சியின் முன் தோன்றி இவ்வமைப்பு இடைக்கால நிர்வாக சபையல்ல என விளக்கம் அளித்துள்ளார். இடைக்கால நிர்வாக சபைக்கான ஒரு கோரிக்கை முன்வைத்திருக்கும் போது அதுபற்றி முடிவு எடுக்காமல் அவசர அவசரமாக இவ்வாறு ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கான தேவை என்ன என்பது ஒரு கேள்வியாக மேலெழுகின்றது. இவ்விவகாரத்தில் பின்வரும் அம்சங்கள் அவதானத்தில் கொள்ளவேண்டியவைகளாகும்.

முதலாவதாக, வடகிழக்கு விவகாரம் தொர்டபாக அரசு இவ்வகையான முடிவுகளை மேற்கொள்ளும் போது குறைந்தது இவ்வரசுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற வட, கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க்கட்சிகளுடனாவது கலந்துரையாடி இணக்கப்பாட்டுடனான ஒரு முடிவை எடுத்திருத்தல் வேண்டும். இப்படிச் செய்திருந்தால் அரசு பல்லின ஜனநாயக மரபுகளைக் கௌரவித்துச் செயற்பட இப்போதாவது முயல்கின்றது என ஓரளவிற்காவது ஆறுதலடையலாம். இன முரண்பாட்டிற்கு அதிகாரப்பங்கீடு தான் தீர்வு என வார்த்தைகளால் கூறிக்கொண்டு நடைமுறையிலுள்ள மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை எல்லாம் ஒன்றின் பின் ஒன்றாக மத்திய அரசாங்கத்திற்கு மாற்றிக்கொண்டு இருக்கும் இவ்வேளையில் ஜனாதிபதியின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் இப்படியான ஒரு குழுவை ஏற்படுத்துவது பெரும் சந்தேகங்களை ஏற்படுத்தவே செய்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர் எதிர்ப்புணர்வுகளுடன் அரசியல் நடாத்தும் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களைத் தலைவராகக் கொண்டு வட,கிழக்கு மாகாணத்திற்கு இவ்வகையான அமைப்பு ஏற்படுத்துவது எனும் போது அது சந்தேகத்தை இரட்டிப்பாக்குகின்றது. இராணுவத்திற்கு பத்தாயிரம் பேரை சேர்த்துக் கொள்ள முடியாமற் போனபோது புனர்வாழ்வு எனும் போர்வையில் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு சமுர்த்தி ஊழியர்களை வடமாகாணத்துக்கு அனுப்ப அரசு தீர்மானம் எடுத்து செயற்பட்டு வருகின்றமையும், புனர்வாழ்வு அமைச்சராக அஷ்ரஃப் அவர்கள் விளங்கும் போது கிழக்கிலங்கையில் நடைபெற்றுவரும் அரசின் புனர்வாழ்வுப் பணிகளில் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுவதாக விமர்சனங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன என்பதையும் கருத்திற் கொள்ளல் வேண்டும். அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதுவோ அல்லது அவர் மட்டும் தான் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அம்மாகாணத்தவர் என்பதுவோ இவ்வித நியமனங்களுக்கான தராதரமாகக் கொள்ளல் ஆகாது.

இரண்டாவது வடகிழக்கு மாகாணங்களில் மூன்றில் இரண்டு பகுதிகள் தமிழ் ஆயுதப்படையான விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும், மூன்றில் ஒரு பகுதி சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டிலும் இருக்கின்றன. இந்நிலையில் இராணுவத்தினால் வென்றெடுக்கப்பட்ட பகுதிகளில் எவரும் சுதந்திரமாக செயற்பட முடியாத அளவில் எல்லா நடவடிக்கைகளையும் இராணுவம் தமது முழுமையான ஆதிக்கத்திற்கு உட்படுத்தியுள்ள சூழ்நிலையில், அத்தியாவசிய மருந்து வகைகளைக்கூட எடுத்துச்செல்ல MSF போன்ற வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களுக்குக் கூட இராணுவம் அனுமதி வழங்க மறுத்துவருவதாக MSF நிறுவனத்தினர் கூறியதாகவும், அகதிகளாகியுள்ள அப்பாவி மக்கள் பட்டினிச் சாவிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் இந்தியாவுக்கு படகுகள் மூலம் செல்ல முயலுகின்றனர் என UNHCR பிரதிநிதிகள் கூறியதாகவும், செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரும் நிலைமைகளின் மத்தியில் இந்த இடைக்கால நிர்வாகக்குழு எவற்றைச் சாதிப்பதற்காக அமைக்கப்படவிருக்கின்றது?

மூன்றாவதாக தமிழ் மக்கள் நம்பக்கூடிய வகையில் எதையுமே செயற்படுத்தாது இவ்வரசை நம்பியவர்களுக்கு யுத்தத்தையும், அதன் கெடுபிடிகளையும் மட்டுமே பரிசாகக் கொடுத்துள்ள இவ்வேளையில், அரசியல் தீர்வாகப் பிரேரணை ஒன்றை வெளியிட்டு அதை இதுவரையும் யுத்த முனைப்புகளுக்கான ஒரு ஆயுதமாக மட்டும் பயன்படுத்தி முழு உலகையும் ஏமாற்றி வரும் இவ்வேளையில், வடகிழக்கு மாகாணம் தொடர்பாக யுத்தத்தை மட்டுமே ஒரே நோக்காகக் கொண்டு செயற்பட்டுவரும் இவ்வரசானது இவ்வகையான ஒருங்கிணைப்புக் குழுவையும் இந்த இராணுவத் தேவையை நோக்கமாகக் கொண்டுதான் செயற்படுத்த முயலுகின்றதா?

எது எப்படியிருப்பினும், வடகிழக்கு மாகாணங்கள் தொடர்பாகத் தமிழ் மக்களின் இணக்கப்பாடுகள் இல்லாமல் அரசு தனது ஆட்சிப்பலத்தின் மூலம் செயற்படுத்த முயலுகின்ற எல்லாச் செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்த வேண்டியது தமிழ் ஜனநாயக சக்திகளினது கடமையாகும். இனக்கப்பாட்டுடனான பல்லினப்பாங்கான ஜனநாயக நடைமுறைகளை பலப்படுத்தும் செயற்பாட்டின் தவிர்க்க முடியாத ஒன்றாக இந்நடவடிக்கை இனம் காணப்படல் வேண்டும்.

## இடைக்கால நிர்வாக சபை?

மறுபுறத்தில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தும் படியும் இதற்காகத் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக்கூடத் துறந்து அச்சபையின் மூலம் யாழ் மக்களுக்குச் சேவையாற்ற தான் தயார் என்றும் அறிவித்துள்ளார். EPDP யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா. வடகிழக்கு மக்களின் தேவைகளைக் கண்டறிந்து பூர்த்தி செய்தவற்கு ஒரு இராணுவ மயப்படுத்தப்படாத நிர்வாக ரீதியில் செயற்படக்கூடிய சிவில் அமைப்பு ஒன்று தேவையென்பதில் எவ்வித முரண்பாடும் இருக்க முடியாது. ஆனால் இன்று அப்பிரதேசங்களில் நிலவுகின்ற இராணுவ கெடுபிடிகளின் மத்தியில் அப்பிரதேசத்தை ஆளும் பொறுப்பே இராணுவத்திடம் ஒப்படைப்பட்டுள்ள சூழலில் இவர்கள் கூறும் இடைக்கால நிர்வாக சபை எவற்றைச் சாதித்துவிடப்போகின்றது என்ற சந்தேகம் எழுகின்றது. மக்களின் தேவைகளை நோக்கமாகக்கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டுமேயானால், முதலாவதாக மக்கள் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் விதத்தில் இராணுவக் கெடுபிடிகளிலிருந்து இவர்கள் விடுவிக்கப்படல் வேண்டும். விடுதலைப் புலிகளுடன் மோதுவது அவர்களின் தாக்குதலிலிருந்து இராணுவத்தைப்பாதுகாத்துக்கொள்வது மட்டுமே இராணுவத்தின் செயற்பாடாக வரையறுக்கப்பட்டு பொதுமக்களின் சுதந்திரத்தில் இராணுவத்தினர் தலையிடாத சூழலை உத்தரவாதப்படுத்தல் வேண்டும். இது விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம், தமிழர்களுக்கெதிரான யுத்தமல்ல என வார்த்தைகளால் கூறிக் கொள்ளும் இவ்வரசு ஐ.தே.கட்சி அரசைப்போன்றே ''எல்லாத் தமிழர்களும் புலிகள்'' எனும் போக்கில் முழுத் தமிழர்களுக்கும் எதிரான கூட்டுப் பழிவாங்களுக்கு (Collective Punishment) இராணுவத்தைப் பயன்படுத்தி வருகின்றதோடு ஆயுதமேந்தாத அப்பாவி மக்களைப் பட்டனி நிலைக்கு உள்ளாக்கியும் வருகின்றது.

புலிகளுக்கு எதிராக அரசியலில் ஈடுபட்டிருக்கும் அரசியல் குழுக்களடங்கிய இடைக்கால நிர்வாகச் சபையை ஏற்படுத்தும் போது அது மேலதிகமான முரண்பாடுகளுக்கு வழிவகுப்பதோடு யுத்த அவலங்களுக்கு உள்ளாக்கியுள்ள பொது மக்களின் நிலைமையை மோசமாக்கவே வழிவகுக்கும். அத்தோடு இவ்வகையான அமைப்பைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் இராணுவத்தைச் சென்றடைவதோடு, இராணுவத்தின் தயவில் இயங்க வேண்டிய நிலைமை இவர்களுக்கு ஏற்படும். இன்று அரச இராணுவக் கட்டுப்பாட்டில் அன்றாடம் நடைபெறுகின்ற மோதல் சம்பவங்களையும் அதன் விளைவாக அவ்விடங்களைச் சூழவுள்ள பிரதேசங்களில் வாழ்ந்துவரும் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுடன் ஒப்பிடும் பொழுது இவ்வகையான நிலைமைகள் இராணுவக் கெடுபிடிகளை மேலும் வலுப்படுத்தவே உதவுமேயொழிய வேறு எதற்கும் உதவப்போவதில்லை. அத்தோடு இச்சபையின் செயற்பாடுகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டதாகவே அமையும்.

இடைக்கால நிர்வாக சபையின் தேவை வட - கிழக்கில் ஆயுதமேந்தாத பொது மக்களின் தேவைகளை நோக்கமாகக் கொண்டது என்பது தான் உண்மையானால் அவ்விதமான சபை சரியாக செயற்படுவதற்கான முதற் செயற்பாடாக இராணுவ ஆதிக்கத்திலிருந்தும், விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்திலிருந்தும் பொது மக்களை விடுவித்து அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான கட்சி சார்பற்ற சுதந்திரமான சிவில் நிறுவகங்களையோ அல்லது சிவில் நிர்வாக சபையையோ ஏற்படுத்துவதுதான்.

## ஜெனீவா பிரகடனம்

இந்நடைமுறையின் ஆரம்பமாக இராணுவத்தினருக்கும், புலிகளுக்குமிடையிலான இராணுவ முரண்பாட்டுக்கிடையில் சிக்கித் தவிக்கும் பொது மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக அமைதல் வேண்டும். ஆகக் குறைந்தளவில் உள்நாட்டு ஆயுதப்போராட்டம் தொடர்பான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜெனீவா பிரகடனத்தில் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான கோரிக்கையை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இவர்கள் முன்வைத்தல் வேண்டும். பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவில் தொங்கிக்கொண்டிருக்கும் இவ்வரசுக்குக் குறைந்தபட்சக் கோரிக்கையாக இக்கோரிக்கை முன்வைக்கப்படல் வேண்டும். சலுகைக்கும், பதவிகளுக்கும் மண்டியிட்டுக்கொண்டு இவ்வரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளைக்கூட எதிர்த்து செயற்படாது மௌனம் காத்துக் கொண்டிருக்கும் மலையகத் தமிழ்க்கட்சிகள் உட்பட பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எல்லாத் தமிழ் உறுப்பினர்களும் அரசுக்கு வழங்கும் ஆதரவை இக்கோரிக்கையுடன் நிபந்தனையுள்ளதாக ஆக்கிக்கொண்டு அரசுக்கு எதிரான அழுத்தங்களைப் பிரயோகிக்க முன்வரல் வேண்டும். மக்களின் பட்டினிச் சாவையும், அங்கு நடைபெறுகின்ற அடாவடித்தனங்களையும் செய்தித்தணிக்கையின் மூலம் மூடி மறைத்துக்கொண்டு இருக்கும் இவ்வரசின் கபடத்தனத்திற்கு ஒரு சவாலாக இந்நடவடிக்கை அமையலாம். அப்படியான கோரிக்கையை ஏற்று இவ்வரசு ஜெனீவாப் பிரகடனத்தில் ஒப்பமிட்டு ஏற்றுக்கொள்ளுமேயானால், அதற்கிணங்க கண்காணிப்புக் குழுக்களை நியமனம் செய்து அப்பிரகடனத்தை கௌரவித்து இராணுவம் நடந்து கொள்கின்றதா என்பதை உத்தரவாதப் படுத்திக்கொள்ளல் வேண்டும். இவ்வகையான உத்தரவாதம் கிடைக்குமேயானால் இந்நிலைமையானது இந்த யுத்தத்தின் மற்ற அணியானது விடுதலைப்புலிகளையும் இப்பிரகடனத்தை ஏற்றுக்கொள்வதை உத்தரவாதப்படுத்துவதற்கான அழுத்தங்களை உள்நாட்டிலும், வெளிநாடுகளின் மூலமாகவும் பிரயோகிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த பெரும் வாய்ப்பாக அமையும். இவ்வகையில் கட்டுப்பாடான யுத்தம் என்பது யுத்தத்தின் வலுவைக் (Intensity) குறைப்பதற்கு உதவுவதோடு ஆயுதமேந்தாத பொது மக்களின் பாதுகாப்பையும் உத்தரவாதப் படுத்த உதவும்.

இத்தகைய சூழ்நிலையின் உருவாக்கமானது சுதந்திரமான சிவில் நிர்வாக சபை ஒன்றை அமைத்து இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மட்டுமல்ல விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளிலும் வாழும் இலட்சக்கணக்கான பொதுமக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நிர்வாக விநியோக அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் ஏதுவாக அமையும். கட்சி சார்பற்ற ஒரு சுதந்திரமான சிவில் நிர்வாக சபையாக அமைவதோடு அம்மாகாணங்களைத் தமது வாழ்விடமாகக்கொண்ட வடமாகாண முஸ்லிம்கள் உட்பட எல்லா இனத்தினரிதும் பிரதிநிதித்துவத்துடனான ஒன்றாக அவ்வமைப்பு அமைதல் வேண்டும். இவ்வமைப்பு சரியாக செயற்படுகின்றதா என்பதைக் கண்காணிக்கத் தமிழ்க் கட்சிகள் உட்பட பல்கட்சிக் கூட்டமைப் பொன்றை ஏற்படுத்திக்கொள்ளலாம். முரண்பாடுகள் மேலும் வளர்ச்சியடைவதைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டுமானால் இந்நிர்வாகம், கட்சி அரசியலுக்கு உட்படாத வகையிலும் வரையறை செய்யப்பட்ட கொள்கை செயற்திட்டங்களுக்குக் கட்டுப்பட்டும் செயற்படுத்தப் படுவது உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

எனவே தமிழ்க்கட்சிகள் மக்களின் அவலநிலையைக் களைந்தெறிவதுதான் இக்கோரிக்கையின் நேர்மையான நோக்கமாக இருக்குமேயானால் இந்த இடைக்கால ஒருங்கிணைப்புக்குழு ஏற்படுத்தப் படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கும், இடைக்கால நிர்வாக சபையைக் கோராமல் ஜெனீவா பிரகடனத்தில் அரசு ஒப்பமிட்டு அதற்கமைய யுத்த நிலைமைகளைக் கட்டுப்படுத்தி மக்களுக்குப் பொறுப்புகூறுமளவுக்கு இராணுவம் நடந்து கொள்வதை உத்தரவாதப்படுத்தியதன் பின் ஒரு கட்சி சார்பற்ற சிவில் நிர்வாகச்சபையொன்றை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்வதே நல்லது.

www.tamilarangam.net



# இணைப்புகள்: வடக்கு+கிழக்கு - தமிழர்+முஸ்லிம்கள்



தமிழ் பிரதேசத்துக்கான தன்னாட்சிக் கோரிக்கையை முன்வைத்து இலங்கையில் ஆயுதப்போராட்டம் நடத்தப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இந்தப்போராட்டத்தில் குறிப்பாக இளைஞர்களே ஈடுபட்டாலும் கூட, கூட்டு மொத்தத்தில் இலங்கை வாழ் அனைத்து தமிழ் மக்களும் இக்கோரிக்கையை ஏற்றுள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும். அதிலும் சாத்வீகம் பேசும் தமிழ் அரசியல்வாதிகள் தான் தமது உணர்ச்சிமிக்க பேச்சுக்கள் வாயிலாக இளைஞர்களுக்கு இந்த வழிமுறைக்கான அத்திவாரத்தை மறைமுகமாக அமைத்துக் கொடுத்துள்ளார்கள் என்றால் அது மிகையாகாது. தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவான தன்னாட்சிக் கோரிக்கையை வென்றெடுக்கும் நோக்கில் அரசியல் கட்சிகள் வேறாகவும், ஆயுதக்குழுக்கள் வேறாகவும், செயற்பட வேண்டிய அவசியத்தை மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களே ஏற்படுத்தி விட்டார்கள் என்பது அனைத்துத் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவு.

சர்வ சுதந்திரமுள்ள ஜனநாயக நாட்டில் ஆட்சி செய்கின்ற அரசாங்கங்களினால் அனைத்து மக்களும் இன, மத பேதமின்றி சரிசமமாக நடத்தப்பட்டால் இவ்வாறான கட்சிகளோ குழுக்களோ தோன்றி தன்னாட்சி கோருவதற்கு எவ்வித நியாயமுமில்லை. ஆனால் அவ்வாறான போராட்டம் தோன்றியுள்ளமை இங்கு ஒரு பகுதி மக்கள் சரிசமமாக நடத்தப்படவில்லை என்பதற்கும் அவர்களது சுதந்திரத்துக்கு ஏதோ ஒரு வகையில் ஆபத்து ஏற்பட்டிருப்பதை உணர்ந்து கொள்வதற்குமான சான்றாகவும் அமைந்துள்ளது. உண்மையில் தமிழ் மக்களின் உரிமைகள் பல்வேறு வழிகளில் பறிக்கப்பட்டதன் விளைவே இன்றைய தன்னாட்சிக்கோரிக்கை என்பது உலகறிந்த விடயம். பறிக்கப்பட்ட தமது உரிமைகளை மீட்டெடுக்கவும் இனிவரும் காலங்களில் வேறெவராலும் தமது உரிமைகள் பறிக்கப்படாதிருப்பதற்குமாக நடத்தப்படுகின்ற ஆயுதப் போராட்டத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ளனர். இது வரையிலும் பலநூறு கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள் இழக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இழக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியைக் கணக்கிட்டு தமிழ் பேசும் பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன் படுத்தியிருந்தால் இந்நேரம் அந்தப்பகுதி ஒரு குட்டிச் சிங்கப்பூர் என்ற என்ற நிலைக்கு வளர்ச்சியடைந்திருக்கும். இவற்றையறியாமல் அந்த இளைஞர்கள் போராட்டத்தில் தமது செல்வங்களை அழிக்கவில்லை. இப்போது நினைத்தால் கூட அரசாங்கத்தின் ஐந்து சத உதவிகூட இல்லாமல் யுத்த தளபாடங்களுக்காக செலவு செய்கின்ற பணத்தைக்கொண்டு தாம் வரையறை செய்துள்ள தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியும். ஆனால் அநீதியான அரசின் கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு அப்படிச் செய்வதானது விழலுக்கிறைத்த நீராகவே இருக்கும். ஆசியாவிலேயே புகழ் பெற்று விளங்கிய யாழ்ப்பாண நூலகத்துக்கு என்ன நடந்ததோ அதே கதி இவற்றுக்கும் நடக்கலாம். எனவே தங்களைத்தாங்களே ஆளுகின்ற நிலையினை ஏற்படுத்திக் கொண்டு அபிவிருத்திப்பணியில் ஈடுபடுவதே சிறப்பென்று இளைஞர்கள் திட்டமிட்டிருந்தால் அது பிழையான முடிவென்று எவராலும் சொல்ல முடியாது.

தமிழ் சமூகத்தின் இவ்வாறான சிந்தனைப் போக்குக்கு மாற்றமாக முஸ்லிம் பிரதேசங்களில் அபிவிருத்தியினை மட்டும் அடிப்படையாகக்கொண்ட செயற்திட்டங்கள் வகுக்கப்படுவதானது தமிழ் மக்களுக்குத்தான் பிரச்சினைகளும் தேவைகளும் இருக்கின்றன. முஸ்லிம்களுக்கு இவை எதுவும்கிடையாதென்பது போல அமைந்திருக்கின்றது. இவ்வாறு எவராவது எண்ணினால், அது அவரது அறிவீனத்தையே எடுத்துக்காட்டும். தினகரன் வாரமஞ்சரியில் முகம்மது சமீம் என்பவர் எழுதி வரும் ''முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்'' என்ற தொடர் கட்டுரை முஸ்லிம்களை விழிப்படையச் செய்யப்போதுமானதாகும். இவரது கட்டுரையில் முஸ்லிம்களுக்கெதிராக சிங்களப் பேரினவாதம் செய்துள்ள சதிநாச வேலைகளை புள்ளி விபரங்களுடன் தரப்படுகிறது. எடுத்துக் காட்டாக அனைவரும் பரவலாக அறிந்திருக்கின்ற ஒன்றிரண்டு விடயங்களைக் கூறலாம்.

1. முஸ்லிம் அமைச்சர்களுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கும் சிங்களப் பேரினவாதிகளின் செயற்பாடுகள்.
2. முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் முஸ்லிம் பெரும்பான்மை குறைக்கப்பட்டமை.
3. கண்டியில் ஆண்கள் பாடசாலை அமைப்பதிலுள்ள தடைகள்.

மேற்படி நிகழ்வுகள் பொய்யென்று வாதிட எந்த ஒருவருக்கும் துணிவு கிடையாது.

இதனடிப்படையில் தமிழ் மக்களுக்கு சிங்களப் பேரினவாதத்தால் எந்தளவு ஆபத்தும் பயங்கரமும் இருக்கின்றதோ அதே அளவு முஸ்லிம்களுக்கும் உண்டென்பதை சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியே கிடையாது. ஆரம்ப காலத்திலேயே இந்த உண்மையினைத்தமிழ் அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கு விளங்கப்படுத்தியதோடு நின்று விடாமல் தமது கட்சிகளில் அவர்களுக்கு அங்கத்துவம் வழங்கி தேர்தல்களில் போட்டியிடவும் வழிவகுத்தனர். காலமாற்றத்தின் விளைவாக பிற்காலத்தில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பல்வேறு ஆயுதக்குழுக்கள் தோற்றம் பெற்றன. அவ்வாறான அனைத்துக் குழுக்களிலும் கணிசமான அளவு முஸ்லிம் இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதோடு அவர்களுக்கு உயர் பதவி வழங்கப்பட்டிருந்ததை கடந்த கால வரலாறு இன்றும் காட்டி நிற்கின்றது. இப்போதும் கூட வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் அமைப்புக்கள் தமிழ் மக்களின் மீது குறை காணுவதற்குப் பதிலாக அவர்களால் தமக்களிக்கப்பட்ட கௌரவத்தையே மீட்டுப்பார்த்து நன்றி கூறுகிறார்களென்றால் தமிழ் மக்களால் முஸ்லிம்கள் எந்தளவு மதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எளிதில் விளங்கிக்கொள்ள முடியும். இவையெல்லாம் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக செயற்பட்டால் தான் தமிழ் பேசும் மக்களுக்கான சுதந்திர தாயகத்தை ஏற்படுத்த முடியும் என்ற உயர் சிந்தனையின் விளைவால் ஏற்பட்ட அனுகூலங்கள்.

இந்நிலைமைகளை நன்குணர்ந்து கொண்ட சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்களிலிருந்து முஸ்லிம்களைப் பிரிக்க எண்ணற்ற சதிவலைகளை விரித்தது. அவற்றில் துரதிஷ்டவசமாக இரண்டு இனமுமே விழுந்து விட்டதென்றே கூற வேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக அல்லது எதிரியின் பிரித்தாளும் தன்மையைப் புரிந்து கொள்ளத்தவறியதன் காரணமாக தமிழ் போராளிக் குழுக்களால் முஸ்லிம்கள் பல்வேறு வகையில் துன்புறுத்தப்பட்டார்கள். பதிலுக்கு தமிழ் மக்களும் முஸ்லிம்களால் அதே வகையில் துன்புறுத்தப்படாமிலிருக்கவில்லை. அவையெல்லாம் கடந்து போன அசம்பாவிதங்கள் மட்டுமன்றி கண்டிப்பாக மறக்கப்படவேண்டியவைகளும் கூட. இரண்டு இனங்களுக்கும் பொது எதிரியான சிங்களப் பேரினவாதத்தின் வஞ்சக நிலைப்பாட்டை நிதர்சனமாக புரிந்துகொண்ட பின்னரும் கடந்து போன கசப்பான நிகழ்வுகளை மாறி மாறி மீட்டுப் பார்ப்பதானது மீண்டும் இவ்விரு இனங்களினதும் ஒற்றுமைச் சீர்குலைவுக்கே வழி வகுக்கும். வடக்கு கிழக்கில் இவ்விரு இனங்களும் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டு வாழ முடியாதென்பது காலத்தால் நிரூபிக்கப்பட்ட உண்மை. எனவே சிங்களப் பேரினவாதத்தின் பிடியிலிருந்து தமது உரிமைகளை மீட்டெடுக்கப் போராடுகின்ற தமிழ்சமூகத்துக்கு உதவிசெய்யாது விட்டாலும் பரவாயில்லை. உபத்திரவமாவது செய்யாமல் அவர்களுடன் ஒற்றுமையைக் கட்டிக் காக்கின்ற முட்டுக்கட்டையாக இருக்கின்ற அம்சங்களை இனங்கான முஸ்லிம்கள் தவறக்கூடாது.

இவ்விடயத்தில் தமது சொந்த அரசியல் மற்றும் இன்னோரன்ன நலன்களுக்காக இவ்விரண்டு இனங்களும் ஒற்றுமைப் படாதிருப்பதை விரும்புகின்ற குறுகிய, தீர்க்க தரிசனமற்ற சிலர் எம்மிடையே உலாவுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்களாக இருப்பது மிகவும் வேதனைக்குரியது. இவர்கள் தமிழ்ப் போராளிக் குழுக்களால் முஸ்லிம்களுக்கெதிராகச்செய்யப்பட்ட துரதிர்ஷ்ட நிகழ்வுகளை மீண்டும்மீண்டும் நினைவு படுத்துவது அதன் வாயிலாக அனுதாபத்தைப் பெற்று முஸ்லிம்களின் வாக்குகளைச் சூறையாடவே என்றால் அது பொய்யில்லை. இப்படிச் சொல்வதன் மூலம் அம்மாதிரியான நிகழ்வுகள் இன்னும் தொடரலாம் என்று சூசகமாகக் கூறுகின்றார்கள். இது அவர்கள் வாக்கு வேட்டையாடக் கடைப்பிடிக்கின்ற தந்திரங்களில் ஒன்று. அவர்கள்கூறுவது போன்று அந்த ஆயுதக் குழுக்கள் அதே நிலைப்பாட்டில் இப்போதும் இருக்குமாக இருந்தால் முஸ்லிம் கிராமங்களில் புகுந்து அவர்களை ஆயிரக் கணக்கில் வெட்டிக் குவிப்பது அவர்களுக்கு ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. அதை அவர்கள் ஏன் செய்யாமல் இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இங்கு இவர்கள் நினைப்பதற்கு மாறாக தமிழ் போராளிகள் அண்மைய காலங்களில் முஸ்லிம் பிரமுகர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தியிருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கது. எனவே முஸ்லிம் - தமிழ் ஒற்றுமையை கருத்திக் கொண்டு தமிழர்களால் முஸ்லிம்களுக்கும், முஸ்லிம்களால் தமிழர்களுக்கும் ஏற்பட்ட துரதிர்ஷ்ட நிகழ்வுகளைப் பற்றிப் பேசுவதும் பத்திரிகைகளில் அறிக்கைகளில் விடப்படுவதும் இவை தொடர்பாக கதை, கவிதைகள், எழுதுவதும் நிறுத்தப்பட வேண்டும். தமிழ்ப் பத்திரிகைகளும் இவ்வாறான ஆக்கங்களைப் பிரசுரிப்பதை நிறுத்தி விடுவதே தமிழ் கூறும் நல்லுலகுக்குச் செய்கின்ற பேருதவியாக இருக்கும்.

*எம்.ஏ.எம்.மர்சூக்*

# திருமலை: முஸ்லிம் காங்கிரஸ் புறக்கணிக்கிறது!

திருமலை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நிரந்தரமான வாக்குகளை பிரதேச ரீதியிலாக பின்வருமாறு கணிப்பிடக்கூடியதாகவுள்ளது. (உத்தேசமதிப்பீடு)

| | |
|---|---|
| மூதூர் | -8500 |
| குச்சவெளி | -3000 |
| தம்பலகாமம் | -1700 |
| திருகோணமலை | -2000 |
| கந்தளாய் | -800 |
| கிண்ணியா | -1500 |

இம்மாவட்டத்தின் மு.காவின் இன்றைய அரசியல் நிலைப்பாடென்பது மக்களை மதிக்காததாகவே காணப்படுகிறது. இதன் தாக்கத்தினால் மக்கள் அரசியல் அக்கறையற்று இருப்பதனையும், மேற்படி அரசியல் கட்சிக்கு (முஸ்லிம்கள்) ஆதரவாக செயற்படுவதானது மிகவும் வீழ்ச்சி நிலையிலேயே இருப்பதனையும் காண முடிகிறது. அண்மையில் நடைபெற்ற மு.காவின்14 வது தேசிய மாநாட்டில் கலந்து கொள்ள பிரயாணம் மேற்கொண்ட இம்மாவட்ட தொண்டர்களே சாட்சி. இம்மாவட்டத்தின் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தூண் எனப்போற்றிப் புகழ்ந்த மூதூர் பிரதேசத்திலிருந்து மகாநாட்டுக்கு சென்றோர்கள் தொகை ஆக 08 ஆகும் (அதில் 04 நபர்கள் மூதூர் பிரதேசசபை உறுப்பினர்கள்) இதே போன்று திருகோணமலையிலிருந்து 08 பேர்களும், தம்பலகாமம் பகுதியிலிருந்து 18 பேர்களும், குச்சவெளி பகுதியிலிருந்து 16 பேர்களும், கந்தளாயிலிருந்து 05 பேர்களும், கிண்ணியாவிலிருந்து 44 பேர்களும் (இதில் சுமார் 25 பேர்கள் ஸ்ரீ.ல.சு.கட்சி ஆதரவாளர்கள்) மாத்திரமே கலந்து கொண்டனர்.

ஏனைய பிரதேசங்களை விட மு.கா. கட்சியினை முழுமையாக நம்பிய கேந்திர நிலையமான மூதூர் பிரதேசத்தில் இன்று கட்சியின் வளர்ச்சி பாரிய் வீழ்ச்சி கண்டுள்ளது. இதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து பார்க்கும் போது பின்வரும் குறைபாடுகளே முக்கிய காரணம் என்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

1. பிரதேசத் தலைவர்களின் தான் தோன்றித்தனமான போக்குகளும் செயற்பாடுகளும்.
2. பிரதேசத் தலைவர்கள் தமக்கிருக்கும் அரசியற் பலத்தைப் பயன்படுத்தி திறமை கொண்டவர்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் தடையாக செயற்படுவது.
3. கட்சி விசுவாசமும் இனப்பற்றும் முற்றாக இல்லாத ஒருவரை முஸ்லிம்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மாவட்ட இணைப்பதிகாரியாக நியமித்திருப்பது.
4. கட்சி விசுவாசிகளுடன் தொடர்புகளை கைவிட்டு தலைமைத்துவத்துடன் மாத்திரம் தொடர்புகொண்டு தமது சுய தேவைகளையும் உறவினர்களினது தேவைகளையும் சில பிரதேச தலைவர்கள் மேற்கொள்வதனால் மக்களின் குறைபாடுகள், உணர்ச்சிகள் என்பன புறக்கணிக்கப்படுவது.
5. திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் ஏ.மஜீத் அவர்களின் அசமந்தப் போக்குகள். (செயற்திட்ட வேகம் குறைவு)
6. இம்மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் எதனையும் கட்சியின் சார்பாகவாவது மு.கா. தலைவர் மேற்கொள்ளாமை.
7. கட்சி வளர்ச்சியினைக் கவனிப்பதற்கென முன்னர் வருகை தந்த கொழும்பு வாழ் கட்சி உயர் மட்டக் குழுவினரின் வருகையென்பது முற்றாக இல்லாத நிலைமை.

இவற்றில் 1-3 தொடக்கம் வரையில் குறிப்பிடப்பட்டவைகள் முற்று முழுதாக மூதூர் பிரதேசத்தையே உள்ளடக்கும். கட்சியின் வளர்ச்சியில் ஆரம்பகாலம் தொடக்கம் தீவிர நாட்டம் கொண்ட மூதூர் பிரதேச மக்கள் இன்று விரக்தி நிலைமையில் தலைமைத்துவத்தையே குறைகாணும் அளவிற்கு நிலைமை மாறியுள்ளதென்பதை மு.கா. தலைமைத்துவம் நன்குணர்ந்து கொள்ளத்தான் வேண்டும்.

அண்மையில் மு.கா. தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் ஏற்பாட்டில் பிரதி அமைச்சர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் (பிரதித் தலைவர் நஜீப் ஏ. மஜீட் அவர்கள்) 'திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழு' அமைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. இம்மாவட்டத்தைத் துரித அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்ற எண்ணப்பாடு மு. கா. தலைவர் அவர்களுக்கு இருப்பதை பாராட்டத்தான் வேண்டும். இம்மாவட்டத்தில் கட்சியின் நிலைப்பாடானது மாவட்ட அபிவிருத்திக் குழு முன்னேற்றச் செயற்பாட்டிலும், மேற்கூறப்பட்டுள்ள பாரியளவிலான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதிலுமே தங்கியுள்ளதென்பதையும் மு.கா. தலைமைத்துவம் உணர்ந்து கொள்ளுமாயின் நிச்சயம் இம்மாவட்ட முஸ்லிம்கள் மு.கா. கட்சிக்கு விசுவாசமுள்ளவர்களாக எதிர்காலத்திலும் செயற்படுவார்கள் என்பது உறுதி. இல்லையென்றால் பிறிதொரு கட்சியின் தோற்றத்திற்கு மு.கா வழி அமைத்துக் கொடுப்பதாகவே அமையும்.

*ஏ.எம்.எம்.அப்துல்லாஹ்*
*ஏ.எம்.வை.சஹீட்*
திருமலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜே. ஆர். — பண்டாரநாயக்கா
# சிங்கள இனவாதிகளான இரண்டு தமிழர்கள்

டி. சிவராம்





ஜே. ஆரின் 90 வயதை ஒட்டியும் பண்டாரநாயக்காவின் ஐம்பதாவது நினைவு தினத்தை ஒட்டியும் இக் கட்டுரை பிரசுரமாகிறது

ஜே. ஆருக்கு 90வயதாகிற்று இம்மாதம். இலங்கையின் முக்கிய சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்தும் இதையொட்டி அவருடனான பேட்டிகளையும், கட்டுரைகளையும் அவரது வாழ்க்கை பற்றிய படங்களையும் வெளியிட்டன.

இலங்கையில் இனப்பிரச்சினை 1950களில் இருந்து கூர்மையடைந்து ஆயுதப் போராட்டமாக வெடித்ததற்கு ஜே ஆரின் சிங்களப் பேரினவாத நிலைப்பாடும் ஒரு முக்கிய காரணி என்பது தெரிந்த விடயமே.

ஜே.ஆரை ஒரு பெரும் தேசிய அரசியல் வாதியாக பலரும்கண்டு எழுதுகின்ற இந் நேரத்திலே நாம் அவரது இனவாதத்தின் உளவியலை சற்று மீட்டுப்பார்ப்பது இலங்கையின் இனப்பிரச்சினையின் இருள் படர்ந்த மூலைமுடுக்குகள் சில வற்றுள் ஒளி பாய்ச்சுவது போலாகும்.

1956இல் 24மணி நேரத்தில் தனிச்சிங் களச்சட்டம் கொண்டு வருவதாகக் கூறி சிங்களப் பேரினவாத அலையில் ஆட்சிக்கு வந்தார் பண்டா; கெலனித் தொகுதியில் தோற்றுப்போனார் ஜே.ஆர். ஆட்சிக்கு வந்த பண்டா 1957 ஜூலையில் தமிழரசுக்கட்சியுடன்மாநில சுயாட்சிக்கான ஒப்பந்தமொன்றில் ஈடுபடுகிறார். ஆனால் பண்டா உருவாக்கிய சிங்கள இனவாத அலையே அதற்கெதிராகத் திரும்புகிறது. ஒப்பந்தத்திற்குக் கடும் எதிர்ப்பு தோற்றுப்போயிருந்த ஜே.ஆரிடமிருந்தே கிளம்பிற்று. ''2500 வருடங்களாக தனது மொழியையும் மதத்தையும் மிகக் கரிசனையுடன் காத்துவரும் சிங்கள இனம் தன்னுடைய பிறப்புரிமையைக் காக்க இம்மியளவேனும்விட்டுக்கொடுக்காமல் போராட வேண்டிய காலம் வந்து விட்டது'' (Daily News 13.05.1957) எனக் கூக்குரலிட்ட ஜே.ஆர். சிங்கள இனத்துவேசத்தைக் கிளறிவிட்ட அந்தப் பிரபல பாதயாத்திரையிலும் (05-10-1957) ஈடுபட்டார்.

இந்தக் காலகட்டத்தில் எஸ்.பி. அமரசிங்கம் என்பவர் வெளியிட்டு வந்த டிரிபியூன் என்ற பத்திரிகையில் ஆய்வறிஞர் ஜேம்ஸ் ரி. ரத்னம் பண்டாரநாயக்கா ஒருதமிழ்ப் பரம்பரையில் தோன்றியவர் என ஆதாரங்களுடன் நிறுவி ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தார்.

15ம்நூற்றாண்டின்பிற்பகுதியில் அல்லது 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழகத்திலிருந்து இலங்கை வந்த நவகொமுவ தேவாலயத்தின் முதலாவது பூசாரியாக விளங்கிய நீலப்பெருமாள் என்பாரது நேரடி ஆண்சந்ததியிற்தோன்றியவரே பண்டாரநாயக்கா என்று அவரது குடும்ப ஆவணங்களையும், ஒல்லாந்தர் காலப் பதிவுகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதியிருந்தார் ரத்னம்.

பண்டாரநாயக்கா குடும்பத்தின் பரம்பரைப் பெயர் கழுகாப்புகே என்பதாகும். இது நீலப்பெருமாள்கே அதாவது நீலப்பெருமாளின் வீட்டவர் எனப் பொருள்படும். இக்குடும்பப்பெயரையே பண்டாரநாயக்கா பரம்பரையினர் முற்காலத்தில்பயன்படுத்தி வந்தனர்.(கே - சிங்களத்தில் வீடு எனப்படும். குடும்பப் பெயருடன் 'கே'யையும் சேர்த்துப் பாவிக்கும் வழக்கம் ஒன்று சிங்கள மக்கள் மத்தியில் வழங்கி வருகிறது.) தாம் நீலப்பெருமாளின் சந்ததி எனக்கூறிப் பெருமையுற்றனர்.

1760இல் பழைய அரச பிரதானிகள் ஒல்லாந்தருக்கு எதிராகக் கலகத்தில் இறங்கி கண்டிக்கு ஓடிவிட்டபின் தமக்கு விசுவாசிகளாக இருந்த சில உள்ளூர்க்காரர்களை ஒல்லாந்தர் மேற்குக்கரையோர நிர்வாகத்தில் அமர்த்தினர். இதில் நீலப்பெருமாளின் மகன் வழிவாரிசான தொன் பிரான்சிஸ்கோ டயஸ் விஜேதுங்க பண்டாரநாயக்கா (பிறப்பு 1720 அளவில்) என்பவர் ஹேவகம் கோறளைக்கு முதலியாராக நியமனமானார். இவரது மகன் டானியல் பண்டாரநாயக்கா . இவர்கள் யாவரும் கிறிஸ்தவர்கள்.

டானியல் ஞானஸ்நானம் பெற்றது 16-02-1748இல். இவரது மகன் தொன் சொலமன் பண்டாரநாயக்கா . இவர் டச் கிழக்கிந்தியக்கம்பனியின் படையில் ஒரு லெப்டினன்றாக இருந்த ஜான் கிறிஸ்டோபல் ஸ்காரப் என்னும் ஒரு ஜேர்மன் நாட்டவரது மகளான சூசான்னா என்பவரது பேத்தியை மணமுடித்தார். இந்த ஜேர்மன் நாட்டவருடைய குடும்ப இலச்சினையில் (Coat of Arms) காணப்பட்ட 'சேபர்' எனும் ஒருவகை வாளைத் தூக்கிப் பிடித்த ஒரு வலதுகை, பண்டாரநாயக்கா பரம்பரையின் ஐரோப்பிய பாணியிலான குடும்ப இலச்சினையில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

தொன் சொலமன் பண்டாரநாயக்கா பிரிட்டிஷாருக்கு மிகுந்த விசுவாசியாக நீண்ட காலம் வாழ்ந்தார். 1818இல் பிரிட்டிஷாருக்கு எதிராகக் கண்டியில் கிளர்ச்சி வெடித்தபோது அதை அடக்க தமக்கு பெரும் உதவி செய்தவர் எனப் பாராட்டி அப்போதைய பிரிட்டிஷ் ஆளுநர் பிரவுன்றிக், தொன் சொலமனுக்கு ஒரு பதக்கம் வழங்கினார்.

தொன் சொலமன் பண்டாரநாயக்காவின் மகன் தொன் கிறிஸ்டபல் ஹென்றிக்கஸ் டயஸ் பண்டாரநாயக்க. இவர் மணமுடித்தது அன்னா புளொரன்டினா பிலிப்ஸ் எனும் பெண்ணை. ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவக் கல்வி கற்று பாதிரியாராகுவதற்கென ஒல்லாந்து சென்று வந்த பிலிப்ஸ் என்பவரின் மிகவிசுவாசமான கிறிஸ்துவக் குடும்பத்தின் வழித்தோன்றலே இப்பெண்மணி. ஏற்கெனவே திருமண வகையில் இவர் தொன்சொலமனுக்கு உறவுக்காரர்.

பயபக்தியான கிறிஸ்தவர்களாயிருந்த தொன் கிறிஸ்டபல் பண்டாரநாயக்காவிற்கும், அன்னா புளோரன்டினாவிற்கும் பிறந்தவரே தொன் சொலமன் டயஸ் அபயவிக்ரம ஜயதிலக்க செனிவிரத்ன ரஜகுமாரண கடுகேரளு பண்டாரநாயக்க. தான் ஒரு பெரும் ராஜ பரம்பரை எனக் காட்டவே இவ்வாறு ஒரு நீண்ட பெயரை அவர் சூட்டிக்கொண்டார் எனத் தெரிகிறது. இவரும் பயபக்தியான கிறிஸ்தவர். இவரது புத்திரர்தான் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க.



இவ்வரலாறுகளை மிக விரிவாக ஆராயப் புகுந்த ஜேம்ஸ் ரத்தினம் சுட்டிக்காட்ட முற்பட்டது என்னவெனில், தூய சிங்கள பௌத்த தேசியவாதத்தின் பிதாமகராகவும், பேரினவாதத்தை தமிழருக்கு எதிராக தட்டியெழுப்பிக்கொண்டிருந்தவருமான பண்டாவில் ஓடுவது சுத்தத் தமிழரான நீலப்பெருமாளின் இரத்தமும் சுத்த ஜேர்மன்காரரான ஸ்காரப்பின் இரத்தமும் தூய கிறிஸ்தவர்களான பிலிப்ஸ் குடும்ப இரத்தமுமே என்பதாகும். அத்துடன் பண்டா பரம்பரையின் அனைத்து மூலவர்களும், அவர்களுடன் திருமண உறவு கொண்ட அனைத்துக் குடும்பங்களும் சிங்கள மக்களின் தேசிய நலனுக்கெதிராக ஒல்லாந்தருக்கும் பின்னர் பிரிட்டிஷாருக்கும் மிகுந்த ராஜ விசுவாசிகளாகவும், எட்டப்பர்களாகவும், இருந்து வந்தவர்களே என்பதையும் ரத்னம் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், தானே சிங்கள பௌத்த தேசிய உணர்வின் தூய வழித்தோன்றல் என பண்டா எங்ஙனம் வாய்கூசாமல் பேசமுடியும் என்பதே அவரது ஆய்வில் தொக்கி நின்ற கேள்வி.

ரத்தினத்தின் கட்டுரையை தனக்குச் சாதகமாகப் பயன்டுத்திக்கொண்டார் ஜே.ஆர். ஐ.தே.கவின் அதிகார பூர்வ ஏடான சியரட்டவில் ரத்னத்தின் தகவல்களைக் கொண்டு பண்டாவின் மீது தாக்குதல் தொடுத்தார் அவர். பண்டா தமிழ்ப் பரம்பரை என்பதாலேயே சிங்கள இனத்தை விற்க முனைந்து விட்டார், தமிழருடன்மாநில சுயாட்சி பற்றிப் பேசி சிங்கள பௌத்த பாரம்பரியத்தையே குழிதோண்டிப் புதைக்க முற்படுகிறார் என்றெல்லாம் கடுமையாக எழுதிற்று சியரட்ட. பண்டா தூய சிங்கள பௌத்தர் அல்ல ஒரு தமிழர். ஆனால் நானே தூய சிங்கள பௌத்த வம்சத்தவன். எனவே எனது வழிநடத்தலின் கீழேயே தூய சிங்களபௌத்தர் அணிதிரள வேண்டும் என்ற வகையில் அமைந்தன ஜே.ஆரின் பேச்சும்எழுத்தும்.

இதைக் கண்டு ஆத்திரமுற்ற ஜேம்ஸ் ரத்தினம் ஜே.ஆரின் பரம்பரையைப் பற்றிப் பதிலடியாக ஒரு ஆய்வை வரைந்தார். பண்டாவை தமிழ்ப் பரம்பரையினர் எனத் தாக்குவதற்கு ஜே.ஆருக்கு எந்த அருகதையுமில்லை எனவும், ஏனெனில், அவர் 2500 வருடப் பழமைவாய்ந்த தூய ஆரிய சிங்களபௌத்த சந்ததியில் தோன்றியவரல்ல எனவும், ஆனால் 18ம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்து இலங்கை வந்து வெல்கம எனும் கிராமத்தில் குடியேறிய ஒரு தமிழரின் மகனான தம்பி முதலியார் என்பவரின் கொள்ளுப் பேரனே ஜே.ஆர் எனவும், தகுந்த ஆதாரங்களுடன் நிறுவினார் ஜேம்ஸ் ரத்னம். (Tambi Mudaliyar's Legacy. Tribune 30.8.1957) ஜே.ஆரின் கொள்ளுப்பாட்டனாரான தம்பி முதலியாரின் தந்தை ஆச்சாரி வகுப்பைச் சேர்ந்த சுத்தத் தமிழர்.

தம்பி முதலியார் மிகச்சிறு குழந்தையாக இருக்கையிலேயே இந்தத் தமிழ் ஆச்சாரி இறந்து போய்விட்டார். இதனால் இளமையில் வறுமையில் வாடிய இப்பையன் 14 வயதில் கொழும்பில் ஒல்லாந்தப் படையதிகாரியாக இருந்த கேணல் டிரைபேக் என்பவரது வீட்டில் வேலைக்குச் சேர்ந்தான். பின்பு இப்பையன் ஒல்லாந்தரின் உள்ளூர்க் காலாட்படையில் ஒரு ஆராச்சியாக நியமிக்கப்பட்டான்.

ஒல்லாந்தருக்கு எதிராக பிரிட்டிஷார் கொழும்பை நோக்கிப் படையெடுத்த பொழுது தம்பி முதலியாரை ஒரு ஒற்றனாக பிரிட்டிஷ் பகுதிக்குள் அனுப்பினர் ஒல்லாந்தர். ஆனால், பிரிட்டிஷார் தம்பி முதலியாரைப் பிடித்து விட்டனர். முதலியாருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பிரிட்டிஷாருக்கு ஒல்லாந்தரைப் பற்றி உளவு பார்த்துத் தருவதாக தம்பி முதலியார் மன்றாடியதன் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார். இதன் பின் பிரிட்டிஷாரின் சிறந்த ஒற்றனாக செயல்பட்ட தம்பி முதலியார் சிங்கள பிரதானிகளின் பாணியில் தொன் ஏட்றியன் விஜயசிங்க ஜெயவர்த்தனா என தனக்குப் பெயர் சூட்டிக்கொண்டார். ஒல்லாந்த மொழி பேசியவர் இப்போது ஆங்கிலம் கற்றுக்கொண்டார். ஒல்லாந்த திருச்சபையிலிருந்து அங்கிலிக்கன் சபைக்கு மதமும் மாறிக்கொண்டார்.

15.05.1950அன்று டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகையில் வின்சன்ட் டி சில்வா தம்பி முதலியாரைப்பற்றி வருமாறு எழுதினார். ''பிரிட்டிஷாருக்கு என்றும் இவரைப் போல் ஒரு விசுவாசி இருந்தது கிடையாது. அது போல சிங்களவருக்கு இது போன்ற ஒரு பச்சைத்துரோகியும் இருந்தது கிடையாது. பிலிமத்தலாவ, எகலப்பொல போன்ற துரோகிகள் தவறான வழியில் மீண்டும் சிங்கள ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவே முயற்சித்தனர். ஆனால் ஏட்றியன் ஜெயவர்த்தனா (தம்பி முதலியார்) பிழைப்புக்காக துரோகத்தில் ஈடுபட்ட ஒரு நபராவார்.'' தம்பி முதலியாரின் மகன் தொன் ஏபிரகாம் ஜயவர்த்தனா. அவரது மகன் ஜேம்ஸ் அல்பிரட் ஜெயவர்த்தனா. இவரது மகன் யூஜின் வில்பிரட் ஜயவர்த்தனா. இவர்கள் அனைவரும்கடும்கிறிஸ்தவர்கள். யூஜின் வில்பிரட்டின் மகனே ஜே.ஆர். ஜயவர்த்தனா. அரசியலில் இறங்கும்வரை இவரும்கிறிஸ்தவரே.

''தம்பி முதலியாரின் வாழ்க்கை எல்லா இலங்கையருக்கும்ஒரு பாடம். குறிப்பாக தன்னையே இறுதியில் எரித்துவிடும் என அறியாமல் இப்போது நெருப்புடன் விளையாடப்போவதாகப் பயமுறுத்தும் முதலியாரின் கொள்ளுப்பேரனான ஜே.ஆருக்கு அது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்.''

''....இலங்கையில் இருக்கும் மனிதர்களுக்குள் ஜெயவர்த்தனாவே தமிழருக்கு எதிராக ஜிகாத் (புனித யுத்தம்) நடத்துவேன் எனக்கூறுவது என்ன கேலிக்கூத்து'' என எழுதினார் ஜேம்ஸ் ரத்னம்.

''இலங்கை நாளை ஏதோகாரணத்தால் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தால் அங்கு நபிகள் நாயகத்தின் புதல்வருள் ஒருவராக ஜூனியஸ் றிச்சட் ஜயவர்த்தன இருப்பது ஒன்றும் அதிசயிக்கத்தக்கதல்ல. அப்படியான அரசியல்வாதிக்குத் 'தான்' என்பதே எல்லாம். நாடு என்பது துச்சம். இப்படியானவர்கள் ஆபத்தானவர்கள். கடவுள்தான் எமது நாட்டைக் காப்பாற்ற வேண்டும்'' என தமது ஆய்வை முடிக்கிறார் ஜேம்ஸ் ரத்னம்.

''எங்கே நமது தமிழ் மூலம் தெரிந்து விடுமோ என்ற மனச்சஞ்சலமும்'', ''என்னில் தமிழ்க் கலப்பு உள்ளது'' என்ற அக அரிப்பால் ஏற்படுகின்ற ஒரு வகை இரண்டக ஆழ் உளச்சிக்கலும் தென்னிலங்கை வாழ் அரசியல்வாதிகள், அறிஞர்கள், இனவாதிகள் எனப் பலரை கடும் தூய சிங்களபௌத்த பேரினவாதிகளாக மாற்றினவோ என இவையும் இது போன்ற வேறும் சில வரலாறுகளும் எண்ணத் தூண்டுகின்றன.

உதாரணமாக இன்று மிக முரட்டுத்தனமான சிங்கள இனவாதத்தை உமிழ்ந்து கொண்டிருக்கும் கலாநிதி நளின் த சில்வாவைக் குறிப்பிடலாம். இவரது குடும்பத்தவர் தமிழகத்தின் தென்கிழக்கு, மற்றும் கிழக்குக் கரைப்பகுதியிலிருந்து 18ம் அல்லது 19ம் நூற்றாண்டில் இலங்கையில் வந்து குடியேறிய பட்டணவர் வகுப்பைச்சேர்ந்த தமிழர். இதை அவரிடம் ஒருமுறை நான் கேட்டபோது மிகச் சங்கடப்பட்டார். ஆனால் சமாளித்துவிட்டார்.

இன்றைய நிலையில் நாம் இப்படியாக சிங்களப் பேரினவாதத்தின் சில உளவியல் உட்கிடைகளையும் ஆராய்வது பிரச்சினையை சற்று ஆழமாகப் புரிந்து கொள்ள உதவும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர் யார்?

இலங்கையின் இன முரண்பாட்டையும் அதன் விளைவாக மேலெழுந்த ஆயுதப் போராட்டத்தையும் அரசியல் ரீதியில் ஜனநாயக மரபுகளின் அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கு சுதந்திரமான மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் தேவை என்பது இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும்.

அரசுக்கும்தமிழ்மக்களுக்குமிடையிலான நம்பிக்கை நாளுக்கு நாள் வலுவிழந்து கொண்டு செல்கின்றதோடு அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையேயான இராணுவ முரண்பாடும் நாளுக்கு நாள் ஆழமாகிக் கொண்டு செல்கிறது. எனவே, இதன் விளைவாக இரு சாராருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களையும், நம்பிக்கையின்மையும் போக்கி அரசியல் நடைமுறைகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான உத்தரவாதத்தை வழங்குவதும் அதற்குரிய அரசியல் நடைமுறைகளைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் முன்னெடுப்பதும் அவசியமாகும். அதற்குத் தேவையான நிபுணத்துவமும் அத்தோடு பேச்சுவார்த்தைகளின் மூலம் காணப்படும் இணக்கப்பாடுகளை நேர்மையான முறையில் இருசாராரும் நடைமுறைப்படுத்துவதை உத்தரவாதப்படுத்தக்கூடிய தகுதிகளைக் கொண்ட ஒரு சக்தியாக இம்மூன்றாம் தரப்பு விளங்குவதும்அவசியமாகும். தனது சுய எதிர்பார்ப்பு ஏதுமற்ற *(Self Interest)* இப்பிரச்சினையின் ஜனநாயக ரீதியான தீர்வை மட்டுமே நோக்கமாகக்கொண்டு செயற்படக்கூடியதாக இந்த மத்தியஸ்தம் அமைவது அவசியமான ஒன்றாகும்.

இம்மூன்றாம் தரப்பு இந்தியாவாகவே இருத்தல் வேண்டும் என த.வி.கூட்டணியும் ஈ.பி.டி.பியும் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளன. ஈறோஸ், புளொட் போன்ற அமைப்புக்கள் இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகளின்கூட்டு மத்தியஸ்தமாக அமைதல் வேண்டும் எனக்கூறியுள்ளன.

இந்தியா தெற்காசியாப் பிராந்தியத்தில் ஒரு பெரிய நாடாகவும், பலமான நாடாகவும் திகழ்கின்றது. ஆயினும், ஒரு பலமான நாடு என்பதன் காரணமாக அதனது பாதுகாப்பு உட்படப் பிராந்திய அரசியல் தேவைகளுக்கு *(Geo Political Asoiration)* முன்னுரிமையளிப்பதாகவே அயல்நாடுகளுடனான அதனது கடந்தகால உறவுகள் இருந்து வந்துள்ளன.

உதாரணமாக 1964ம் ஆண்டின் சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையை எடுத்துக் கொண்டால் அன்று நிலவிய இந்திய - சீன முரண்பாடுகளும் அதன் காரணமாக இலங்கை அரசுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதன் தேவையை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்தது. இதன் மூலம் இந்நாட்டில் நாடற்றவர்களாக்கப்பட்ட மலையகத் தமிழர்களில் இலட்சக்கணக்கானவர்கள் தாயகம் திரும்புதல் *(Repatriation)* என்னும் போர்வையில் பலாத்காரமான நாடுகடத்தலுக்கு *(Deportation)* உட்படுத்தப்பட்டதன்விளைவாகத்தமது பிறப்புரிமையை இழந்ததோடு தம்உழைப்பையே நம்பி வாழ்ந்து வந்த இம்மக்கள் இந்தியாவில் அகதிகளாக்கப்பட்டு கௌரவமிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மலையகத் தமிழர்களின் பங்குபற்றுதலோ அவர்களின் இணக்கமோ இல்லாமல் இலங்கை - இந்திய அரசின் தலைவர்களின் உடன்படிக்கையாகவே இது அமைந்தது. இலங்கை அரசுத் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் பேரினவாத எதிர்பார்ப்பையும், இந்திய அரசின் பிராந்திய அரசியல் தேவையையும்மட்டுமே இவ்வுடன்படிக்கை பூர்த்தி செய்துகொண்டது.

இதேபோல் தமிழ் ஆயுதப்போராட்டக் குழுக்களுக்கும் பாரிய அளவில் பக்கச்சார்பான உதவிகளைப் புரிந்ததன் மூலம் இம்முரண்பாட்டின் ஒரு மூன்றாம் சக்தியாக இந்தியா ஈடுபட்டிருந்தது எனக் கூறினால் அது தவறாகாது. இலங்கையின் இன முரண்பாட்டை தீர்ப்பது தான் இந்தியாவின் ஒரே குறிக்கோளாக இருந்திருக்குமேயானால் அது தனது அரசியல் பலத்தின் மூலமான அரசியல் அழுத்தங்களை முழுமையாக பிரயோகித்து இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கான பங்களிப்பைச் செய்திருக்கலாம். ஆனால் இதிலும் இந்தியா பிராந்திய அரசியலின் தேவையை முன்நிலைப்படுத்தியே செயற்பட்டது என்பது தெளிவாகத் தெரிகின்ற விடயமாகும். இலங்கை -இந்திய உடன்படிக்கையை வாசிக்கும் போது இது மிகத் தெளிவாகப் புலனாகிறது. இவ்வுடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் போது இலங்கை அரசை தனது கடமைப்பாட்டை நிறைவேற்றுமாறு செய்யக்கூடிய தகுதியை இந்திய அரசு கொண்டிருக்கவில்லை. இவ்வுடன்படிக்கையை விடுதலைப் புலிகள் மீறி செயற்படப்போகின்ற நிலைமைகள் தெரிந்திருந்தும் அவர்களை இவ்வரசியல் நடைமுறைகளின் வரையறைக்குள் இட்டுச் செயற்படுதவற்குத் தேவையான சூழ்நிலைகளை உத்தரவாதப்படுத்தவும் முடியவில்லை. இந்திய இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய ஜனநாயகக்கடமைப்பாடு கொண்டதாக இந்தியா செயற்படவுமில்லை. இவ்வுடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனநாயக அரசியல் நடைமுறைகளை விட இராணுவ பலத்திலும், இராணுவ நடைமுறைகளிலுமே அதிக நம்பிக்கை கொண்டு செயற்பட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது. இதன் மூலம் இவ்வகையான முரண்பாடுகளைத்தீர்ப்பதில் மத்தியஸ்தராகச்சேவைசெய்வதற்குத் தேவையான போதிய நிபுணத்துவமோ அல்லது சுயஎதிர்பார்ப்பற்ற தன்மையோ இந்தியாவிடம் இல்லையென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்தியாவின் ஈடுபாடு தொடர்பாக தென்னிலங்கையில் நிலவும் மனநிலையையும், விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும்இடையில்நிலவும்முரண்பாட்டையும்மறந்துவிட முடியாது.

இலங்கையின் எல்லா அரசியல்நடவடிக்கைகைகளிலும் இந்தியாவின் இந்தப் பிராந்திய அரசியல் எதிர்ப்பார்ப்பைப் புறக்கணித்து செயற்படமுடியாது என்பது ஒரு உண்மை நிலையாகும். இலங்கையின் சர்வதேச உறவு தொடர்பான முதற்கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமும் இதுவாகும்.

இதனடிப்படையில் நோக்கும் போது இலங்கையின் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதில் இந்தியாவிற்கு பாதகமெனக் கருதாத வகையில் இலங்கை நடந்துகொள்வது உத்தரவாதப் படுத்தல் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. ஆனால் இந்தியாதான் மத்தியஸ்தராக செயற்படவேண்டுமென்பது இந்த நடைமுறையில் சாதகமான பலனை ஏற்படுத்திப் பிரச்சினையின் தீர்விற்கு உதவும் என்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைப்பாடு அல்ல என்பதைத் த.வி.கூட்டணி உட்பட இந்நிலைப்பாட்டிலிருந்து செயற்படும் தமிழ்க் கட்சிகள் உணர்ந்து கொள்வது நல்லது.

எனவே பேச்சுவார்த்தைக்கான மத்தியஸ்தமாக பக்கச்சார்பற்ற தகுதியும், தகைமையும் கொண்ட இருசாராரினதும் நம்பிக்கையைப் பெறக்கூடிய சர்வதேச நிறுவனத்தை செயற்படவைப்பது தான் சிறந்தாகும். இம்முயற்சியின் இந்தியாவின் தலையீடு தேவை எனக்கருதினால் பலநாடுகளைக்கொண்ட கூட்டுக் குழுவை மத்தியஸ்தமாகக் கொண்ட ஒரு அமைப்பில் இந்தியாவும் அதில் ஒரு நாடாக சமபங்காளியாக இருந்து செயற்படலாம். இதன் மூலமே தனது பிராந்திய தேவைகளுக்கு மாறான தீர்வுகள் மேற்கொள்வதைத் தடுத்துக் கொள்ளும் அதேவேளையில் இம்முயற்சியின் வெற்றிக்குத் தடையாக செயற்படுவதையும் இந்தியா தவிர்த்துக் கொள்ளும் வகையில் பங்காற்றுவது உறுதிசெய்யப்படல் முடியும்.

# பொறுப்பற்ற குற்றச்சாட்டு!

ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தின் போது நடந்ததாக சரிநிகர் (ஓகஸ்ட் 29) பத்திரிகையில் ''தமிழ்க்கட்சிகளும்தமிழ் மக்களது போராட்டமும்'' என்ற தலைப்பில் வெளிவந்த விடயங்கள் தொடர்பாக இக்கடிதத்தை எழுதுகிறேன்.


அச்செய்தியில் குறிப்பிட்டுள்ள விடயங்களில் எந்தளவு உண்மைத் தன்மையிருக்கிறதென்பது ஒரு புறமிருக்க, அச்செய்தியை நானே தங்கள் பத்திரிகைக்கு எழுத்துப் பிரதியாக வழங்கியுள்ளதாகவும் அதை உறுதிப்படுத்தும் வகையில் அந்த எழுத்துப் பிரதியை 'சரிநிகர்' ஆசிரியர் பீடம் தங்களிடம் காட்டியதாகவும் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் ஈரோஸ் செயலாளர்சுதா மாஸ்ரரும்அண்மையில் கூடி தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தின் போது என்மீது குற்றம்சுமத்தினர்.

பொறுப்பற்ற விதத்தில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் இந்தக் குற்றச்சாட்டைஎன் மீது சுமத்த முன்வந்திருக்க மாட்டார்கள் என நம்புகிறேன். அத்தோடு சரிநிகர் பத்திரிகையின் அந்தரங்கக் கோவைகளை அவிழ்த்துப் பார்க்குமளவிற்கு சரிநிகரோடு மிக நெருக்கமான பங்காளிகளான இவர்களிடம் இச்செய்தியோடு எவ்வித தொடர்பும் இல்லாத எனது பெயரை 'பயன்படுத்தியுள்ளமை நான் சார்ந்த' கட்சிக்கும் எனது பெயருக்கும் நம்பகத் தன்மைக்கும்களங்கம் ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, எழுத்து மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ அல்லது வேறு' வழிகளிலோ என்னால் வெளியிடப் படாத ஒரு செய்தியில் என் பெயரைப் பயன்படுத்தியது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன். அத்துடன் எனது இக் கடிதத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரித்து இதன் உண்மைத் தன்மையை வெளியிட்டு சரிநிகர் பத்திரிகா தர்மத்தைப் பாதுகாக்கும் என நம்புகிறேன்.

***ஐ.மாணிக்கப்பிள்ளை***
*பிரதி செயலாளர்*
*ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி*

*ஆசிரியர் குறிப்பு:*
*நீங்கள் குறிப்பிட்டது போல் ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களோ, ஈறோஸ் செயலாளர் சுதா மாஸ்டர் அவர்களோ இச்செய்தி தொடர்பாக நேரிலோ அல்லது கடித மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு எம்மிடம் எதுவும் கேட்டது மில்லை.நாங்கள் எதையும் காட்டியது மில்லை. உங்கள் பெயரைப் பயன்படுத்தியதுமில்லை.*
*நீங்கள் இவ்வாறான எந்த விடயத்தையும் எங்களுக்கு அனுப்பாத போது அவர்கள் கேட்டிருந்தாலும் நாம் எப்படிக் காட்டியிருக்க முடியும்? தவிரவும் அப்படி அவர்கள் கேட்டிருந்தாலும் காட்டுவதற்கு நாங்கள் கடைப்பிடிக்கும் பத்திரிகா தர்மம் இடம் கொடுக்கப் போவதில்லை. இந்நிலையில், ஐந்து தமிழ் கட்சிகளும் பொதுவான பெயர் ஒன்றை வைப்பதிலேயே இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும் போது- சரிநிகர் செய்தியில் குறிப்பிட்ட கூட்டத்துக்குப் பின்னர் நடைபெற்ற கூட்டமும் முடிவின்றியே ஒத்தி வைக்கப்பட்டது தெரிந்த செய்தி. - உங்களுக்குத் தவறான ஒரு தகவலைச் சொல்லி அக்கூட்டத்தினையும் சீர் குலைக்கும் வகையில் அவர்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டுள்ளார்கள் என்பதை நாங்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.*

*ஆ-ர்*



# முஸ்லிம்கள்: போராளிய...
# வரிதந்தார்கள் உளவு...

சரிநிகர்104வது இதழ்படித்தேன். உரிய நேரத்தில் எமக்கு பத்திரிகை கிடைப்பதில்லை. அதனால் சில கருத்துக்களை எழுதுவதிலும் தாமதம் ஏற்பட்டுவிடுகிறது. மேற்படி சரிநிகரில் புலிகளின் கிழக்குப்பிராந்திய அரசியல்பொறுப்பாளர்துரையுடனான செவ்வி எனக்குள்பல எதிர்வினைகளை தோற்றுவித்தது. பொதுவாகப் புலிகள் முரண்பட்ட கருத்துக்களை முன்வைப்பது புதிய விடயமல்ல. முஸ்லிம் மக்கள்தொடர்பாகசரிநிகர் கேட்ட கேள்வியொன்றிக்கு துரை அளித்த பதில் புலிகளின் கபட நாடகத்தைத் தோலுரித்துக் காட்டிற்று.

முஸ்லிம்களின் வெளியேற்றத்தை தற்போது புலிகள் உணர்ந்து அது தவறென்பதை ஒத்துக்கொண்டுவருவது நல்ல சகுனம்தான். எனினும், வடகிழக்கில் முஸ்லிம்களை வெளியேற்றியதற்கு பிரதானமாக அவர்கள் முன்வைக்கும் வாதம் நகைப்பிற்கிடமானது. போராட்டத்தை அடக்குவதற்கு சிங்களப் பேரினவாதம் முஸ்லிம்களை பாவித்ததென்பதும், முஸ்லிம் பெயர்களில் சிங்களவர்களைக்கூட ஊக்குவித்த சம்பவங்களும் அன்று நடந்தன என்பதாக துரை குறிப்பிடுகின்றார்.

இது தொடர்பாக துரை அவர்களுக்கு எழுதுவது அவசியமென கருதுகிறேன். கடந்தகால வரலாறு தெரியாத அல்லது வரலாற்றை மறந்து விட்ட புலிகள் பொறுப்பற்ற முறையில் முஸ்லிம் மக்கள் மீது அபாண்டம் சுமத்துவதை இனிமேலாவது தவிர்த்துக்கொள்ளலாம்.

முஸ்லிம் விரோத போக்கு புலிகளிடம் மட்டுமே வளர்ந்து விட்ட வன்மம் அல்ல. 1880களில் தெற்கில் படித்த முஸ்லிம் புத்திஜீவிகள், இலங்கை முஸ்லிம்கள் தனித்துவமான சமூகம் எனவே எமக்கென தனியான சட்டசபை பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டுமெனக் கோரிக்கை எழுப்பினார்கள். அன்றைய பிரதிநிதிகளாக இருந்த தமிழ் தலைவர்களானஇராமநாதன்போன்றோர் இலங்கை முஸ்லிம்கள் தமிழர்களே. அவர்களுக்குத் தனியான பிரதிநிதித்துவம் தேவையில்லையெனவாதாடினார். 1915இல் சிங்கள - முஸ்லிம் வன்முறை மூண்ட போது பிரிட்டிஷ் ஆட்சியாளர் சிங்களவன்முறையாளர்களை (பெர்ணான்டோ விஜயசேகர, என்.எஸ் பெர்ணான்டோ, எட்மன்ட்ஹேவா விதாரண) சிறையில் அடைக்க, அந்தப்பேரினவாதிகளுக்காக இங்கிலாந்து சென்று வாதாடி முஸ்லிம் விரோத நெருப்பில் நெய்யூற்றியவர் மகாமேதை அதே இராமநாதன்தான்.

பேரினவாதத்துடன் சேர்ந்து போராட்டத்தை முஸ்லிம்கள் காட்டிக்கொடுக்கிறார்கள் என்ற குற்ற...
நகைப்பிற்கிடமானது...
தெரிந்து கொள்ளவே...
பழையதைக் கிளறுக்...
அதன்பின் 19ம் நூற்...
யில் ஆறுமுகநாவ...
இயக்கமொன்று ...
சைவவேளாள சித்த...
நாட்ட முயற்சி எடு...
வேளாளத்தை தூ...
உயர்ந்தோராகவும்...
கணிக்கப்பட்டனர்.
கடந்த காலம் தொ...
புக்கள் முஸ்லிம்க...
மானசமூகமாக ஏற்...
எனவே அவர்கள...
ஆட்சி செய்யவே...
கட்டுக்கோப்பிலிரு...
தாமும் ஒரு தேசிய...
முயன்ற போதெ...
''தொப்பிபிரட்டிக...
இழிவு படுத்தி வ...
படிக்கும் போது,...
கூடியதாய் இருக்கு...
வடக்கு முஸ்லிம்க...
நடந்து கொண்ட...
தனத்தை அவர்க...
முடிய... முஸ்...
பேரின...த அர...
கெதிராய் பயன்ப...
களையும் பயன்ப...
றது. தற்போதைய...
அமைப்புக்களை...
பீரங்கியாகத்தானே...
றது. பொலிசார், சி...
விசுவாசமான...
சேர்ந்ததோராகத்...
கடமையாற்றி வ...
விரோத சக்திகள்,...
யோர் இவர்களுக்...
துணையாகத்தான்...
ஏன் அப்போது பு...
அரசுடன்இணைந்...
போராட்ட அமை...
போராடியவர்கள்...
சேர்ப்பது? அப்போ...
தத்தை... ன் தீவி...
எங்கே தொலைத்த...
மனிதன் அரச ப...
மாக இருந்தால்...
அவனுக்கு மட்டு...
பட்டு வந்தது. அ...
தையோ கிராமத்...
டித்து அவர்களை...
தில்லை.

ஆனால், முஸ்லிம்...
டுக்கிற நடவடிக்...
போது விடுதலை...
செயல்பட்டபோது...

# அபூநிதால் நடுநிலைய...

''சரிநிகர் சமானமாக வாழ்விமிந்த நாட்டிலே'' என்னும் பாரதியின் சுலோகத்தை ஏந்தி பவனி வரும் சரிநிகரே! உனது படைப்புகள் அனைத்தும் பிரமாதம், தகவல்களை ஆய்வுக்கு உட்படுத்தி பிரசுரிப்பதில் சரிநிகருக்கு நிகர் எதுவுமில்லையென்றால் அதில் மிகையாகாது. எனினும், 'சொல்வதைத் தவிர வேறு வழியில்லை' எனும் பகுதியில் வரும் விடயதானங்கள் மனதை உறுத்துவதாக அமைந்து வருகின்றன.

கட்டுரையாளர் எழுதவேண்டும் என்பதற்காக எழுதுகின்றாரா? அல்லது முஸ்லிம்களுக்காக வக்காலத்து வாங்குகின்றாரா? எதுவுமே புரியவில்லை. கட்டுரையைப் படிக்கும் போது அபூநிதால் ஓர் இஸ்லாமியர் என்பது எமது அகக் கண்ணில் புலனாகிறது.

இதழ் - 104இல் தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்து வைப்பதில் அரசும், விடுதலைப் புலிகளும் ஏனைய ஆயுத அமைப்புகளும் அத்துடன் முஸ்லிம் சுயநலவாதிகளும் முன்னின்று பங்காற்றினர் எனக் குறிப்பிட்டு முஸ்லிம்கள் மீதான காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலைகள், ஏறாவூர் கிராமம் மீதான படுகொலை, பஸ் படுகொலைகள், காரைதீவில் முஸ்லிம் தொண்டர் படையினர் சுட்டுப்படுகொலை எனப் பட்டியலை எழுதியுள்ளார்.

கட்டுரையாளர் உண்மையிலே பக்கச்சார்பற்ற நடுநிலையாளராக இருந்தால் இக்கட்டுரையில் முஸ்லிம்களினால் தமிழர்கள்பட்ட துயரினை விரிவுபடுத்திக் காட்டியிருக்கலாம். ஆனால் இந்த விடயத்தில் அபூநிதால் நடுநிலை வாதியல்ல. அபூநிதாலின் பார்வைக்காகவும், வாசகர்களின் சிந்தனைக்காகவும், முஸ்லிம்களினால் தமிழர்கள் பட்ட அவஸ்தைகள் சிலவற்றை இத்தால் தருகின்றேன்.

- கல்முனை கரைவாகுப்பற்றில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட ஏழைத் தமிழர்கள் அம்மண்ணை விட்டுத் துரத்தப்பட்டு அவர்களுக்குச் சொந்தமான காணிகள் அபகரிக்கப்பட்டதுடன், கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் பிரதான வீதியில் எதிரும் புதிருமாக இருந்த நந்தீஸ்வரர் ஆலயமும் பிள்ளையார் கோவிலும் உருத்தெரியாமல் தரை மட்டமாக்கப்பட்டு அந்த இடங்களில் முறையே பள்ளிவாசலும், மதீனா பேக்கரியும் கட்டப்பட்டுள்ளன.
- கல்முனைபஸ்நிலையத்துக்கு தெற்கே அமைந்துள்ள பிள்ளையார் கோயில் இனக்கலவரங்கள் ஏற்படும் போது சிதைவுறுவதும், அதனை இந்துக்கள் புனரமைப்பதும் வருடாவருடம் காணக்கூடிய நிகழ்வாகும்.
- காரைதீவு மக்களும் கோயில்களும் அழிவுற்றமை. இ...
அம்மன் ஆலயம்...
- வீரமுனை மக்க...
பிள்ளையார் கோ...
தங்கியிருந்த ம...
வெட்டியும் சுட்...
நிகழ்வு.
- அக்கரைப்பற்...
மருதடி மாணிக்க...
மும் தரை மட்...
இவ்வேளையில்...
அமைந்திருந்த...
சேதமாக்கப்பட...
புலிகளால் உடை...
- மல்வத்தை, வ...
கல்முனை, வீரச்...
சேனை, அட்டப்...
போன்ற இடங்க...
துரத்தப்பட்டு உ...
பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ...ார்கள் ...ான்னார்கள்!

கமாகக் கருதாமல், ஒரு சமூகத்தின்துரோகமாகக்கருதி வடகிழக்கு முஸ்லிம்களை விரட்டியதற்கு, படுகொலை செய்ததற்கு, கொள்ளையிட்டமைக்கு புலிகள் என்ன காரணம் வைத்துள்ளனர். புலிகளே! தமிழ்க் குடிமகன் காட்டிக்கொடுத்தால் அவனை மட்டும் ''துரோகி''யாக்குவீர்கள். ஒரு முஸ்லிம்பேரினவாதத்துடன் சேர்ந்து உங்களுக்கெதிராய் செயற்பட்டால் அந்த சமூகத்தையே துரோகியாக்கி விரட்டுவீர்கள். வாழ்க உங்கள் ஜனநாயகம்!

முஸ்லிம் மக்கள் ஆரம்ப காலங்களில் போராட்டத்திற்கு செய்த உதவிகளை நினைத்துப் பாருங்கள். எமது வாலிபர்களும், போராளியானார்கள். வரி தந்தோம். சிங்கள இராணுவத்தின் நடவடிக்கைகள் பற்றி உளவு பார்த்து உங்களுக்கு உதவினோம். குறிப்பாக வட- கிழக்கில் நீங்கள் வளர்ந்த ஆரம்ப காலங்களில் முஸ்லிம் மக்கள் தான் உங்களைப் பெரிதும் ஆதரித்து அடைக்கலம் தந்தார்கள்.

ஏன் அண்மைக்காலமாய் அப்பாவி விவசாயிகளின் ட்றக்டர்கள், அன்றாடம் காய்ச்சிகளின்வண்டில்கள், மீனவர்களின் வள்ளங்கள்இவற்றையெல்லாம் பறித்துச் சென்றீர்களே, தமிழ் - முஸ்லிம் உறவை வளர்க்கின்ற இலட்சணம் இதுவா?

இவற்றை விட இன்னுமொன்றை அழுத்திக்கூற விரும்புகின்றேன். சிங்கள இராணுவம்தமிழ் மக்களை அழிக்கிறது, புலிகள் ஜனநாயகம் பேசிக்கொண்டு முஸ்லிம் - அப்பாவிச் சிங்கள மக்களை கொன்றொழிக்கிறார்கள். குறிப்பாக வட- கிழக்கில் முஸ்லிம்களின் பொருளாதாரத்தையும் முஸ்லிம் புத்திஜீவிகளையும், முஸ்லிம்களையும் திட்டமிட்டு அழித்து வருகின்றார்கள். தெளிவாகக் கூறப் போனால், இனச்சுத்திகரிப்பு (Ethnic Cleaning) செய்கிறீர்கள். பத்திரிகை அறிக்கைகள் விடும்போது முதலைக் கண்ணீர் வடித்து வெறித்தனத்தை மறைத்து நாடகமாடுகிறீர்கள். எனவே புலிகளாகிய நீங்கள் மட்டுமல்ல ஏனைய தமிழ்அமைப்புகளும், முஸ்லிம் விரோத நிலைப்பாட்டை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ளப்பாடுபட்டே வருகின்றன. முஸ்லிம்களின் கணிசமான அழிவுக்கும்படுகொலைக்கும் பின்னணியில் தமிழ் விடுதலை அமைப்புக்கள் பெரும் பங்கை நல்கி தங்கள் வீரத்தை(?) நிரூபித்துள்ளதை புள்ளி விபரமாய் தரமுடியும்.

எனவே புலிகள் செவ்விகள் வழங்கும் போது சற்று அவதானமாய் முஸ்லிம்கள் தொடர்பாய் கருத்து வழங்குவது நல்லது.

***ஒட்டமாவடி அறபாத்***

## ...?

❋ சம்மாந்துறையின் மையத்தில் அமைந்திருக்கும் தமிழ்க்குறிச்சி எனப்படும்தமிழர்கள் வாழ்ந்த பிரதேசம் அப்பகுதி முஸ்லிம்களின் தாக்குதலுக்குட்பட்டு அகதிகளாகத் துரத்தப்பட்டதுடன் அவர்களது உடைமைகளும், வணக்க ஸ்தலமான காளி கோயிலும் சிதைவுற்றதுடன் இன்று வரை இப்பிரிவு மீள்குடியேற்றம் பெறாமல் சாட்சியகமாக இருந்து வருகின்றது.

இச்சம்பவங்கள் எம் நாட்டில் துப்பாக்கிக் கலாசாரம் நிகழ்வதற்கு முன்பிருந்தே தொடர்ந்திருந்து வருகின்றது. சொல்வதைத் தவிர வேறு வழி தெரியாத அபூநிதால் இனிமேலும் கண்ணைத் திறந்து பக்கச் சார்பற்று எழுதுவார் என நினைக்கிறேன்.

வேண்டாம் இனவாதம்!

***இளைய நக்கீரன்***
*கொழும்பு*

## தபுதாரன் சொல்பற்றி அறிய ஆவல்

ஸ்ராலின் 'தபுதாரன்' என்ற அழகான செந்தமிழ்ச் சொல் தாரமிழந்த ஆணைக் குறிக்குமென எனக்குத் தெரியத் தந்தமைக்கு நன்றி. என் வரையறைக்குட்பட்ட வாசிப்பும் கேள்வியும் விதவை, அமங்கலி, வாழ்விழந்தவள், கைம்பெண் என்றவாறான சொற்களை பெண்கள் தொடர்பாகவும் தாரமிழந்தவன் என்ற விவரணத்தை ஆண்கள் தொடர்பாகவும் அறியத்தந்துள்ளன. தபுதாரன் என்ற சொல்லை எங்கும் படித்த நினைவுமில்லை, பேசிக்கேட்டதும் இல்லை. அதன் ஒலிப்பும் 'செந்தமிழ்' போலத் தெரியவில்லை. இச் சொல் எக்காலத்துத் தமிழ் இலக்கிய வழக்கில் இருந்தது என்பதனையும் அதன் தோற்றுவாய் பற்றியும் மேலும் தகவல்களைப் பெற ஆவலாயுள்ளேன்.

அபூ இஃப்திகார் அஹமட் புனைபெயர்களை நான் கொச்சைப்படுத்துவதாக வருந்தியுள்ளார். நானே புனைபெயர்களில் எழுதுகிறேன். எனது ஆட்சேபனை புனைபெயரில் எழுதுவது பற்றியதல்ல. புனை பெயராலேயே அறியப்பட்ட முக்கிய எழுத்தாளர்களுட் புதுமைப்பித்தனும் மஹாகவியும் கல்கியும் அடங்குவர். ஸ்தாலின், லெனின் என்பனவும் புனைபெயர்களே. புனைபெயர்கள், மொட்டைக் கடிதங்கள் எழுதுகிற பாங்கில் எழுதுவதற்குத் துணைபோவது வருந்தத்தக்கது.

இவ்வாறான பிரயோகத்தைப் புலம்பெயர்ந்தோர் ஏடுகள் பலவற்றில் கண்டுள்ளேன். தமிழக, ஈழத்து ஏடுகளும் விலக்கல்ல. கோழைத்தனத்துக்கு ஒரு கவசமாகப் புனைபெயரைப் பயன்படுத்துவது அதைக் கொச்சைப்படுத்தும் செயல்.

வில்வரத்தினத்தை விமர்சிக்க எவரும் முக்காடு போட்டுக்கொண்டு வர அவசியமில்லை. அவர் நேர்மையான விமர்சனத்தைத்தாங்கக்கூடிய கவிஞர். அவரது எழுத்தை விளங்கிக்கொள்ள முயலாமல், விமர்சனம் என்ற பேரில் புனைபெயரில் எதையாவது எழுதிவிட்டுப், புனைபெயரின் பின்னாற் பதுங்குகின்ற காரியம், புனைபெயரின் நியாயத்தை இழிவுபடுத்துகிற காரியம். இன்று வரை நான் வாசித்துள்ள தரமான ஆழமான பொறுப்பான விமர்சனங்களில் மிகப்பெரும்பாலானவை சொந்தப் பெயரிலேயே எழுதப்பட்டவை. புனைபெயரில் வருகிற விமர்சனங்களிற், தமது சுயஅடையாளமாக அதை நிறுவ முயற்சிக்கிறவர்களது எழுத்துக்கும் தமது சுயஅடையாளத்தை அதனால் மறைக்க முயல்கிறவர்களது எழுத்துக்கும் வேறுபாடு உண்டு. அ.இ.அ. தனது மனவருத்தத்தைப் புனைபெயரைத் துஷ்பிரயோகம் செய்கிறவர்கள் மீது திருப்புவது கூடப் பொருத்தமானது.

***சிவசேகரம்***
*லண்டன்*

## சாத்தான்களின் வேதம்!

சரிநிகர் இதழ் 102+103ல் மனோரஞ்சனின் பயணக்கட்டுரை தொடர்பான சுவிஸ் ரவீந்திரனின் விமர்சனம் படித்தேன். சரிநிகர் சமாதானத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் பாடுபடும் தனிநபர்களைக் கிண்டலடிக்கிறது என்ற விமர்சனத்துக்கு ஓர் சரியான பதிலாக இருக்குமென நினைக்கிறேன். மனோரஞ்சன் தன்னை முற்போக்கானவர், நடுநிலையானவரெனக் காட்டிக்கொண்டாலும் அடிமனதில்புலியெதிர்ப்பே ஊறியிருப்பதைக் கூர்ந்து கவனித்தால் புரியும். மனோரஞ்சன் பேசாமல் யுக்தியவை விட்டு விட்டு தினகரனில் சேரலாம்.

அடுத்து தினரகன் பற்றியும் சில கருத்துக்களை சரிநிகர் மூலம் தெரிவிக்கலாம் என நினைக்கிறேன். தினரகன், பத்திரகாதர்மத்தை கடைப்பிடிப்பதுதான் தான் என்பது போல பெரிதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. ஆசிரியர்தான் எல்லோருக்கும் புத்திமதி கூறுவதாக நினைத்து தமிழ் மக்களையும், அவர்கள் பண்பாட்டையுமே கிண்டலடிப்பதைத் தன் தலையாய பணியாகக் கொண்டுள்ளார் போல் தெரிகிறது. அண்மையில் ரூபவாஹினியில் ஒளிபரப்பான ஆயுபோவனில் தோன்றி தன் பொன்னான கருத்தை இப்படித் தெரிவித்தார். ''இலங்கையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இருப்பதால் சிங்களமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதே சரி.'' அடுத்து ஒகஸ்ட் 22 தினகரனில் ஆசிரியர் தலையங்கத்தில் கடைசிப்பந்தியில் யாழ் மக்கள் கந்தனின் கடாட்சத்தை மறந்ததாலேயே இவ்வளவு அனர்த்தங்கள் அந்த மண்ணில் நிகழ்வதாக எழுதியிருந்தார். அவர் தன்னைப் போல் சந்திரிகாவின் கடாட்சத்தைப் பெறுவதற்காக நல்லைக்கந்தனை யாழ் மக்கள் மறந்து விட்டார்கள் என எண்ணுகிறார் போலும். அரசியல் வாதிகளின் அருள் கிடைப்பதன் மூலம் ஆனந்தம் அடையலாம் என்பதற்காக தமிழ் மக்களை இழிவுபடுத்த வேண்டாம். இவர்களின் திறமையை சரிநிகர் இதழ் 90இல் ''பொதிசுமக்கிற'' எனும் பத்தியில் கண்டோம். அடுத்து புயல் ஹமீட் என்றொருவர். அரசியல்வாதிகளின் ஊதுகுழலாகச் செயற்படுவது எப்படி? என்று இவர் புத்தகம் எழுதுவதற்கு பொருத்தமானவர். இவர்களின் எழுத்துக்களை இவர்களின் அபிமானிகளால் கூடச் சகிக்க முடிவில்லை. சாத்தான் வேதம் ஓதுவது போல் பத்திரிகைச் சுதந்திரம், ஜனநாயகம் பற்றி இவர்கள் பேசுவது இருக்கிறது.

***திருக்குமரன்***
*வவுனியா*

## தவறு

சரிநிகர் இதழ் 105இல் 6ம் பக்கத்தில் ''ஆவது ஒன்றுமில்லை'' எனும் தலைப்பில் வெளிவந்த செய்திக்கான மறுப்பு: Paper Town இல் ஹிஸ்புல்லாஹ் எனும் வீதி RCDC ஸ்தாபனத்தினால் செய்யப்படவுமில்லை, ஒட்டமாவடியைச் சேர்ந்த எவரும் எங்களது ஒப்பந்தக்காரர்களாய் இல்லை, நான் அறிந்தவரையில் இப்பாதை 1993ம் ஆண்டு ஒட்டமாவடி பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டதாக அறிகின்றேன்.

மேலும் RCDC ஸ்தாபனம் வேலைகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடங்கியது 1995ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆகும். மிகவும் நேர்மையான முறையில் 300 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட வேலைத்திட்டங்களை செய்து கொண்டிருக்கும் எங்கள் ஸ்தாபனத்தின் பெயருக்கு இப்படியான தகவல்கள் களங்கத்தை ஏற்படுத்தும். எனவே இவ்வறிக்கையை பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***என்.பி.ரஞ்சன்***
*மாவட்ட இயக்குநர்,*
*மட்டக்களப்பு*

## செங்கோல் = சிவப்பு + கோல் ஒரு மோசமான கவிதை

இதழ் 104ல் வெளிவந்த செங்கோல் = சிவப்பு+கோல் என்ற கவிதை வெறும்புலி எதிர்ப்பு வகைப்பட்டது. புலிகளை கொலைகாரக் கும்பலாக கொடூரமாக சித்திரிக்கிறது கவிதை. தற்கொலைப் படை பற்றிய அவரது பார்வை மனித உயிரியை வெறும் பண்டமாக்கியிருக்கிறது. அதுவும் தன்னளவில் உயர்ந்த உணர்வு நிலையைக் கொண்டுள்ள கவிஞன் என்பவன் (இன்னும் சொல்லப்போனால் கவிஞன் பற்றி அதீத பிம்பங்கள் ஏற்படுத்தமுனையும் கவிஞர்களுள் ஆத்மாவும் ஒருவர்) இப்படிப் பார்வை கொண்டது விநோதமாக உள்ளது. இளமையின்சாவு எவ்வளவு கொடூரமானது. தான் வெடித்துச் சிதறப்போவது நிச்சயமானது என்பதைத் தெரிந்துகொண்டே செயற்படும் ஒரு மனித ஜீவியின் உணர்வு எந்தளவு தூரம் கொந்தளிப்பானதாயிருக்கும் என்பதைப்புரிந்து கொள்வதற்கு உயர்ந்த மனிதாபிமானம் என்பதெல்லாம் கூடத் தேவையில்லை. இயந்திரவகைப்பட்டு சுவிச்சை அமுக்கிவிட புறப்படும் பண்டமா தற்கொலைப் போராளி? ஒரு கவிஞனுக்கு பாரபட்சமான உணர்வு ஏற்படவே கூடாது.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் -சமூக சாராம்சத்தின் பிற்போக்குத்தனங்களோடு கூடவே வளர்ந்த - விளைபொருள் புலிகள். வெறும் புலி எதிர்ப்பை மையப்படுத்தியவர்கள் எல்லோருமே புலியை எதிர்க்கப் புறப்பட்டு தமிழ் மக்களின் எதிரியாகிப் போனதே வரலாறு. தமிழ் மக்களின் நலன் புலிகளின் போராட்டத்தோடு பின்னிப்பிணைந்திருப்பதே இதற்குக் காரணம். என். ஆத்மாவும் வெறும் புலி எதிர்ப்பில் கிளம்புவதா, புலிகளின் ஜனநாயக மறுப்புகள், முஸ்லிம்கள் மீதான புலிகளின் தமிழ்ப் பேரினவாத நடவடிக்கைகள் என்பவற்றுக்கு எதிராக தன்னை நிலைப்படுத்துவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார். இதை அவர் தேர்வுசெய்வதைப் பொறுத்தே ஒரு நல்ல கவிஞனை உருவாக்கித் தரும் பாத்திரத்தை வரலாறு ஏற்கும். வெறும் புலி எதிர்ப்போடு நின்றால் தன்னையறியாமலே படிப்படியாக இனவாத சகதியில் மூழ்கிப் போவதும் ஆத்மாவுக்கு தவிர்க்க முடியாமல் போகலாம்.

ஒரு ஒடுக்கப்படும் இனத்தின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறும் புலிகள் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிகளை ஒடுக்குவது என்பது கோட்பாட்டு முரண் மட்டுமல்ல, உணர்வு ரீதியில் சகித்துக்கொள்ளவும் முடியாத ஒன்று. இதில் பாதிக்கப்படும் இனத்தின் மன உளைச்சல்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டியதுதான். அதை பிரதிநிதித்துவப்படுத்துவதில் ஒரு கவிஞனுக்கு பக்குவம் தேவை. உணர்வுகளை ஆழமாக ஊடுருவும் படைப்பாற்றல் கொண்ட என். ஆத்மா இந்தப் பக்குவத்தை வரித்து கொள்வார் என எதிர்பார்ப்போமாக!

***ரவீந்திரன்***
*சுவிஸ்*

## வாழ்க முஸ்லிம் காங்கிரஸ் மலர்

கேள்வி: ''பிழைநிகர் சமானமாக பிழைப்பமிந்த நாட்டிலே'' (பாரதி மன்னிக்க வேண்டும்) என்ற இலட்சியத்துடன் ஒரு பத்திரிகை நடாத்தினால் எப்படி இருக்கும்?

பதில்: ''ஒரு குறிப்பிட்ட பத்திரிகையின் போக்கை மனதில் வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியை கேட்பது போலிருக்கிறது! முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் கையில் ஒரு துவக்கைக் கொடுத்து ''..... கொல்வதைத்தவிர வேறு வழியில்லை!'' என்று பொறுப்பற்ற விஷமத்தனத்தோடு கூடிய காட்டூன்'' கூட போடலாம். எதற்கும் ''இனசமத்துவமும்ஐக்கியமும்'' என்ற முற்போக்கு முகமூடியை போட்டுக்கொண்டு நீங்கள் எழுத வேண்டும்! இருக்கவே இருக்கிறது. எழுத்துச்சுதந்திரம்!!

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் 14வது ஆண்டு மலரில் மேற்படி கேள்வியும் தர்வேஷ் ஞானியாரின் பதிலும் பார்த்து அழுவதா, சிரிப்பதா என எனக்கு விளங்கவில்லை. ஒரு தனிப்பட்ட விமர்சகர் மீதுள்ள கோபத்தை வைத்துக்கொண்டு, ஒரு நடுநிலைப் பத்திரிகை மீதே அபாண்ட விரோதக்கருத்தைக் கூறுவதற்கு தர்வேஷ் ஞானியாரின் பத்திரிகா தர்மத்தில் இடமிருக்கிறது போலிருக்கிறது. நானும் ஒரு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளன் தான். இப்படியான சுயாதிகார, சுயநலமிக்க போக்குகள் என்போன்ற எத்தனை ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் ஆதரவாளர்களைக் கட்சி ஆதரவிலிருந்து விடுவிக்கப் போகிறதோ? காங்கிரசுக்கே வெளிச்சம்! 15 ரூபா கொடுத்து அப்பத்திரிகையை வாங்கிய என்போன்றவர்களுக்குஇதுவும் வேண்டும், இன்னும் வேண்டும். வாழ்க முஸ்லிம் காங்கிரஸ் மலர்!

***எம்.எஸ்.எம்.பாயிஸ்***
*காத்தான்குடி*

## சிவசேகரத்தின் குறிப்புகள் பயன்மிக்கவை

இதழ் 104ல் சிவசேகரம் அவர்கள் எழுதிய வி.ரி.தமிழ்மாறன் அவர்களுடைய தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் - மோதல்களும் தீர்வுகளும் என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களில் உடன்படமுடியாத பக்கங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார். இது மிகவும் கனதி வாய்ந்ததும் கருத்து ஆழமானதுமாகும். பல உண்மைகளை அது புடம் போட்டுக் காட்டியது. சோவியத் ஒன்றியந்தான் இனப்போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கி வந்தது என நம்பியவன் நான். அதற்கு ஆதாரமாக வி.ரி.தமிழ்மாறனின் புத்தகத்தைக் கையாண்டேன். அதற்கு ஒரு சம்மட்டி அடி விழுந்துள்ளது. சிவசேகரம் அவர்களின் கட்டுரைகள் எம்மைப் போன்றவர்களின் அறிவு விருத்திக்கு மிகவும் உதவுவன. எனவே தொடர்ந்து வரும் இதழ்களில் அவர் ஸிம்பாவே விடுதலைப் போராட்டத்தைப் பற்றி எழுத வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

***இ. குணசிலன்***
*கொழும்பு - 06*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே. 14



## குழந்தைகளுக்கான தெரிவும் குழந்தைகளின் தெரிவும்

***பொறுப்புணர்வு:.....***

குழந்தைகள் பொறுப்புணர்ச்சி பற்றிய புரிதல்களுடன் பிறப்பதில்லை. அத்துடன் அவர்கள் அதனை ஒரு குறிப்பிட்ட வயதில் உள்வாங்கிக் கொள்வதும் இல்லை. பியானோ வாசித்தல் போன்ற பொறுப்புக்கள் மிகவும் மெதுவாகவும், நீண்டகால அடிப்படையிலுமே புரிந்துகொள்ளப் படுகின்றன. இதற்கு நாளாந்த அனுபவமும், முடிவெடுத்தல், தொடர்பான பயிற்சிகளும் தேவை. ஒருவருடைய வயதுக்கும் உள்வாங்கும் ஆற்றலுக்கும் பொருத்தமான தெரிவுகளை செய்துகொள்வதில் போதிய அனுபவங்களும் தேவை.

***பிரச்சினைக்குரிய பகுதிகளும், பொறுப்புணர்ச்சியும்...***

பொறுப்புணர்ச்சிக்கான கல்வி குழந்தையின் மிக ஆரம்ப வயதிலேயே ஆரம்பிக்கிறது.

பொறுப்புணர்ச்சியானது, குழந்தைகள் தேவையான இடங்களில் தமது கருத்தைச் சொல்லவும் அவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவர்களது தெரிவைச் செய்யவும் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமாக ஊட்டப்பட முடியும். இவ்விடத்தில் தெரிவுக்கும் கருத்தைத் தெரிவிப்பதற்கும் இடையில் ஒரு தெளிவான வேறுபாடு ஏற்படுத்தப் படுகிறது. சில விடயங்கள் குழந்தைகளின் பொறுப்புணர்ச்சி எல்லைக்குட் பட்டவையாக உள்ளன. அவைகளில் அதற்கு தெரிவு செய்ய அனுமதி வேண்டும். தனது தெரிவுகளை அது செய்தே ஆக வேண்டும். வேறு சில விடயங்கள், குழந்தையின் நலன்கள் சம்பந்தப்பட்டவை. அவற்றிற்கான பொறுப்புக்கள் எம்மைச் சார்ந்தவை. இந்த விடயங்களில் குழந்தைக்குத் தெரிவு இல்லை. ஆனால் தனது கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு குழந்தைக்கு உண்டு. நாம் குழந்தைக்கான தெரிவுகளை மேற்கொள்ளும் அதேவேளை அத்தெரிவை ஏற்றுக்கொள்ளும் தவிர்க்க முடியாமையை விளங்கிக் கொள்ள அதற்கு உதவி செய்யவும் வேண்டும். உண்மையில் தேவையானது என்னவெனில், இந்த இரண்டு பொறுப்புணர்ச்சிக்குரிய விடயங்கட்கு இடையிலான வேறுபாட்டை தெளிவாக விளங்கிக் கொள்ளுதலேயாகும். பெற்றோர்கட்கும், குழந்தைகட்கும் இடையிலே பொதுவாக முரண்பாடுகள் ஏற்படக்கூடிய சில விடயங்களைப் பார்ப்போம்.

***உணவு***

ஒரு இரண்டு வயதுக் குழந்தையைக்கூட அதற்கு அரைக் கிளாஸ் பால் தேவையா அல்லது முழுக் கிளாஸ் பால் தேவையா என்று கூறுமாறு கேட்கலாம். ஒரு நாலுவயதுக் குழந்தையிடம் அதற்கு ஒரு முழு அப்பிள் தேவையா, பாதி தேவையா என்று முடிவு செய்ய விட்டுவிடலாம். ஒரு ஆறு வயதுக் குழந்தைக்கு தனது முட்டை நன்றாக அவிக்கப்பட்ட முட்டையாக இருக்க வேண்டுமா அல்லது அரை அவியல் முட்டை வேண்டுமா என்று முடிவு செய்ய முடியும்.

குழந்தைகள் இப்படிப்பட்ட முடிவுகளை எடுப்பதற்கான சூழலை வேண்டுமென்றே நாம் உருவாக்கிக்கொடுக்க வேண்டும். பெற்றோர்கள் சூழலை உருவாக்குகின்றார்கள்; குழந்தைகள் தமது தெரிவுகளைச் செய்கின்றார்கள்.

ஒரு குழந்தையிடம் 'உனக்கு காலைச் சாப்பாட்டிற்கு என்ன வேண்டும்?' என்று கேட்கக் கூடாது 'உனது காலை உணவுக்கான முட்டை அவிக்கப்படுவதா அல்லது பொரிக்கப்படுவதா விருப்பம்' என்று கேட்க வேண்டும். 'உனது பாண் ரோஸ்ட் செய்து தரப்பட வேண்டுமா? வேண்டாமா? உனது களியை சூடாக சாப்பிட விரும்புகிறாயா குளிரூட்டி சாப்பிட விரும்புகிறாயா? தோடம்பழச் சாறா பாலா குடிக்கப்போகிறாய்? போன்ற கேள்விகளே விரும்பத்தக்கவை.

இவை குழந்தைக்கு தான் சம்பந்தப்பட்ட விடயங்களில் சில தெரிவுகளை மேற்கொள்ளுவதற்கான பொறுப்புணர்ச்சியை வழங்குகின்றன. இதனால் அது வெறும் உத்தரவுகளை ஏற்கும் ஒன்றல்ல. மாறாக தனக்குத் தேவையானவற்றில் முடிவெடுக்கும் விடயத்தில் பங்கு கொள்ளும் ஒன்றாக மாறுகிறது.. பெற்றோரின் இத்தகைய நடவடிக்கைகளால் அது தெளிவான ஒரு செய்தியைப் பெற்றுக்கொள்கிறது. நாம் தேநீரையோ அல்லது பாலையோ தருகிறோம். தெரிவு செய்ய வேண்டியது உனது பொறுப்பு.

சாப்பிடும் போது, குழந்தைகளின் உணவு அதன் ருசி என்பன தொடர்பாக அதிக அக்கறை எடுக்கும் தாய்மார்களால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் உருவாகின்றன. அவர்கள் சில காய் கறிவகைகளைச் சாப்பிடுமாறு குழந்தைகளை நச்சரிக்கின்றார்கள். உடம்பின் எந்தெந்தப் பகுதிக்கு எந்தெந்தக் காய்கறிகள் முக்கியம் என்று (பெரும்பாலும் எந்தவித விஞ்ஞான பூர்வமான அடிப்படைகளுமின்றி) கூறி அவற்றை உண்ணுமாறு வலியுறுத்துகின்றார்கள். குழந்தைகளைப் பொறுத்தவரை தாய்மார் உணவு தொடர்பாக தீவிரமான உணர்வுகள் அற்றவர்களாக இருப்பதே சிறந்தது. தாய்மார் குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டமும் ருசியும், உள்ள உணவுகளை அது தனது பசிக்கேற்ற அளவு சிறிதாக சாப்பிட்டாலும் போதுமான சத்தினைக் கொண்டிருக்கக் கூடியதாகத் தயாரிக்கவேண்டும். சாப்பிடுதல் என்பது குழந்தையின் பொறுப்புணர்ச்சிக்குட்பட்ட ஒரு விடயமாகும்.

***உடைகள்***

குழந்தைகளுக்கு உடைகளை வாங்கும் போது, அவர்களுக்கு தேவையானது என்ன? எமது நிதி வசதிக்குக் கட்டுப்பாடானது என்ன என்பதை முடிவு செய்வது எமது பொறுப்பாகும். ஒரு கடையில் நாம் எமது நிதிநிலைக்கும் குழந்தையின் தேவைக்கும் உரிய சில மாதிரிகளைத் தெரிவு செய்து, அவற்றுள் தான் விரும்பும் ஒன்றைத் தெரிவு செய்யும் உரிமையை குழந்தைக்கு வழங்க வேண்டும். ஒரு ஆறு வயதுக் குழந்தைக்கு கூட எம்மால் தெரிவு செய்யப்பட்டவற்றினுள் தனக்கு விருப்பமான ஒன்றைத் தேர்தெடுக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். தனக்குப் பிடித்த ஷேர்ட், சட்டை அல்லது கால் மேஸ் எதுவாயினும் சரிதான். பெரும்பாலான குடும்பங்களில் குழந்தைகள் இவ்விடயங்களில் எந்த அனுபவத்தையும் பெறுவதில்லை. ஏன், சில பெரியவர்கள் கூட தமக்குரிய தெரிவை தமது தாயோ, மனைவியோ, கணவனோ மூலமாக அன்றி தம்மால் சுயமாகத் தெரிவு செய்ய முடியாதவர்களாக இருக்கின்றார்கள். விஷேடமாக ஓரளவு வளர்ந்த பிள்ளைகட்கு தமது நண்பர்களது உடைகளைவிட அதிகளவில் தரத்தில் வேறுபடாத உடைகளைக் கொண்டிருக்க அனுமதி வழங்க வேண்டும். வகுப்பிலுள்ள சிறுவர்கள் எல்லோரும் நீலநிற சப்பாத்துப் போட்டிருக்க ஒருவன் மட்டும் செந்நிறச் சப்பாத்தை அணிந்து வருவானானால் அவன் பிற சிறுவர்களால் கேலிசெய்யப்படுவான் என்பதில் சந்தேகமில்லை. குழந்தைகள் மத்தியில் அபிப்பிராயங்கள் - அவர்கள் எதைச் சரியானது, என்று கருதுகிறார்கள் எதைக் கூடாதது, அசிங்கம் என்று கருதுகிறார்கள் என்பதை - என்ன என்பதை நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். உடைகள் தொடர்பான எமது பொறுப்பெல்லாம் இதுதான்: நாம் தெரிவு செய்பவற்றுள் அவர்கள் தமக்குப் பிடித்ததை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

*- வசம்*

# வட கிழக்கில் இடைக்கால நிர்வாகம்: தற்காலிக இணைப்புக் குழு பின்னணியும் விளைவுகளும்!

*மஸீஹுத்தீன் இனாமுல்லாஹ்*

கடந்த 11.09.1996 அன்று மாலை ஒளி ஒலி அலைகள் வெளியிட்ட தகவல் தான் வடகிழக்கு அபிவிருத்திக்கான இணைப்புக்குழு பற்றிய விவகாரம்.

மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் கப்பற்றுறை, புனர்வாழ்வு, அமைச்சர் மாண்புமிகு அமைச்சர் அஷ்ர.:ப் ஹாஜியார் அவர்களின் தலைமையில் மேற்படி அமைப்பை நிறுவியுள்ளதாக அமைச்சரின் அலுவலகம் அறிக்கை வெளியிட்டிருந்தது!

நாட்டின் சகல சமூகத்தைச் சேர்ந்தவர்களிடமும் சில கேள்விகள்.

ஜனாதிபதியின் நடவடிக்கை பற்றி ஜனாதிபதி செயலகம் அறிவிக்கும் மரபை ஏன் புனர்வாழ்வு அமைச்சு மீறியது?

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் சொந்த விடயங்களை வடக்கில் கவனிப்பதற்கு ஏற்கெனவே அமைச்சர் நிமால் ஸ்ரீபால டீ சில்வாவின் தலைமையில் ஒரு அமைப்பு அமைக்கப்பட்டிருக்கும் வேளையில் புதிதாக இன்னொரு அமைப்பு ஏன் உருவாக்கப்பட்டது?

ஏற்கெனவே ஈ.என்.டீ.எல்.எப்., ஈ.பீ.டீ.பீ , புளொட் ஆகிய தமிழ் அமைப்புகள் ஒரு இடைக்கால நிர்வாகத்தை வேண்டிய போது கவனத்திற்கெடுக்காத அரசு தற்போது ஏன் அவசர அவசரமாக இதை உருவாக்கியுள்ளது?

வடக்கில் 95விகிதம் தமிழர்கள், கிழக்கில் சுமார் 42விகிதம் வடக்கிலும் கிழக்கிலும் சுமார் 72விகிதம் பெரும்பான்மையாக இருக்க இப்படிப்பட்ட குழுவுக்கு ஒரு முஸ்லிம் அமைச்சர் ஏன் தலைவராக நியமிக்கப்பட்டார்?

அதுவும் முஸ்லிம்களது உரிமைப் போராட்டக் குரலாக சக்தியாக அழைத்துக்கொள்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஏன் நியமிக்கப்பட்டார்?

அதுவும் எல்.டி.டி.யீ.யினர் மிருகங்கள், அவர்களுடன் பேசமுடியாது, அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்து உறுதியுடனிருக்கும் ஒருஅமைச்சர்?

இவ்வாறு சில கேள்விகள் கொள்கையடிப்படையில் தெளிவு காணப்படவேண்டியவைகள் என்பதில் எந்த சமூகத்தைச் சேர்ந்த புத்திஜீவிகளிடமும் மாறுபட்ட கருத்து இருக்கமாட்டாது.

அது ஒரு புறமிருக்கட்டும். அடுத்த சர்ச்சை எதுவென்றால் இது ஒரு இடைக்கால நிர்வாகமா என்ற சந்தேகங்களும், இல்லவே இல்லையென்ற அமைச்சரின் பதில்களும், இடைக்கால நிர்வாகம் இல்லாவிட்டால் அதைவிட அதிகாரத்தில் கூடிய ஒரு அமைப்பா, குறைந்த ஒன்றா? அதன் அதிகார வரம்புகளும், நியாயாதிக்கங்களும், சட்டவாக்க, நிர்வாக தேவைகளும் எந்த வரைமுறைகளுக்குள் அடங்கும்? இவை தேவையற்ற கேள்விகள் என்று சிலவேளை சிலர் கேட்கலாம்.

ஆனால், நிறைவேற்று அதிகாரமுள்ள, இந்நாட்டின் ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பாவித்து உருவாக்கியிருக்கின்றமை,

வடகிழக்கு ஆளுநரை செயலாளராக அவருக்கு யாப்பு ரீதியாக உள்ள சகல சிறப்புரிமைகள், கௌரவங்கள், அதிகாரங்கள் ஆகியவற்றுடன் இராண்டாந்தரப் படுத்தியுள்ளமை.

வடகிழக்கிலுள்ள சுமார் 31 மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் அபிப்பிராயம் கோரப்படாமலேயே அவர்களை அங்கத்தவர்களாக்கியுள்ளமை.

மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சி ஆகியவற்றின் சகல அரசாங்க நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக கண்காணிக்கின்ற குழுவாகவும் செயற்படுகின்ற அதிகாரம் பற்றிய எல்லை.

இவைபோன்ற பல இன்னோரன்ன கேள்விகள் அத்தகைய ஐயப்பாடுகளை ஏற்படுத்துவதில் நியாயம் உண்டு என்பதனை பொது அறிவு அரசியல் சாணக்கியம் உள்ள எவரும் ஏற்றுக் கொள்வர்.

இன்று ஜனாதிபதிக்கும் அவரது அரசிற்கும் உடனடியாகத் தேவைப்படுவது வடக்கு கிழக்கில் முழு அளவிலான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது.

சமாதானம் ஒரு புறமிருக்கட்டும் வருடாந்தம் 50 மில்லியன் வரவு செலவுத்திட்டத்தில் யுத்தத்திற்காக செலவாவதை இலங்கையினால் தாங்கிக் கொள்ள முடியாமை.

சர்வதேச அரங்கில் குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் எல்.டி.டி.ஈ. இனரின் பிரச்சாரங்களை முறியடித்தல்.

தமிழ் மக்களிடமிருந்து போராளிகளைத் தனிமைப்படுத்துதல்.

(போராளிகள் என்றால் புலிகள் குறிப்பாக)

இந்தக்குழு உருவாக்கப்பட்ட முறையைப் பார்க்கும் போது அது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளைப் பின்தள்ளும் நடவடிக்கையாக அமையும் என பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். அது உண்மையும் கூட.

இந்நிலையில் இவ்வாறான பேரினவாதிகளின் இலட்சியங்களை நடைமுறைப்படுத்த சிறுபான்மை முஸ்லிம்கள் ஏன் பலிக்கடாக்கள் ஆக்கப்பட வேண்டும்?

வடக்கு கிழக்கில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும் தமிழ் முஸ்லிம் சகோதர சமூகங்கள் ஒன்றாகவே வாழவேண்டியுள்ளது. குறிப்பாக 74 விகிதம் தமிழ் பெரும்பான்மையுடன் 18 விகிதம் முஸ்லிம்கள் வாழவேண்டியுள்ளது.

எல்.டி.டி.ஈ. இனரைத் தனிமைப்படுத்தவும், பலவீனப்படுத்தவும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சிவில் நிர்வாகம் நடக்கிறது என்று உலகுக்குக் காட்டவும் அரசு முயல்வது ஒரு தந்திரோபாயம் என்பதில் எவருக்கும் ஐயமில்லை.

அதேபோல் இப்பணியை மேற்கொள்ள முஸ்லிம் காங்கிரஸை விலைக்கு வாங்குவது அதைவிடவும் பாரதூரமான விளைவுகளையுடைய தந்திரோபாயம் என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம், செயற்குழு, பேராளர் மாநாடு ஆகியவற்றின் அங்கீகாரம் பெறப்படாமல் இம்முயற்சியில் அமைச்சர் இறங்கியிருந்தால் கட்சி அவரது நடவடிக்கைகளை வரைமுறைகளுக்குள் கொண்டு வருவதுடன் இப்பதவியை ஏற்கக் கூடாது எனக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இன்றேல் இத்தகைய தீட்சண்யமற்ற தூரநோக்கற்ற எதேச்சாதிகார நடவடிக்கைகளால் ஏற்படச் சாத்தியமாகியுள்ள துரதிஷ்டவசமான விளைவுகளுக்கு முஸ்லீம் காங்கிரஸின் சாதாரண அங்கத்தவரும் பதில் சொல்வதிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாது. முஸ்லிம்களது உரிமைப்போராட்டம் ஏற்கெனவே கொச்சைப்படுத்தப்பட்டுள்ளதால் தான் தீர்வு யோசனைகளில் அவர்களைப் பற்றி எதுவுமே கூறப்படவில்லை.

ஆனால் வடகிழக்குத் தமிழ் சிறுபான்மையினரின் உரிமை, விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த அப்பாவி முஸ்லிம்களைப் பலிக்கடாவாக்கிவிடக் கூடாது.

தயவு செய்து தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோதவிடாதீர்கள்! வளர்க தமிழ் முஸ்லிம் ஐக்கியம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 90களில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டதா?

## சோலைக்கிளியின் புதுமை என்ன?

மு.பொ

சென்ற இதழ் தொடர்ச்சி

சோலைக்கிளியின் கவிதைகள் 60களிலும், 70களிலும் தர்மு சிவராமுவால் எழுதப்பட்ட 'படிமக் குவியல்' கவிதைகளில் இருந்து வேறுபட்டவையல்ல. ஆனால், இங்கு ஒரு முக்கியமான விஷயம்கவனிக்கப்பட வேண்டும். சோலைக்கிளி படிமக் கவிஞரோ குறியீட்டுக் கவிஞரோ அல்லர். இவர் ஓர் உருவகக் கவிஞர் என்றே கூறலாம். ஈசாப்பின் கதைகள் மாதிரி அஃறிணையும் பொருட்களைக் கொண்டு தன் கவிதைகளை உருவகிப்பவர். இவற்றில் மிக அருந்தலாகவே ஆழமான படிமங்களையோ குறியீடுகளையோ காணலாம். ஆழமான படிமங்கள், குறியீடுகள் மிகுந்த கவித்துவத்தைக் கோரிநிற்பவை. தர்முசிவராமு தன் கவிதைகளை படிமங்களாலேயே நிறைத்தார் என்றால் சோலைக்கிளி தன் கவிதைகளை அஃறிணைப் பொருட்களின் உருவகங்களாலேயே நிறைத்தார். தர்மு சிவராமுவின் படிமமே, கவிதை உடல் எடுத்தியங்கியதற்கு பின்வரும் அவரது கவிதைகளைக் காட்டலாம். 'விடிவு' என்ற தலைப்பில் பின்வருமாறு அவர் எழுதினார்.

*''பூமித் தோலில் அழகுத் தேமல்*
*பரிதி புணர்ந்து படரும் விந்து''*

'மின்னல்' என்ற தலைப்பில் அவரது இன்னொரு கவிதை:-

*கடலில் பொழியும் அமிர்தத்தாரை*
*கடவுள் ஊன்றும் செங்கோல்''*

தர்முசிவராமுவின் இக்கவிதைகள் படிமங்களே கவிதையானவை. ஆனால், இந்தப் படிமப்போக்கு வரவர அதிகரிக்கவே அதாவது கவிதையை அனுபவிக்கும் இடைவெளியைக் கூட படிமமே நிறைத்து விட்ட நிலையில் நாம் தர்மு சிவராமு போன்றவர்களின் கவிதை பற்றி விமர்சித்தோம். இந்தப் போக்கை விளக்குமுகமாக மேற்குலக விமர்சகர் ஒருவர் நமது தென்னிந்திய கோயில்களையும் இஸ்லாமியர்களின் மசூதிகளையும் ஒப்பிட்டுக் கூறியவற்றைக் காட்டினோம். தென்னிந்தியக் கோயில் கோபுரங்களின் சிற்பங்கள் மிக நெருக்கமாக (Crowded), 'ஒண்டடி மண்டடியாக' அமைக்கப்பட்டிருப்பதால் அவற்றின் அழகு ரசிக்கமுடியாதளவு போய்விட்டதென்றார். இவற்றோடு ஒப்பிடும்போது சிற்பங்கள் ஏதும் இன்றி மிக எளிமையும் இடைவெளியோடும் எழுந்து நிற்கும் இஸ்லாமிய கோபுரக் கலசங்கள் (தாஜ்மகால்) கலையழகைக் கூட்டுபவையாக உள்ளன என்றார்.

சோலைக்கிளியின் உருவகக் குறியீட்டுக் குவியல்களும் (படிமம் அல்ல) தென்னிந்தியக் கோயில்களின் 'ஒண்டடி மண்டடி' சிற்பக் குவியல்களையே நினைவூட்டி நிற்கின்றன. 'அவரது எட்டாவது நரகம்' முதல் 'பாம்புநரம்பு மனிதன்', 'பனியில் மொழி எழுதி' வரை இவற்றால் நிரப்பி அடைக்கப்பட்டவையே. அவர் ஆரம்பகாலத்தில் அஃறிணைப் பொருட்களை உள்ளீடாக்கி எழுதிய கவிதைகள் ஏதோ ஒவ்வோர் விதத்தில் புதுமை பயப்பனவென ரசித்தவர்கள் - (சு.வி. 'அலை'யில் இவரது எட்டாவது நரகம் பற்றி விமர்சித்தமை, 'மழைப்பழம்' என்ற சோலைக்கிளியின் சொல்லாள்கையை முருகையன் கேலிக்குரியதாக்கியபோது சு.வி, நாம் அதன் பாவனையை சரியென விவாதித்தமை போன்றவை) பின்னர் அவையே அவரது தனித்துவமாக தொடர்ந்து வெளிவரத்தொடங்கியபோது அதில் கோவைப்படுத்தப்பட்ட அக்கவிஞரின் பலவீனத்தைக் கண்டனர். காரணம் இது 60 - 70 களில் தர்முசிவராமு ஆரம்பித்த படிமப்போக்குகளின் இன்னொருவகை வெளிக்காட்டலாகவும் அதன் பின்னர் வெளிக்கிளம்பிய 'வானம் பாடி'களின்

*''நாங்கள் கோடியில் கிடக்கின்றோம்*
*நீங்கள் மாடியில் இருக்கிறீர்கள்*
*நாங்கள் சேற்றில் கிடக்கிறோம்*
*நீங்கள் எங்கள் சோற்றை உண்கிறீர்கள்''*

என்கிற ''நாங்கள், நீங்கள்'', ''ரத்த புஷ்ப'', ''செவ்வான'', 'கவிதை'வகையறாக்களின் வேறொரு பதிப்பாகவும் மலினப்படுத்தப்பட்டதே. அதாவது தர்முசிவராமுவின் கவிதைகள் தம் உடல் பூராவும் படிமங்களை அணிந்தனவென்றால், வானம்பாடிகள் 'கவிதைகள்' தம் உடல்பூராவும் 'ரத்தப்புஷ்ப'ங்களையும், 'நாங்கள் நீங்க'ளையும் செருகிக்கொண்டனவென்றால், சோலைக்கிளியின் கவிதைகளோ உடல்பூராவும் அஃறிணைப்பொருட்களையே அணிந்து அணிந்து ஈற்றில் அஃறிணைப் பொருட்களே கவிதையாக்கப்பட்ட நிலை! நவீன அமைப்பியல்வாத நோக்கில் எழுதிய கதாசிரியன்தான்சாகடிக்கப்படுகின்றான். ஆனால், இங்கே சோலைக்கிளியின் ஆக்கங்களில் வாசகன் என்பவனே உள்நுழைய முடியாதவகையில் காகங்களும், குயில்களும், எருமைகளும், மாடுகளும், மரங்களும், செடிகளும், பாம்புகளும், எலிகளும் அவனைச் சூழ்ந்து கொத்திக்குதறி அவற்றின் எச்சங்களாலும் மூத்திரங்களாலும் துவாலைகளாலும் மூழ்கடித்து அவனைச் சாகடித்து விடுகின்றன! சோலைக்கிளியின் வாசகன் செத்துவிடுகிறான்! சோலைக்கிளியின் கவிதைக்குள் வாசகன் நுழைய இடமில்லை!

சோலைக்கிளியின் புதுமை என்ன? அஃறிணைப்பொருட்களால் கவிதையை அடைத்தல். இப்படி அவர் அடைக்கும் போது அவை இடம் மாறி அல்லது இடந்தவ்றி (Misplaced) பாவிக்கப்படுவதன் மூலம் அதைவாசிப்போரிடம் ஒரு புதுமையைச் சொல்லுகின்றது போன்ற பிரமையை ஏற்படுத்தல். உதாரணமாக ''மாடு சப்பிய சூரியன்'' என்னும் போது மாடு புல்லைத்தின்னாது சூரியனைச் சப்பும் இடம்மாறிய பிரயோகம். ஆனால், இங்குதான் கவிஞர்கள் உஷாராக இருக்க வேண்டும். காரணம் இன்னொருவன் சோலைக்கிளியைப்படித்துவிட்டு, ''ஆடு சப்பிய சந்திரன்'' என்று கவிதை எழுதலாம். அல்லது இன்னொருவன் சோலைக்கிளியின் கவிதைகளை கேலிசெய்யும் (Parody) நோக்கில் ''எருமை சப்பிய சூரியன்'' என்று இன்னொன்றை எழுதலாம். ஏன் ஒரு சிறுவன் கூட இக்கவிதைகளைச் சொல்லிக்காட்டினால் அவனும் இதேமாதிரி 'கவிதை'களை எழுதலாம். அவ்வளவுக்குப்போவானேன்? முகமட் அபார் (சோலைக்கிளியின் தம்பி) என்பவர் களம் 6ல் 'சுடப்பட்ட சூரியன்' என்றொரு 'கவிதை' எழுதியுள்ளார்!

*''...வெடித்துக்கிடக்கிறது சூரியன்.*
*நேற்றுத்தான் வானத்தை முத்தமிட்டு*
*முத்தமிட்டு...*
*இன்று*
*வயிற்றையும் காணவில்லை*
*வாயையும் காணவில்லை''*

என்று அக்கவிதை சோலைக்கிளியின் பாணியில் போகிறது. இந்நிலையில் சோலைக்கிளியின் 'இது தன்னுடைய கவிதை அல்ல' என்பதையோ அல்லது முகமட் அபார் என்பவர் 'இது என்னுடையதுதான்' என்பதையோ எப்படி நிறுவப்போகிறார்கள்? ''ஆடு சப்பிய சந்திரன்'' அல்லது ''சுடப்பட்ட சூரியன்'' என்பது போலி ஒருத்தனின் வெளிக்காட்டல் அல்லது வேறு ஒருத்தனின் படைப்பு என்பதை சோலைக்கிளி எப்படி நிரூபிக்கப்போகிறார்?

இங்குதான் நாம் மொழியின் பிரயோகம் பற்றிய முக்கிய ஆய்வுக்கு வருகிறோம். இங்குதான் சோலைக்கிளியின் பலவீனமும் துல்லியமாகிறது. காரணம் சோலைக்கிளியின் கவிதைகளில் ஆழமான வேர்கள் இல்லை. பல விதமான அஃறிணை உருவகங்கள் தவிர்ந்த அவற்றைத் தாக்குப்பிடிக்கவல்ல ஆழமான புதுச் சொல்லாக்கங்கள் இல்லை. மாடு ஏன் சூரியனைச் சப்பியது? மாடுகளுக்கேன் அது இரையானது? என்பன பற்றியோ அல்லது அது நிலத்தில் விழுந்ததற்கான 'வீழ்ச்சியின்' வேர்களையோ நாம் அங்கே காணமுடியாது. இயற்கையிலும் மானிடத்திலும் ஏற்பட்டுள்ள பிறழ்வுக்குரிய காரணம் என்ன? 'போர்ச்சூழலும், அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களும் மனிதர்கள் விலங்காகி விட்டதால் விலங்குகளிடம் மானிடத்தைக் கண்டறிதல், போர் யதார்த்தத்திற்கு பணிய மறுத்த மானிடத்தின் ஒருமையைக் கூவியழைத்தல், எல்லாவற்றிலும் தன் இருப்பைக் கண்டறிதல்' என்று கூறிவிட்டு இலகுவாகத் தப்பமுடியாது. இதற்கான கோடிகாட்டல், ஒவ்வொரு கவிதையிலும் வித்தியாசமான புதுச் சொல்லாக்கங்களை, ஆழமான வேர்ச்சொற்களை ஊடுருவ விட்டிருக்க வேண்டும். இதுவே கவிதைகள் வெற்றுச் சிலுசிலுப்புச் சோடனைக்குள் புகுந்து கற்பனாவாதத்துள் துவண்டு போகாதிருக்க கவிஞன் என்பவன் உள்நாட்டிவிடும் தரிசனம் என்னும் கொழுகொம்பாகும். இத்தரிசன முள்ளந்தண்டே ஒவ்வொரு கவிதையிலும் ஆண்மைப்படுத்தி நிமிர வைக்கும் சொல்லாக்கங்களைத் தரவல்லது. இவைதான் சோலைக்கிளியை போலிகளிடமிருந்து காப்பாற்றுவற்கான உரந்தரக் கூடிய பக்கம். 'சுடப்பட்ட சூரியனில்' இருந்தும் 'ஆடு சப்பிய சந்திரனில்' இருந்தும் அவரது கவிதைகளுக்கு தனித்துவம் கொடுக்கக் கூடியவை. ஆனால், இந்தப் பார்வை சோலைக்கிளியிடம் அறவே இல்லை. மாறாக மாடுகள் பல சூரியனைச் சப்பும் விதங்கள் போன்றவைதான் அவரால் மேலும் மேலும் எல்லாக் கவிதைகளிலும் கையாளப்படுகின்றன. இத்தகைய வாசகனைக் கஷ்டப்படுத்தாத அவனைச் சிந்திக்க வைக்காத மேலோட்ட விவரணையில் அவருக்கு அலாதிப் பிரியம். இதுவே அவரை மேலெழவிடாது அல்லது புதுப்பாய்ச்சலைக் காட்டவொட்டாது தடுப்பதென்பதை அவரோ அவரைப்பின்பற்றுவோரோ அறியார். இலங்கையர்கோனை பெரும் எழுத்தாளனாக நிமிரவிடாது தடுத்தவர்கள் அவருக்குப் பின்னால் தம் சுயநலத்திற்காக அவர் ஆக்கங்களைப் புகழ்ந்து கொண்டிருந்த மட்டக்களப்பு விதானைமார் என்று எஸ்.பொ. அடிக்கடி சொல்லுவார். இன்று சோலைக்கிளியைப் பழுதாக்குபவர்கள் எந்தவித ஆழமான இலக்கியப் பார்வையுமற்று அவருக்குப் பின்னால் அவரைப் புகழ்ந்து கொண்டு திரியும் இளங்கவிஞர்கள் என்று கூறலாமா?

ஒரு கலைஞன் எப்பொழுதும் தனித்துவத்தைப் பேணுபவனாக இருக்கவேண்டும். எப்படிப் பேணுவதென்பதையே நாம் மேலே காட்டினோம். லா.சா.ரா.வின் எழுத்து நடையை அபிநயித்து 'தீ' என்னும் நாவல் எழுதிய எஸ்.பொ. அவரைப்பின்பற்றி 'குட்டி' என்னும் நாவல் எழுதிய பெனடிக்ற்பாலன் போன்றவர்கள் வெறும் வெற்றோசைக் கூட்டத்தை ஏற்படுத்தியவர்களாகவே புறந்தள்ளப்பட லா.சா.ரா. இன்னும் அந்நடையோடு தன்னைத் தக்கவைத்துக்கொண்டு தனித்தன்மையைப் பேணுவதற்குக் காரணம், அந்நடை அவரது தரிசன ஆழத்தின் வெளிப்பாடு. ஆழமான தரிசன வீச்சுடையவனின் படைப்புகள் பிரதிபண்ணிக்கொள்ள முடியாதவை. இதுவே புதுமைப் பித்தனின் நடையைப் பின்பற்றியவர்களுக்கும் நேர்ந்தது.


ஆகவே 90களில் சோலைக்கிளியும், அவரது வழிவருவோரும் ஈழத்துத்தமிழ்க் கவிதையில் புதுப்பரிமாணத்தை ஏற்படுத்தினார்களா இல்லையா என்பதை இப்பண்புகளைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும்.

சோலைக்கிளி பற்றிய ஆழமான ஆய்வு அவரிடம் இப்பண்புகள் இல்லை என்பதையே காட்டுகிறது. அவரிடம் இருப்பது கிராமத்து மக்களிடம் புழக்கத்திலுள்ள சொற்களை தனது அஃறிணைப் பொருட்களோடு பொருத்துவது அல்லது இடம் மாறிப்பாவிப்பது. அதன் மூலம் புதுமை செய்ய முயன்று, போதிய தரிசன முள்ளந்தண்டின்மையால் தான் அவாவியெழவிரும்பிய எல்லைகளைத் தொட முடியாது வீழ்ந்து வெறும் கற்பனாவாதத்துள் மிதப்பது. அதனால்தான் ''எலிகொறித்த நட்சத்திரங்கள்'', ''நான் உரசி முத்தமிடும் சிறிய நட்சத்திரம்'', ''நட்சத்திரங்களை மிட்டாய்போல் உணாவியபடி'', ''காலொடிந்த நட்சத்திரம்'', ''பேய்கள் குழந்தைகளைச்சப்பியதாக நட்சத்திரங்கள் சொல்லிச் சொல்லி'' என்று அலுப்புத்தட்டும் விதத்தில் நட்சத்திரங்களை ஜபிக்கிறார்! அதனால் தான் வேண்டாம் வேண்டாம் என்று போகுமளவுக்கு எங்களுக்கு நிலாப்பால் வார்க்கிறார்! அதனால்தான் எமது ஞாயிற்றுத்தொகுதியே வெறும் ஆழமற்ற கிள்ளுக்கீரையாக ஆக்கப்படுகிறது! மேலும் ''என்காகங்களுக்காக'', ''நானான உருண்டை'', ''மலம் கழிக்கும் பேய்காற்று'', ''செத்த முகில் மழை'', ''பல்லியின் எச்சம்'', ''பூனை மலங் கழித்த முகம்'', ''சூரியனின் மலமாவது சேரும்'' என்று வரும் கவிதைகளிலும் இது போன்று வரும் எண்ணிறைந்த கவிதை வரிகளிலும் பாவிக்கப்படும் சொற்கள் எந்தவித ஆழமான வேர்கள் அற்றவையாய், 60களில் எஸ். பொ., அகஸ்தியர், பெனடிக்ற்பாலன் போன்றவர்கள் ''ஊற்றை'', ''சீழ்வடிதல்'', ''துவாலை'' போன்ற சொற்கள் மூலம் தாம் எதையோ முன்னிலைப்படுத்துவதான தோரணையில் வெறும் ''நாற்றத்தைப் பரப்பியது போல் சோலைக்கிளி யாலும் பாவிக்கப்படுகிறது. பட்டினத்தாரின் இன்னொருவகைத் தோற்றம்! இதனால்தான் சோலைக்கிளியின் கவிதைகளைப் பற்றிய ஒருவர் பிரஸ்தாபித்தபோது ஒரு கவிஞர் ''அவன் என்னத்தை எழுதப்போறான், பல்லி பீய்ச்சியது, எலி எச்சமிட்டது என்று எழுதுவதைத்தவிர?'' என்று மட்டமாகப் பேச நேர்ந்தது!

சோலைக்கிளி இத்தோடு நிற்பதாய் இல்லை. ''வானம்பாடிகள் காலத்தில் பதிவான கற்பனாவாதத்தின் இன்னொரு மலிவுப்பதிப்பாகவும் மாறுகிறார். இதோ அவரின் ''நான் சந்தோசமாக இருந்த அன்று'' எனும் கவிதையில் வரும் ''என்னைச்சுமந்து போயின வண்ணத்துப் பூச்சிகள்'' எனும் வரிகள், ''நான் போக முடியாத ஊரில் '' வரும் ''அந்த ஊரை நாலுமூலையிலும், நாலு குயில் தூக்கிக் கொண்டுவந்து என் நெஞ்சுக்குள் வைத்தன'' எனும் வரிகள், ''அந்தக் காட்டுப்பூமரத்தில்'' வரும் ''கோடானுகோடி வண்ணத்துப்பூச்சிகள் நான் பிரசவித்த பூமரத்தைச் சுற்றி'' எனும் வரிகள், ''மீன்களுக்காகப் பாடும் குயிலில்'' வரும் ''எனது அழகிய குயில் - பூக்களில் பறந்த இளைய வண்ணத்துப்பூச்சியை அழைத்தேன்'' என்பன போன்று ''பாம்பு நரம்பு மனிதன்'', பனியில் மொழி எழுதி'' போன்ற நூல்களில் இறைத்துக் கிடக்கும் வரிகள், வானம்பாடி காலத்து ''ரத்த புஷ்பங்கள்'', ''செம்மலர்கள்'', ''நெருப்பு மொட்டுகள்'', ''அக்கினிப் பூக்கள்'', ''செங்கொடிகள்'', ''சிவந்தவானம்'' என்று எழுதப்பட்ட கவிதையைக் கேலிக் கூத்தாக்கிய கற்பனாவாதத்தின் இன்னொரு வகையாகும்!

நாங்கள் சோலைக்கிளியின் இக்கவிதைகளை வாசிக்கும் போது ''எங்கே தேவதைகள் உலகிலா (Fairy Land) நாம் வாழ்கிறோம் என்ற சந்தேகமே எழும். ஆனால், இதேபோன்ற கற்பனைகளை உருவகித்து லுயிஸ் கறோல் எழுதிய 'அலைஸ்' இன்வொன்டர் லான்ட்' (அற்புத உலகில் அலைஸ்) என்னும் சிறுவர்களுக்காக எழுதப்பட்ட கவிதைகளும், கதைகளும் அடங்கிய நூல் எல்லா அறிவாளிகளையும் தத்துவாசிரியர்களையும் வியப்புற வைத்த ஒன்றாகும்! காரணம் அவர் மொழியைக் கையாண்ட விதமும் சொற்களுக்கு அவர் கொடுத்த புதுப்பரிமாணமும், அதன் மூலம் அவர் முன்வைத்த அன்றைய சமூக, அரசியல், இலக்கிய, விமர்சனமுமாகும்! இத்தகைய ஆழமான புதுப்பரிமாணங்கள் சோலைக்கிளியிடம் கிடையாது. இவரது கவிதைகள் நம்பகைப்புலம் நீங்கி, வேற்று மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்படும் பட்சத்தில் எந்தவிதமான புது ஆழமான செய்தியைத் தராத சொற்கூட்டங்களாகவே போய்விடும். இதனால், இவரது கவிதை முயற்சியை ஒரு சூதாட்டம் போன்றதாகவே கொள்ளவேண்டும். சிலவேளைகளில் இது வெற்றி தந்தபோதும், பரவலாக இவரது முயற்சி தோல்வியே தந்திருக்கிறது. காரணம், தான் பாவிக்கும் சொற்களையும் அஃறிணைப் பொருட்களையும், உருவகங்களையும் அளவறிந்து பாவித்து வேறு ஆழமான சொல்லாக்கங்கள் கொண்டு நிமிரவைக்கும் தரிசனம் இவரிடம் இல்லை. அதாவது செஸ் (Chess) ஆட்டக்காரனின் பல பக்கப்பார்வையும் தரிசனமும் ஒரு கவிஞனுக்குத் தேவை. சூதாட்டக்காரனின் துணிச்சல் அல்ல. இவர் பாவிக்கும் உருவகங்கள் வெளிப்பேசமுடியாத எமது நாட்டு நிலைமைகளோடு ஒத்துவரும் சந்தர்ப்பங்களில் வெற்றி அளிக்கின்றன. ''நிலவுக்கு வேலியிடு'' என்று ஆரம்பிக்கும் ''எனது பேனையால் அழுதது'' என்ற கவிதை இதற்கு உதாரணம். ஏனையவற்றில் இவர் நன்றாக வெளிவரக்கூடிய கவிதைகளைக் கூட தனது கட்டற்ற விமர்சன நோக்கற்ற ''வண்ணத்துப்பூச்சி' வகையறா விவரணைகளால் நொண்டவும், கெந்தவும் கூனவும் வைத்துள்ளார்.

– அடுத்த இதழில் முடியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*"இப்படைப்புகளில் தெரிவது நானேதான். முகமறியாத ஊரின் விமான நிலையத்தில் வழி தவறிய எலி மாதிரி தவிக்கிறேன். இடுங்கின அறையில் காமத்தில் குமைகிறேன். அகதியாகிறேன். என்னை எனக்கு காட்டும் இக்கதைகளை புதுப்புது வாசல்கள் திறக்க மீண்டும் மீண்டும் படிக்க முடியும். இது ஒரு 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என்று அடையாளம் போடுவது எனக்கு கசப்பு தருகிறது. மேலான படைப்புகள் அத்தகைய கூண்டுகளிலிருந்து சிறகடித்து எழுந்து விடுகின்றன என்பதற்கு இந்நூலும் ஓர் உதாரணம் என்று ஜெயமோகன் குறிப்பிடும் படைப்புக்குக் காரணமானவர் ஈழத் தவரான பொ. கருணாமூர்த்தி. தற்போது ஜேர்மனியில் வாழும் இவரது ஒரு குறுநாவல் (ஒரு அகதி உருவாகும் நேரம்), ஒரு சிறுகதை (மாற்றம்), ஒரு நாவல் (வாழ்வு வசப்படும்) ஆகியவற்றைச் சேர்த்து ஒரு அகதி உருவாகும் நேரம் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டிருக்கிறது ஸ்நேகா. அதிலிருந்து மாற்றம் என்ற சிறுகதையை இங்கு தருகிறோம்.*

**ஆ-ர்**

அக்காவுக்கும் எனக்கும் வயதில் ஒன்றரை வருடங்கள் தான் வித்தியாசம். முந்திப் பிறந்ததாலே சதா என் கண்ணுள் விரலை வைத்து ஆட்டியபடியேயிருப்பாள்.

சில வேளைகளில் அம்மா இன்னும் நாலு தம்பிகளைப் பெற்றிருக்கலாம் என நினைப்பேன். அவளின் குட்டுக்களையும், பிராண்டல்களையும் கிள்ளல்களையுமாவது சமத்துவமாகப் பங்கு போட்டிருக்கலாமல்லவா?

தங்கை கடைக்குட்டியென்று எல்லோருக்கும் செல்லம். அவள் ஐந்தாம் வகுப்பு. அவள் 'கண்ணன் எங்கள் கண்ணனாம்... கார் மேக வண்ணனாம்... என்று சன்னக்குரலில் பாடிக்கொண்டு தன் ஸ்கூல் புத்தகங்களுக்கு உறைபோட யார் பழைய சைனாருடே தருவார்கள்? புத்தகத்துள் வைத்துக் குட்டி போட வைக்க மயிலிறகு எங்கு கிடைக்கும்? என்பது போன்ற பிரச்சினைகளுடன் இருப்பதால் அக்காவுடன் மோத வேண்டிய சந்தர்ப்பங்கள் அமையாது.

அவள் போன பிறவியில் ஒரு நீதிவாட்டியாகவோ அல்லது ஒரு தலைமையாசிரியையாகவோ இருந்திருக்க வேண்டும். அவள் வட்டத்தில் டிசிப்பிளின். கிளீன். பிறின்ஸிபிள் விஷயங்களில் ஏதாவது குறை தோன்றுவதாகப்பட்டால் போதும் உத்தரவுகள் வழங்கிக் கொண்டிருப்பாள். அவள் பார்வை வீச்சுக்கள் இருக்கும் நேரங்களில் எல்லாம் இதயம் விநாடிக்கு 2 அடிப்புக்களாவது கூடத் தான் அடிக்கும். அவளுக்குக் கிட்டப்போகவே படாது.

''ஏன் ஷேவ் எடுக்கவில்லை.. இராப் பிச்சைக்காரன் மாதிரியிருக்கு. நகங்களின் சுத்தத்தைப்பார்... சைக்கிள் கடைக்காரன் மாதிரியிருக்கு. மணி ஒன்பது கூட ஆகல்ல. அதுக்குள் மேசையிலிருந்து கோழித்தூக்கம் போடறான் பார்.. முகத்தைக் கழுவிப்போட்டுப் படிடா சோம்பேறி. டீ போட்டுத்தாறன்...'' அவளுக்கு ஆங்கில இலக்கியமும் லொஜிக்கும் பாடங்கள். இருந்தும் எனது பொட்னி, ஸுலோஜி பிராக்டிக்கல் நோட்ஸ் எல்லாம் குடைவாள்.

''எப்படிடா தவளைப்படம் போட்டிருக்கிறே.. கார்நசித்த தவளை மாதிரியில்லாயிருக்கு.. என்னடா இந்த செக்ஷனைக் கோழி மாதிரிக் கிண்டியிருக்கிறே.. 'நீற்' ஆக, அழித்துப்போட்டுத் திரும்பப் போடப்படாதா?

''என்ன லுங்கி மூன்றாவது நாளாக வெற்றி நடைபோடுது போலக் கிடக்கு. துவைத்து வைத்திருப்பதைக் கூட மாற்றப் பஞ்சிப்படுற சோம்பேறி..''

''இன்றைக்கு குளிச்ச மாதிரியே தெரியேல்ல... குளிச்சுட்டு வந்தால் தான் சாப்பாடு.'' எத்தனை அவசரத்தில் ஸ்கூல் புறப்பட்டாலும் உடுப்பு ஸ்திரி போடாமல் சுருங்கியிருந்தால்.. போட்ட உடுப்பைக் கழற்றி ஸ்திரி போட வைப்பாள். ''சப்பாத்தைப் பொலிஷ் பண்ணுடா முனிசிப்பல்காரன் மாதிரிக் கிடக்கு.''

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் குளிச்சிட்டு வந்தால்தான் சாப்பாடு. சற்று ஜாலியாக வீட்டில் இருப்போமென்றால் விடவே மாட்டாள்.

''மா வேண்டிவா.. மண்ணெய் வேண்டி வா.. மார்க்கெட்டுக்கு போ. மீன் மரக்கறி வேண்டிவா.. விறகு உடை... ஈஸிசேருக்குப் பாரம் ஏத்திற நேரம் கொஞ்சம் தேங்காய் துருவித் தந்தால் குறைந்தா போகும்.'' மாலையானால், ''பூந்தோட்டத்திற்குத் தண்ணியிறைக்கலாம் வா.. இடைக்காட்டில் ஆனந்தவல்லி வீட்டில (அது 10கி.மீ. தொலைவிருக்கும்) குரோட்டன் செடி வெட்டுகிறார்களாம் போய் சைக்கிளில் எடுத்து வா''

''அக்கா அடுத்த கிழமை போறனே..''

''காய்ந்து போய்ச் சென்டால் பிறகு தளிர்க்காது. மாரியெண்டாலும் பரவாயில்லை. இன்றைக்கே போய்வா, ஓடு!'' பூந்தோட்டம் வைப்பது, தண்ணீர் வார்ப்பது, பராமரிப்பது, அவற்றுடன் பேசிக்கொண்டே பூங்கன்றுகளின் அடியைக் கிளறி விடுவதென்றால் அலாதிப் பிரியம் அவளுக்கு!

இவளுக்குச் சீக்கிரமே திருமணமாகிவிட வேண்டுமென்று கண்ணகை அம்மனை வேண்டுவேன். டிறில் மாஸ்டரைப் போல அவளால் வேலை வாங்கப்படப்போகும் அவள் புருஷனுக்காகச் சிறிது அனுதாபப்படவும் செய்வேன்.

சின்ன வயதில் அவள் பஸ்ஸில் எங்கேயோ போகும்போது பத்திரகாளி கோயில் வேள்வியொன்றின் போது கிடாய்களை வெட்டி நிரைச்சியாக அடுக்கி வைத்திருந்ததைப் பார்க்க நேர்ந்ததால் இரத்தத்தைக் கண்டால் பயம், மயக்கம் வந்துவிடும். அன்றிலிருந்து சின்னதாக மீன்கள், சள்ளை, திரளி, விளைக்குஞ்சு, இறால் இப்படி ஏதாவது இருந்தாலே தவிர வேறு எதுவித மாமிசமும் சாப்பிடவே மாட்டாள்.

எப்போதாவது ஆட்டிறைச்சியோ, கோழி இறைச்சியோ சமைக்க நேர்ந்தால் அம்மாவோ நானோ தான் வெட்டிச் சுத்தம் பண்ணிக் கொடுக்க வேண்டும். இறைச்சியைக்காண அப்படி ஒரு அலர்ஜி. சுத்தம் தவிர அவள் மிக முக்கியத்துவம் கொடுக்கும் மற்றொரு விஷயம் பங்சுவாலிட்டி. எட்டரைக்கு எமக்குப் பள்ளிக்கூடம். எட்டுமணிக்கு மேலும் சாவகாசமாய் அமர்ந்து தோசை தின்று கொண்டு நின்றால் தட்டைப்பறித்து வைத்து விட்டுப் புத்தகங்களையும், ஸ்டாண்ட் தட்டிச் சைக்கிளையும் கையில் தந்து விடுவாள்.

நண்பர்களுடன் வெளியில் சுற்றிவிட்டு ஜாலியாக சிகரெட்டும் பிடித்து விட்டு வந்த ஒரு நாள் எப்படித்தான் மோப்பம் பிடித்தாளோ, கேட்டாள் 'தம்பி என்ன பிராண்ட் சிகரெட் பாவிக்கிறாய்...? நான் முழித்து 'சாய்' என்று ரப்பெற் அடிக்கவும் ஏனோ அத்துடன் விட்டுவிட்டாள்.

பின்னொரு நாள் சோதனை நெருங்கி வந்த சமயம் நித்திரை விழித்துப் படிப்பதற்காக வீட்டில் எல்லோரும் தூங்கி விட்டார்கள் என்று நினைத்துக் கொண்டு சாமத்தில் வெளி விறாந்தையில் நின்று ஆசையுடன் 'கோல்ட் லீப்' பிடித்தேன்.

சிகரெட் சுகந்தம் ஜன்னலினூடே புகுந்து அக்காவை எழுப்பிவிடும் என்று கண்டேனா? கரடியைப் போல ஓசைப்படாமல் பின்னாலே வந்து பிடரியில் அறைந்தாள். 'நித்திரை முழிக்க வேணுமெண்டால் 'டீ' குடி. தூக்கம் பறக்கும். அதற்கும் தூங்கினால் இரண்டு மிளகெடுத்துக் கடி. ஒரு மணி நேரம் தாக்குப் பிடிக்கும் அதற்கு மேலும் தூங்கினால் படுத்துக் கொள்ள வேண்டியதுதான். ஏனென்றால், அதற்கும் மேல் படிப்பது எதுவும் மூளையில் பதியாது.'

'தம்பி சிகரெட்' தான் எல்லாத் தீய பழக்கங்களுக்கும் அடிப்படை. முதல்ல நீயாய்ப் போய்த் தான் அதனைத் தொடுவாய். பின்னால் அது உன்னைவிடாது. ஸ்திர மனதும் தன்னம்பிக்கையும் உள்ளவர்கள் சிகரெட் தொடமாட்டார்கள். சிகரெட் பழக்கம் ஒரு நாள் பியரைத் தொட்டுப்பார்க்கக் கேட்கும். பின் அது விஸ்கியாகி உன்பாதையையே மாற்றி விடும். சபல புத்தியுள்ளவர்கள் தான் தீயபழக்கங்களின் அடிமையாவார்கள். நான் உன்னை வித்தியாசமானவனாகப் பார்க்க விரும்புகிறேன். எனக்கு உதவி செய்வாயா?'

இனிமேல் எச்சந்தர்ப்பத்திலும் சிகரெட்டைத் தொடவே போவதில்லை என்று அவளுக்குச் சத்தியம் செய்தேன்.

அதன்பின் சோதனை முடியும் வரையில் நான் படித்து முடியும் வரையில் இரவு இரண்டு மணியானாலும் தானும் விழித்திருந்து Hemmingwayயும் Dostoyeyeskyயும் படிப்பாள். மணிக்கொரு தரம் டீ வைத்துத்தருவாள். மிதமான இனிப்பும், சூடும், சாயமும் கொண்ட டீ கிளாஸை மேலே தூக்கி வெளிச்சத்தில் பிடித்தால் பொன்னிறப் பளிங்கு போல ஒளி புகுந்து வெளியேறும்.

'டீ' போட்ட பின்னால் சீனி, சாயம் அதிகமென்று வெந்நீர் கலப்பதோ, குறைவாக இருக்கென்று சீனியோ, சாயமோ சேர்ப்பதோ கிடையாது. ஒரே தரத்தில் சரியாகவே வார்த்து விடுவதென்பது அவளது டெக்னிக். 'டீ' மதுரமாக இருக்கும்.

மலையகத்தில் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டுத் திருமலைக்குக் குடிபெயர்ந்த குடும்பமொன்று அங்கும் பாதுகாப்பில்லையென்று வந்து எங்கள் வீட்டிற்கு முன்பாக இருக்கும் இரண்டறையினாலான சின்ன வீட்டிற்குக் குடிவந்தது.

பிரம்புக் கதிரை, கூடை பின்னுதல் அவர்கள் தொழில். கணவனும் மனைவியும் கோழிக்கூடு, முறம் போன்றவை பின்னி விற்பார்கள். அவர்களுக்கு ஆணும் பெண்ணுமாகக் கலந்து சாவிச் செற் மாதிரி சின்ன சின்ன வித்தியாசங்களில் ஆறு குழந்தைகள்.


மூத்த பெண் கமலி. சூட்டிகையான குட்டி. அண்மையில் ஆளாகி மினுமினுத்துக் கொண்டிருந்தாள். ரொம்பக் கலகலப்பான சுபாவம். அவளின் நீளப்பாங்கான முக அமைப்புக்கு மோவாயில் சிரிக்கும்போது செல்லமான ஒரு விதமான புதுவளைவோ, குழிவோ சரியாக விவரிக்க முடியாதபடியொன்று தோன்றி அநியாயத்திற்குச் சோபை சேர்க்கும்.

என்னைக்காணும் வேளைகளில் கமலிக்கு ஒரு புதுவிதமான வெட்கம் முகத்தில் அப்பிக் கொள்ளும். என்ன தான் நினைத்துக் கொள்வாளோ ஒரு தினுசாகக் கண்களால் சிரிப்பாள்.

அதன் அர்த்தம் என்ன வசந்த அழைப்பா? சே.. இருக்காது அவள் மனதில் கல்மிஷமில்லாத சிறிய குழந்தை..

இல்லை.. இல்லை. வசந்த அழைப்புத்தான்...! அவள் குரல் என்னை ஆகர்ஷித்தது. ஒரு விதத்தில் என்னை உள்ளூர அலைக்கழித்தாள்.

அக்கா ஓய்வு நேரங்களில் கமலிக்கு தையல் கற்றுத் தந்தாள். அதனால் அவள் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து போகத்




தொடங்கினாள். அந்தச் சாக்கில் அவளுடன் மெல்லப் பேசவும் தொடங்கினேன். பின் நாளாக ஆக அவளைப் பார்க்காமல் பேசாமல் இருப்பது துன்பமாகவுமிருந்தது. சும்மா தான் வீட்டு வாசலில் பராக்குக்கு நிற்பது போல் நின்று கொண்டு எதிர்வீட்டுக் குட்டியின் குதியன்களையும் தெறிப்புக்களையும் நோட்டம் விடுவேன்.

அக்கா என்னை புடையன் பார்வை பார்த்தால் போதும் என் கால்கள் தானாக வீட்டிற்குள் வந்து விடும்.

அக்கா பின்கட்டில் ஒதுங்கித் தமிழ்ப்பத்திரிகைகள் படிக்கும் மூன்று நாட்களில் ஒரு நாள் முன்வீட்டில் பெரியவர்கள் இல்லாத சமயம் பார்த்து சும்மா தான் கமலியுடன் பேச வேண்டி அவர்கள் வீட்டிற்குப் போனேன்.

அக்காவுக்கு எப்படித்தான் மூக்கில் வியர்த்ததோ, பின் கோடியால் சுற்றிக்கொண்டு வாசலில் முல்லைப் பந்தலின் கீழாக வந்து நின்று என்னைக் கூப்பிட்டாள்.

''தம்பி! தம்பி!!''

போச்சுடா போச்சு. வகையாகத்தான் மாட்டிக் கொண்டேன்.

''ஏன் அங்க போன..?''

''சும்மா தான்.. ஆண்டாளுக்கு (கமலி தங்கை) 'ஸ்கிப்பிங்' கற்றுக் கொடுக்கப் போனேன். தப்புத் தப்பாய் அடித்துக் கொண்டிருந்தாள். அதோட ஒரு பிரம்பும் வேணும் கிடைக்குமாவென்று விசாரிக்கவும் போனேன்.''

''எதுக்குப் பிரம்பு...?''

''எங்கடை மயிர்மாணிக்கையிருக்கில்ல, மயிர் மாணிக்கை அதுக்கு சப்போட் கொடுக்க...''

''பிரம்பு கிடைத்ததா?''

''அங்கு பெரியவர்களில்லை...''

''போகும் போது சொல்லிக்கொண்டு போயிருக்கலாமில்லை..?''

''ஹி... ஹி... ஹி...'' வழிந்தேன்.

''தம்பி.... இங்க பார் முன்வீட்டிற்கென்றாலும் எங்களுக்குத் தெரியாமல் போக வேணும் என்று நினைப்பு வந்திட்டுது பார்... அதிலயிருந்து உன் நோக்கத்தில் கொஞ்சம் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டிருக்கு என்று அர்த்தமாகிறது. டீன் வயதிலை எதிர் எதிர்ப்பாலாரிலை கொஞ்சம் அதீதமான அட்ராக்ஷன் ஏற்படத்தான் செய்யும். அது இயற்கை. அதை நானும் புரிஞ்சு கொள்றேன். இந்த உணர்வுகளை காதல் அப்பிடியிப்பிடியென்று நினைத்து ஏமாறாத.. எதிர் வீட்டில் போய் கமலியோட பழக நேரின் அதிகம் பேச வரும்... சிரிக்க வரும்... தொட வரும்... சிக்கல் வரும்.. வம்பு வரும்... இது எதுவும் வேண்டாம்... எங்கள் குடும்பத்திற்கு ஆகாது.

ஏதோ கோரிக்கையில்லாமல் கிடக்கென்று யூனிவேசிற்றிக்குப் போறதிற்கிடையிலை அவளை வளைச்சுப் போட்டு 'ஜல்சா' பண்ணுற உத்தேசம்

...க்கும் போலயிருக்கு... அது நேர்மையில்லாதது.. ...ாது!

...ந்த ஒரு பெண்ணுமே யாருக்கும் விளையாட்டுப் பொருளாகப் பாவிக்கப்பட உருவாக்கப்படவில்லை. அவளையே கல்யாணம் செய்து கொள்கிற உண்மையான நோக்கம், தியாகம், துணிச்சல் இருந்தால் சொல்லு... அப்போ உன்னைப் போற்றுவேன். தற்காலிக ஏற்பாடாய் அவளைத்தேடினாயென்றால் பொறி வைச்சுப்பிடிச்சுத்தாலி கட்ட வைத்திடுவன் ஜாக்கிரதை!''

பயங்காட்டி முளையிலேயே முறித்து விட்டாள்!

அக்காவின் ரசனைகள் ரொம்ப வித்தியாசமானவை. கிரைம் நாவல்கள் கட்டோடு பிடிக்காது. துப்பறியும் பேர்வழிகளின் வீரப்பிரதாபங்கள் மதியூகங்கள் டெக்னிக்குகளை விட வலிந்து புகுத்தப்படும் Sex vulgaruty தான் அநேகமான நாவல்களில் அதிகம் என்பது அவள் எண்ணம்.

மாரீசமானைப் போல செக்ஸைக் காட்டியே வாசகனை நாவலின் கடைசிப்பக்கம் வரை இழுத்துச் செல்லும் தந்திரம், படைப்பாளியின் நேர்மையீனம் அவளுக்குப் பிடிக்காது. அதனால் என்னையும் படிக்க அனுமதிக்க மாட்டாள்

அவள் வெறுக்கும் இன்னொரு சமாச்சாரம். சினிமா சோகப்பாடல்கள். 'ஈடற்ற பத்தினியின் இதயத்தைக் கொன்றவள் நான்' என்றோ, 'குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி ஏது' என்றோ றேடியோவில் பாடல் வந்தால் உடனே பாய்ந்து நிறுத்தி விடுவாள். வேண்டாத சோகப்பாடலைத் திரும்பத் திரும்பக் கேட்டல் ஒரு மனிதனின் உற்சாகத்தை மழுங்கடிக்கப் பண்ணித் தன்னம்பிக்கையையும் தளர்த்தி விட்டு விடுமென்பாள். அவலத்தை சோகத்தை ரசிக்க சினிமா ரசிகர்களை ஊக்குவிக்கும் டைரக்டர்களையும் அவ்விரசத்தை வளர்த்தெடுக்கவெனவே கதை பண்ணும் கதாசிரியர்களையும் அவளுக்குக் கட்டோடு பிடிக்காது.

'இன்பமெங்கே இன்பமெங்கே என்று தேடு' போன்ற உற்சாகம். குதூகலம் ததும்பும் பாடல்களையே விரும்பிக் கேட்பாள். மிதமான காதல் பாட்டுக்களையும் கொஞ்சம் அனுமதிப்பாள். ஸ்ரீநிவாஸ் ஜானகி கொம்பினேஷன் பிடிக்கும். ஆனால் அவள் மனது ஒன்றி ரசிப்பது எல்லாம் கர்நாடக சங்கீதத்தைத் தான். வீணையும் வாய்ப்பாட்டும் படித்தாள். கர்நாடக இசையின் அடிப்படையையும் என்ன ராகத்தை எப்படி ரசிப்பது? ஒரு ராகம் எப்படி இன்னொன்றிலிருந்து வேறுபடுகிறது என்பதையெல்லாம் அவளே கற்றுத் தந்தாள்.

பட்டப்படிப்புக்குத் தத்துவத்தையும் இலக்கியத்தையும் தேர்ந்தவள். நல்ல இலக்கியங்களை, படைப்புக்களை எனக்குக் காட்டித் தந்தாள். நல்ல கவிதையை ரசிக்கக் காட்டித் தந்தாள். நிறையவே வாசிப்பாள். பெண்ணியம் பற்றிய நவீன சிந்தனைகள், ஒரு சீர்திருத்த சமுதாயத்தை

→

www.tamilarangam.net



அமைக்க வேண்டிய நவீன கருத்துக்கள், வாக்குவல்லமை யென்று கருதும் அவள் ஒரு ஆதர்ஷப்பெண்! என் ஆசான்! தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுள் புகும் வழி முழுவதையும் இலங்கை இறுக மூடிய பின் பல்கலைக்கழகங்களை ஒரு மிட்டாய்க்கடைப் பார்வை பார்த்த பின் பரதேசம் (ஜெர்மனி) வந்து சேர்ந்தேன். அக்காவுக்கு ஒரு டாக்டர் மாப்பிள்ளையைத் தேடி அப்பா ஈழம் முழுவதும் சல்லடை போட்டார். ஒவ்வொன்றும் ஏதேதோ காரணங்களால் அகப்படாமல் போக இறுதியாக மிகத்தூரத்து உறவில் ஆஸ்பத்திரியின் லபோரட்டரியில் இரத்தப்பரிசோதனை செய்யும் பணியாளரே அக்காவுக்கு மாப்பிள்ளையானார். இவர்கள் கூட கணம், இராசி, விருட்சம், வசியம் என்று பத்துக்கு மேலாகப் பொருத்தங்கள் அமைந்திருந்தும் அப்பா தன் ஆயுட்காலச் சேமிப்பாகக் கட்டிய வீடு முழுவதையும் சீதனமாகத் தர வேண்டுமென்று முரண்டு பிடித்து சம்பந்தத்தையே வாரிவிடப் பார்த்தார்களாம்.

ஒரு பத்தாயிரம் கொடுத்து வேண்டிய உத்தியோகத்தைக் காட்டி இரண்டு இலட்சம் பெறுமதியான வீட்டையே டிமாண்ட் பண்ணிய சீதனப்பூர்ஜுவாக்களாக மாப்பிள்ளை வீட்டார் எனக்குத் தென்பட்டதால் அத்தானிடம் கூட ஆரம்பத்தில் எனக்கு எதுவித அன்போ ஈடுபாடோ தோன்றவில்லை. பெண்ணியம், பெண் விடுதலையென்று எவ்வளவு பேசிய ஒரு படித்த பெண் தன் சொந்த வாழ்க்கைப் பிரச்சினையென்று வந்த போது எப்படி அடங்கிப்போனாள்! இது அவளின் தனிப்பட்ட தோல்வியா? அல்லது பெண்ணியத்தின் தோல்வியா? புரியாமல் குழம்பினேன். எமது கடிதப்பரிவர்த்தனை திருமணத்திற்கு முன் ஐந்தாறு பெரிய தாள்களில் தத்துவ விசாரங்கள், இலக்கியப் பரிவர்த்தனைகள், நவீன கவிதைகள் என்று நீண்டு கொண்டு போகும்.

திருமணத்திற்குப் பின்னால் முன்னவையெல்லாம் நீக்கி மிகவும் இரத்தினச்சுருக்கமாக எழுதினாள்.

நாங்கள் சந்தோஷமாக இருக்கிறோம். உன் சௌக்கியங்கள் எப்படியென்று வரும் கடிதங்களிலிருந்து அத்தானின் குணங்கள், சுபாவங்கள் என்று ஒன்றுமே அறிய முடியவில்லை.

நாட்டில் போர், ஷெல் வீச்சுக்கள், பொருளாதாரத்தடைகள் என்று ஜீவனம் கஷ்டமானதாய் மாற அக்கா குடும்பமும் கனடா வந்து சேர்ந்தது! அவர்கள் கனடா வந்த நாட்களிலேயே நானும் கனடாவுக்கு விஜயம் செய்ய வேண்டி விசாவுக்கு விண்ணப்பித்தும் இரண்டு வருட காலம் இழுத்தடித்த பின் நானே விசா விஷயத்தை மறந்து போயிருக்கும் போது அவர்களிடமிருந்து கடிதம் வந்திருந்தது. விசா வழங்கலுக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருந்தார்கள். அது ஒரு ஓகஸ்ட் மாதம். உடனடியாக கோடைகால விடுமுறை எடுத்தேன். விமானடிக்கெட் பதிவு செய்தேன். அக்காவுக்கு ஒரு அதிர்ச்சியாக இருக்கட்டுமேயென்று பயணத்திற்கு முதல் நாளே போன் பண்ணினேன். மிகவும் சந்தோஷப்பட்டாள். நாலு வருஷங்களின் பின் காணப் போகிறோமல்லவா? எத்தனை விஷயங்கள் என்னோடு பேச வைத்திருப்பாள்!

அன்றிரவு திரும்ப அவளே போன் எடுத்தாள். இந்த ஆண்டு தங்களுக்கும் டிரவல் டொக்குமெண்ட் கிடைத்திருப்பதால் அமெரிக்காவில் இருக்கும் அத்தானின் தம்பியிடம் விசிட் பண்ணும் அவர்களின் நெடுநாள் திட்டத்தை நிறைவேற்ற அடுத்த வாரம் நியூயோர்க் போகிறார்களாம். தாங்கள் அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின் ஒரு மாதம் கழித்து வாவேண்டா என்றாள்.

ஏற்கெனவே என்னிடம் 5 வருடத்திற்குச் செல்லுபடியான அமெரிக்க விசா இருப்பது அவர்களுக்குத் தெரிந்தும் சீக்கிரம் வாடா நாம் எல்லோருமாக அமெரிக்கா போகலாமென்று ஏன் அக்காவுக்கு கேட்கத் தோன்றவில்லை?

நான் பிரயாசைப்பட்டு எடுத்த முப்பது விடுமுறை நாட்கள் வீணாகின.

அவர்கள் அமெரிக்க விஜயம் முடித்து வரக்காத்திருந்து செப்டம்பரில் இரண்டு வாரங்கள் சம்பளமில்லாத லீவு எடுத்துக் கொண்டு ரொறன்ரோ பறந்தேன். ஒரு காலையில் விமானம் தரை இறங்க அமோகமாய் வரவேற்றாள்.

விமான நிலையக் குசலங்கள் முடிய இரண்டு மூன்று நாள் 'ஷேவ்' செய்யாத முகத்திலிருந்து அத்தான் சிகரெட்டை எனக்கு நீட்டினார். நான் அதிசயித்து நிற்க என் பிளாஷ்பாக் நினைவுகளில் அக்கா பாவாடை சட்டைக்கு வந்து என் கன்னத்தில் அறைந்தாள்.

நான் நன்றி தெரிவித்து பழக்கமில்லை என்றேன். அத்தான் பற்ற வைத்துக் கொண்டார்.

அத்தான் ஷேவ் செய்யாமலேயே விமான நிலையம் வருவதை எப்படி அக்கா அனுமதித்தாள்? சிகரெட் பிடிப்பதை எப்படிச் சகித்துக் கொள்கிறாள்?

அக்காவும் நானும் காரில் பேசிக் கொண்டே வந்தோம். அத்தானும் எமது சம்பாஷணையிடையே அதிகம் கலக்காமலே வந்தார். ஏதாவது பேசினாலும் வார்த்தைகளில் மிகவும் சிக்கனமாக இருந்தார்.

நல்ல வசதியான நாலு அறைகளுடன் கூடிய அப்பார்ட்மெண்ட் வீடு. அக்காவின் ரசனைக்கு மாறுபட்டு சுவர்களில் பெரிய பிரேம்களுள் இருந்து தென்னகத்து சினிமா நட்சத்திரங்கள் சிரித்தனர்.

எனக்குப் பிடித்தமான பரோட்டாவும், மிக்ஸரும், கடலைப் பருப்புப் பொரியலும், சீஸ் றோலுடன் நிறைய கஜு சேர்த்து தொதலும் பண்ணி வைத்திருந்தாள். உபசரிப்புகள் ஓ.கே! இருந்தும் அவள் தன் இயல்புகள், சுயத்தை இழந்து விட்டிருப்பது போல் தோன்றியதில் யாரோ தூரத்து உறவினர் வீட்டிற்கு வந்திருப்பது போல் உணர்ந்தேன்.

விசாலமான குசினியுள் நவீன மோஸ்தரினாலான அனைத்துத் தளபாடங்களும் வைத்திருந்தாள். இதைவிட அமெரிக்காவில் வீட்டுத் தளபாடங்களின் தரம், உசத்தி, செற்றி, அப்பிடியிருக்கும். பாத்ரூம் இப்படியிருக்கும். கார்பெட் வெல்வெட் மாதிரியிருக்குமென்று ஒரே அமெரிக்கப்புராணமாகவே பாடினாள்.

ஏன் நீ என்னையும் அழைத்துப் போயிருக்கலாம் தானே! என்று பல தடவைகள் தொண்டை வரை வந்து விட்ட கேள்வியை உள்ளேயே தள்ளிவிட்டேன். அவளுடன் பேசிக்கொண்டே எதேச்சையாக பிரிட்ஜைத் திறந்து பார்த்தேன். மீண்டும் அதிர்ச்சி. அரைவாசி பியர் போத்தலால் நிறைந்திருந்தது!

தாங்காமல் கேட்டும் விட்டேன். இத்தனை பியரும் விருந்தினர்களுக்காகவா? என் கேள்வியை முழுவதும் புரிந்து கொண்டு சாதாரணமாகப் பதில் சொன்னாள். ''விருந்தினர்களுக்காகவும்தான். அத்தானும் சாப்பிட முதல் ஒரு பெக் எடுப்பார். நன்றாக பசி எடுப்பதுடன் இலகுவில் ஜீரணமுமாகிறதாம். நல்லா யூரின்பாஸாகுமாம். அற்ககோல் சதவீதம் மிகவும் குறைவாகவே அதில் இருப்பதால் எனக்கு அவர் பியர் குடிப்பதில் ஆட்சேபனை ஒன்றுமில்லை. நீ வேண்டுமென்றால் கொஞ்சம் டிரை பண்ணிப்பாரேன். நான் ஒரு நாள் வாயில் விட்டுப் பார்த்தேன். மஞ்சள் அவித்துக் குடித்த மாதிரியிருந்தது கசப்பு உவாக்..'' வாந்தி எடுப்பது போல அபிநயித்தாள்.

''என்ன புத்தகங்கள் அக்கா வைத்திருக்கிறே?''

''பெட்ருமிலே இருக்கிற கொமொட லாச்சியளை இழுத்துப் பார்.. அதிகமாய் ஒன்றுமில்லை. பட்டுக்கோட்டை பிரபாகர், குரும்பூர் குப்புசாமி, புஷ்பா தங்கதுரை, ராஜேந்திரகுமார் வகையான நாவல்களும் சில ராணி முத்துக்கள், மாலைமதிகள் என்பனவுமிருந்தன. இன்னொரு லாச்சியினுள் திரை சித்ரா, பொம்மை வகையிலான சில சமாச்சாரங்களுமிருந்தன. W.W.Jacob, Arnold Bennet, Dostoyewsky, Huge, Walpol என்று தேடி வாசித்தவள் இப்போது ராஜேந்திரகுமார் நாவல் படிக்கிறாளா? அவள் ரசனையைப் பேசும் எந்த ஒரு புத்தகங்களுமே என் கண்களில் காணவில்லை.

'ஏனக்கா கிரந்தங்கள் மாதிரி தடிதடியா புத்தகங்கள் எல்லாம் படிப்பியே.. அந்த மாதிரி ஒன்றுங்கிடையாதா? இங்கை தான் புத்தகங்கள் தாராளமாகக் கிடைக்குமே... நிறைய வாங்கிக் குவித்து வைத்திருப்பாயென்றல்லவா நினைத்தேன்...'

'புத்தகங்கள் கிடைக்கும் தான்.. ஆனால் நெருப்பு விலை. ஒவ்வொன்றும் இருபது இருபத்தியைந்து டொலர்.. எனக்குத் தான் இப்போ முன்பளவு ஆர்வம் வாசிப்பில் இல்லை. அத்தானும் லைட் றீடிங்ஸ் தான் விரும்பி வாசிப்பார். நான் வாசிக்க மட்டும் அவ்வளவு பணம் செலவு பண்ண முடியுமா? அதனால் தான் இங்குள்ள விற்பனை நிலையங்களில் அவர் அவ்வப்போது வாங்கியாறதை நானும் இடைசுகம் பார்ப்பன்'

'அத்தானுக்கு இலக்கிய ரசனை அவ்வளவாயில்லை' என்பதை எப்படி நாசூக்காய் மறைக்கிறாள்.

நான் எடுத்துப் போயிருந்த தி. ஜானகிராமனின் மோகமுள்ளையும், கு. சின்னப்பபாரதியின் தாகத்தையும் Hemming Way இன் கிளிமஞ்ஜரோவையும் கடந்த மாத றீடேர்ஸ் டைஜர்ஸையும் கொடுத்தேன். மகிழ்வுடன் பெற்றுக்கொண்டாள்.

மதியவேளை நான் குறைக்கண்ணால் டி.வி. பார்த்துக் கொண்டிருக்க தடக்கு டக்கு டொக்கு டொக்கு' என்று பலவகைச்சத்தம் சமையலறையிலிருந்து வந்தது.

என்ன தான் செய்யிறாள் என்று எட்டிப் பார்த்தேன். ஆறுமாசக் குழந்தையளவில் பிரிட்ஜிலிருந்து உறைந்து போயிருந்த ஒரு கோழியை எடுத்து மேசையில் ஒரு பலகையில் வைத்து மாங்கு மாங்கு என்று வெட்டிக் கொண்டிருந்தாள்.

'என்னக்கா கோழியெல்லாம் வெட்ட ஆரம்பித்து விட்டாயா.. முன்பு இறைச்சி இரத்தத்தைக் கண்டால் அலறுவியே?' என்றேன்.

'அத்தானுக்கும் வெட்டத் தெரியாது. மாமிசமில்லா விட்டால் சாப்பாடும் இறங்காது. இனி யார் வெட்டித்தரப்போற. நானா பழகி விட்டேன். பிரிட்ஜிலிருந்து 3 மணி நேரம் வெளியே எடுத்து வைத்து விட்டு ஒரு முறை வெந்நீரில் அமுக்கி விட்டு கூரான கத்தியால் ஆரம்பித்தால் கத்தரிக்காய் மாதிரி வெட்டலாம். எலும்பு தான் சற்று இடக்குப் பண்ணும். அதற்கும் ஆயுதமிருக்' கென்று துர்க்கா படத்தில் கையில் வைத்திருப்பது போல ஒரு கைக்கோடாரியைக் காட்டினாள்.

'சரி எல்லாவற்றையும் இப்படி என்னிடம் கொடு. இன்றைக்கு நான் வெட்டித் தாறனே' என்று வெட்டிக் கொடுத்தேன். குசினிக்குள் இறைச்சி வெட்டிக் கொடுக்கும் நேரத்திலாவது 'உனது சமையல் சாப்பாடுகள் எப்படி? என்ன சமைப்பாய்? தனியே தான் சமைப்பியா? இல்லை பிரண்ஸுடன் சேர்ந்து கொண்டு சமைப்பியா?' இப்படி ஏதாவது என்னைக் கேட்பாளென்று நினைத்தேன். அவள் ஒன்றுமே விசாரிக்கவில்லை.

'இஞ்சை ஆட்கள் ரெஸ்ரோறன்ரிலை இறைச்சி, வெங்காயம் அரியிறதும் கோப்பை கழுவிறதும் தான் வேலை பார்க்கினம். இவரும் இன்னும் வேறு இரண்டொருத்தரும் தான் டீசண்டான உத்தியோகம் பார்க்கிறது. அதுவும் இவற்றை Chief க்கு இவர் எப்பவும் பக்கத்தில் நிற்க வேணுமாம். இவரில்லாமல் ஒரு காரியம் பார்க்க மாட்டானாம்.' என்று புருஷன் மகாத்மியம் பாடினாள்.

'அத்தான் எப்படி சமைப்பாரா?''

''சாய் தண்ணி கூட மேசையிலிருந்தால் தான் குடிப்பார். மனுஷனுக்கு டீ கூடப்போடத் தெரியாது.''

''ஓய்வு நாட்களிலே உனக்கு சமையலில் உதவி ஒத்தாசை பண்ணுவாரா?''

''ஊஹூம்... குசினிப்பக்கமே வரமாட்டார். பெருஞ்சீரகத்தை நற்சீரகமென்பார். நற்சீரகத்தை கடுகென்பார். குசினிப் பக்கமே மனுஷன் எட்டிப்பார்த்தால் தானே?

''டேய்.. பத்து வாளி தண்ணி கொண்டு வா.. இன்றைக்கு விரதத்திற்குச் சமைக்க குசினி கழுவவேணும். இந்த விறைகை இன்னும் சின்னதாய் உடைத்துக் கொண்டா.. புழுங்கல் குத்த ஒரு கைபிடி... பின்னால் மனிஷிமாருக்கு எல்லாம் செய்து கொடுப்பியள்.. அம்மாவுக்கு அக்காவுக்கு உதவி செய்யக் கசக்குதாக்கும்?... அச்சாப்பிள்ளையல்லே இந்த இரண்டு தேங்காயையும் உடைத்து தோண்டாமல் பூப்போலத் துருவித்தா...'' என்று டிரில் வாங்கிய அக்காவா பேசியது?

ரொறன்ரோவில் அக்கா வீட்டில் நின்ற நாளில் அது சனிக்கிழமை. காலை அக்கா போட்டுத் தந்த மதுரமான 'டீ'யைக்குடித்து விட்டு மீண்டும் ஒரு மணி நேரம் தூங்கிவிட்டு பத்து மணி வாக்கில் எழுந்திருக்கிறேன். அத்தான் பல்கனியில் உலாத்தியபடி வெறும் மேலுடன் வயிற்றைத் தடவிக் கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறார்.



''அத்தான்... அக்கா எங்கே காணவில்லை?''

''அவ கடைக்குப் போயிட்டா!''

''எங்க தூரமோ?''

''ஒமொரு முக்கால் கிலோ மீட்டர் வரும்...''

'சய்.. சொல்லியிருந்தால் நானும் கூடப் போயிருப்பேனே...?''

''அவவுக்கு எல்லாம் பழக்கம். ஏன் உங்களைத் தொந்தரவு செய்வானென்று விட்டிருப்பா...''

அத்தானுக்கு Buildings Constructions கம்பனி ஒன்றில் சுப்பவைசர் வேலை. தான் ஒபிஸில் இல்லாவிட்டால் கம்பனியில் ஒரு செக்ஸனே இயங்காது என்ற மாதிரிப் பிரலாபித்தார்.

''எங்கட சீவ் என்ஜினியர் ஒரு முட்டாள். பேருக்குத்தான் வெள்ளையன். மண்டையுக்க ஒன்றுமேயில்லை. நான் பக்கத்திலே இல்லையெண்டால் அவனுக்குப் பிளானே வராது. வேர்க்சைடில் என்ஜினியருக்கு தண்ணி காட்டிற ஐஸ் அடிக்கிற வொர்க்கர்ஸ் எல்லாம் என்னைக் கண்டாலே உதறுவினம்!'' இந்த வகையில் அவர் பேசிக்கொண்டிருக்க அக்கா இரண்டு கன்வேஸ் பைகளினுள் மா, சீனி, பால், மினரல் வாட்டர், ஒரேஞ் ஜூஸ், உருளைக் கிழங்கு, பட்டர் என எல்லாம் பாரமான பொருட்களாக வாங்கிக் காவிக் கொண்டு வியர்க்க விறுக்க வந்து நடுஹோலில் பைகளை வைத்து விட்டு தொப்பென சோபாவில் அமர்ந்து மூச்சு வாங்கினாள்.

''என்னக்கா இவ்வளவு சாமான்களையும் காவிக் கொண்டு நடந்தாவர்றே?''

''என்னடா செய்யிறது... இந்த றோட்டிலை பஸ்ஸொன்றும் ஓடாது.''

''என்னை எழுப்பிக் கூட்டிக் கொண்டு போயிருக்கலாமில்லை?''

''நீ உன் விடுமுறையைச் சந்தோஷமாகக் கழிக்க வேண்டாமா.. அது தான் தொந்தரவு செய்யவில்லை...''

''விடுமுறையும் மண்ணாங்கட்டியும். அத்தானையும் கூட்டிக்கொண்டு போய் ஈஸியாக சாமான்களைக் காரில் போட்டுக்கொணடு வந்திருக்கலாமே?''

குசினி வந்து ''என்னுடைய டிப்பார்ட்மண்ட்... அதன் அலுவல்கள் முழுவதையும் நான் தான் கவனிக்க வேண்டும்.. அத்தானை அவர் ஓய்வு நாட்களில் இப்படியான விஷயங்களைச் செய்யச் சொல்லிக் கேட்கிறது அவருக்குப் பிடிக்காது. ஓய்வு நாளை தொந்தரவுகள் இன்றி அனுபவிப்பது தான் அவருக்குப் பிடிக்கும்!'' என்றாள்.

அக்கா இவ்வளவு பாரம் சுமந்து வாராளே அவளுடன் கூடப் போய் அவள் பாதியைச் சுமப்போம் என்று எண்ணாமல் அது அவள் வேலை அவளே அதைப் பார்த்துக்கொள்ள வேண்டியது என்று இருக்கும் இவன் என்ன மனிதன்? இவனை எப்படி அக்காவால் மன்னிக்க முடிகிறது? இவரென்ன அத்தனை மனநிறை மோகன சுந்தர காந்தர்வ புருஷனா? அது உன் டிவிஷன் வேலை., இது என் டிவிஷனுக்குட்பட்ட வேலையென்று ஏதோ கடுமையான ஒப்பந்தம் எழுதி அதில் கைச்சாத்திட்டவர்கள் போலப் பேசும் இது என்ன வாழ்க்கை முறை?

மனிதம், பெண்ணியம், நட்பு, பெருந்தன்மை, புரிந்துணர்வு என்றெல்லாம் எவ்வளவோ பேசுவாயே..?

ஒரு சிறு விஷயமாக வேணும் வீட்டில் சண்டை போட நேர்ந்ததால் உனது நியாயங்களுக்காக எவ்வளவு பொங்குவாய்? எந்தப் பிரச்சினைக்குமே இரண்டு தீர்வு சாத்தியம். ஒன்று எதிர்ப்பது; மற்றது ஒத்துப்போவது. எதிர்த்துப்போராடுவது என்பதை விடுத்து ஒத்துப்போவது என்ற கட்சியில் இவள் எப்போது சேர்ந்தாள்?

'புலியே தான் ஆனாலும் ஒரு கூண்டுக்குள் இருப்பது தான் அதற்குப் பாதுகாப்பானது' என்று அவளை எண்ண வைப்பது என்ன?

'அந்த மனுஷன் தன்னை விட்டுவிட்டு ஓடிவிடுவான்' என்று பயமா? அல்லது தன் முள் வேலிகளுக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டாளா?'

நான் பெர்லின் திரும்பு முன் கேட்டு விட நினைத்தேன்.

''நீயோ ஒரு பட்டதாரி. நினைத்தால் பெரிய உத்தியோகம் பார்த்திருக்கலாம். அட்லீஸ்ட் ஒரு டாக்டரின் மனைவியாகவாவது வாழ்வைச் சமைத்திருக்க வேண்டியவள். ஆனால் காலங்கொடுத்த வாழ்வை எவ்வித எதிர்ப்புகளுமின்றியே ஏற்றுக்கொண்டு விட்டாய்! அந்தக் கனவுகளையும் இந்த நிஜங்களையும் எப்படிச் சமன் செய்தாய் அக்கா?''

அவளின் புருஷன் மகாத்மியத்தில் என் கேள்வியே ஆவியாகிவிட்டது!

மதியம் சாப்பிட அமர்ந்தோம். எங்களுடன் சேர்ந்து இறைச்சிக்கறி சாப்பிட்டாள்.

நான் ஆச்சரியத்தில் விழிக்க ''எல்லாம் இப்போ பழகியாயிற்று'' என்றாள்..!''

ஞாயிறு அன்று முடிந்த அளவு ஊர் சுற்றிக் காண்பித்தார்கள்.

திங்கள் காலை அத்தான் 9 மணிக்கு வேலைக்கு நிற்க வேண்டும்.

நீர்க்காவி விட்ட பழுப்பாகிவிட்ட சேர்ட்டும், இந்த ஜென்மத்திலேயே 'பொலிஷ்' கண்டறியாத சப்பாத்தும் அணிந்து கொண்டு நேரம் ஒன்பதே காலாகியும் புறப்பட மனமின்றி வீட்டில் காப்பி சாப்பிட்டுக்கொண்டு நின்றார். அவர் நின்ற கோலத்தில் காலை பல்லுத்தீட்டியிருப்பாரோ என்ற சந்தேகமும் ஒரு பக்கம் இருந்தது.

''அத்தான் உங்களுக்கு நேரமாகலையா? 9 மணிக்கு வேலையென்று அக்கா சொன்னாளே?''

''Field வேலை தானே, அதனால பங்சுவாலிட்டியை யார் கவனிக்கிறது...?''

இரு குரலில் சொன்னார்கள்.

அக்கா... என் அக்கா!!

என் கண்ணுள் விரலை விட்டு ஆட்டிப்படைத்த அக்காவை, என்னைச் சதா விரட்டிக் கொண்டிருந்த அக்காவை என்னை அதிகாரம் செய்த அக்காவை, என் குருத்தினி அக்காவை, நான் பணிந்த அக்காவை, போற்றிய அக்காவை, இனி எங்கே காண்பேன்?

தூக்கமும் விழிப்பும் கலந்த - என்னுடன் நான் பேசும் மோன அவஸ்தையில் சத்தமாக வாய் குளறிவிட்டேன் போலுள்ளது.

"Yes please, May I help you?" என்றபடி விமானப் பணிப்பெண் என்னை நோக்கி வந்தாள்.

''No Thanks... You can't help me''

என் மூடிய கண்களுள் அவள் என்னை விநோதமாக நோக்கியபடி நிற்பது தெரிகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஒட்ட வருதா பாருங்கடி..

- லெனின் மதிவாணன்

மேற்கு ஐரோப்பிய காலனித்துவ வாதிகள் மூன்றாம் உலக நாடுகளைத் தமது காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்தியதுடன் அந்த நாடுகளில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தியதையும் அவ்வாறு அறிமுகம் செய்த பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான தொழிலாளர்களை தம்முடைய ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்தமையையும் சென்ற நூற்றாண்டு வரலாற்றின்பெரும்பகுதி உணர்த்தி நிற்கிறது. நமது நாட்டில் அந்நிய முதலாளித்துவம்நிலைகொள்ளத் தொடங்கியமையை இப்பொருளாதார அமைப்பே முதன் முதலாகச்சுட்டி நின்றது. அந்த வகையில் பிரிட்டிஷ் குடியேற்றவாதிகள் தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்களை இங்கு இறக்குமதி செய்தனர். இவ்வாறு தொழில் முறை ஒப்பந்தப்பிணைப்புச் செய்து கொண்டு இங்கு வந்த மக்கள் கூட்டம் கொத்தடிமைகளாக வாழ்வை வரித்துக் கொள்ள வேண்டியேற்பட்டது. இன்று வரை அவர்கள் பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகளுக்கும் சுரண்டலுக்கும் உட்பட்டு வந்துள்ளனர்/ வருகின்றனர். இந்த வாழ்க்கை முறையினைப் படம் பிடித்துக் காட்டும் வரலாற்றுப் பதிவுகளாக மலையக வாய் மொழிப் பாடல்கள் அமைந்துள்ளன.


மலையக கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியமானது தென்னிந்திய தமிழ்க் கிராமியப் பின்னணியைக் கொண்டு காணப்படினும் அவை மலையக சமூக சூழ்நிலைமையின் உற்பத்தி முறைகளுக்கு ஏற்பவும், வாழ்நிலைக்கு ஏற்பவும் மாற்றமடைந்து, தனக்குரிய தனித்துவப் பண்புகளுடன் விளங்குகின்றது. மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான சேகரிப்பு முயற்சி ஆங்காங்கே திட்டுகளாகவும், தீவுகளாகவும் இடம் பெற்றுள்ள போதிலும் அவை முழுமை பெறவில்லை. சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் மலையக நாட்டார் பாடல்கள் சிலவற்றினைச் சேகரித்து வெளியிட்டமை இத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்தத் தொகுப்பில் சேகரிக்கப்படாத மலையக மக்கள் மத்தியிலே காணப்பட்ட சில நாட்டார் பாடல்களை அண்மையில் சிறிபாத கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வ. செல்வராஜா அவர்களின் மேற்பார்வையின் கீழ் பயிலுனர்கள் சேகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இது தொகுப்பாக வெளிவரவேண்டியது அவசியமும் பயன் மிக்கதுமாகும்)

மலையக மக்களின் வரலாற்றினை ஆய்வு செய்வதற்கும் அதன்வழி இந்த மக்களின் நல்வாழ்விற்கான போராட்டத்தை தொடர்வதற்கும் இம்மக்களின் நம்பிக்கைகள், விருப்புகள், மகிழ்ச்சி, துன்பம், போராட்டம், அவர்களின் உறுதிப்பாடு போன்றவற்றினைப் பிரதிபலித்து நிற்கின்ற மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆய்வு அவசியமாகும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான நூல் ஒன்றினை சாரல்நாடன் எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூல் மலையக வாய்மொழி இலக்கியம் தொடர்பான ஆய்வு நூலாகக் கருதப்படுகின்ற இச்சந்தர்ப்பத்தில் இது பற்றிய சில கருத்துக்களை விமர்சன அடிப்படையில் முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரை இந்நூல் பற்றிய விமர்சனமாகவும், மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் வெளிவர வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தி நிற்கும்.

சாரல்நாடன் மலையக வாய்மொழி இலக்கியத்தை விளக்கம், முக்கியத்துவம், சூழலில் பிறக்கும் பாடல்கள், தொழிற் பாடல்கள், கங்காணிப்பாடல்கள், கும்மியும், கோலாட்டமும், வாழ்வளித்த வாய்மொழிப்பாடல்கள், ஒப்பு நோக்கு, மயக்கும் இன்பம், உணர்வுகளுக்கு வாய்க்கால், அவலக்குரல் போன்ற தலைப்புக்களின் கீழ் விளக்கியுள்ளார்.

கிராமிய இலக்கியம், நாட்டார்பாடல்கள், வாய்மொழி இலக்கியம் என்றெல்லாம் சுட்டப்படும் இவ்விலக்கிய மரபினை நாடோடிப்பாடல்கள் என்று கூறுவது முற்றிலும் தவறானது. ஏனெனில் நாட்டார் இலக்கியம் என்பது ஒரு குழு நிலைப்பாட்டையும் குறிப்பிட்ட உற்பத்தி முறை, வாழ்நிலை என்பனவற்றினைக் கொண்டும் கூட்டு உற்பத்தியாகக் காணப்படும். எனவே நாடோடிகள் என்போரிடத்தில் மேற்குறிப்பிட்ட அம்சத்தினைக் காணமுடியாது. ஆனால் இந்நாடோடிகளின் மூலமாக ஓரிடத்தில் உள்ள பாடல்கள் இன்னோர் இடத்துக்கு எடுத்துச் செல்லப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே நாட்டார் பாடல்களை நாடோடிப்பாடல்கள் எனச்சுட்டும் கருத்து மயக்கம் இத்துறை சார்ந்த பல ஆய்வாளர்களிடம் காணப்படுகின்றது. இது சாரல்நாடனிலும் காணக்கிடக்கின்றது.



*மலையக வாய்மொழி இலக்கியம்*

சாரல்நாடன்

தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்

'விளக்கம்' என்ற தலைப்பின் கீழ் மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான விளக்கத்தினை தரமுயன்றுள்ள நூலாசிரியர் மலையக நாட்டார்பாடல்கள் உணர்வுபூர்வமாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் தோன்றியது எனக் குறிப்பிட்டமை சரியானதே. தனிமனித படைப்புகளில் 'நான்' அல்லது 'எனக்கு' என்ற தனிமனித முனைப்பு மேலோங்கி இருக்கும். அதேவேளை அதன் தர்க்க ரீதியான விளைவாகத் தவிப்பு, தடுமாற்றம், அவலம், ஏமாற்றம், சோர்வு, விரக்தி முதலியன மேலோங்கி இருப்பதனைக் காணலாம். ஆனால், நாட்டார் பாடல்கள் நம்பிக்கை, மனஉறுதிப்பாடு, என்பவற்றினை அடித்தளமாகக் கொண்டிருக்கும். கூட்டு வாழ்க்கை முறைமை அவ்வப்போது சோகத்தை இசைத்தாலும் அவை கூட சமூக செயற்பாட்டினை ஊக்குவிக்கும் ஒன்றாக இருந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பாக ஆய்வு செய்த நூலாசிரியர் தனிமனித சிருஷ்டிக்கும், நாட்டார் பாடல்களுக்கும் இடையே உள்ள இந்த வேறுபாட்டினைச் சுட்டிக்காட்டி இருப்பாராயின் விளக்கமாக அமைந்திருக்கும்.

மலையக மக்களின் வரலாற்றினை ஆராய்வதற்கு நாட்டுப்புறப் பாடல்களின் அவசியத்தினை கட்டுரையாளர் சுட்டிக்காட்டி உள்ளார். இந்த மக்களின் புலப்பெயர்ச்சி வாழ்நிலை தொடர்பான பல ஆய்வுகள் அறிக்கைகள், ஆவணங்கள் என்பன இவர்களை அதிகாரம் செய்த அதிகாரிகளால் எழுதப்பட்டது. இதில் இவ்வுத்தியோகஸ்தர்களின் தனிப்பட்ட கண்ணோட்டமே மேலோங்கி இருப்பதால் அவை நம்பகரமான தகவல்களாக அமையவில்லை. உதாரணமாக மர்ஜோரிபேங்ஸ் என்பவரும் எ.ரி. மரக்காயரும் கூட்டாக தயாரித்து 1917ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்படும் கூலி அவர்கள் திடகாத்திரமாக வாழ்வதற்கு மாத்திரமன்றி தேவைக்கு மேலதிகமாகவும் உள்ளது. (சித்திரலேகா மௌனகுரு 1992) இக்குறிப்பு இத்தகைய ஆவணங்கள் மூலமாக சரியான வரலாற்றினை அறிய முடியாது என்பதனைச் சுட்டி நிற்கின்றது. எனவே மலையகத் தொழிலாளர்கள் பற்றிய யதார்த்தமான வரலாற்றினை எழுதுவதற்கு இந்த நாட்டுப்புறப் பாடல்கள் அவசியம்.

தென்னிந்திய தமிழ்க் கிராமங்களில் இருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் திருச்சி, திருநெல்வேலி, இராமநாதபுரம், அறந்தாங்கி, மதுரை, புதுக்கோட்டை ஆகிய பிரதேசங்களில் இருந்து வந்தவர்களாவர். இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் இங்கு வந்து குடியேறிய போதும் அவர்களது பேச்சு வழக்கு மொழியிலும், பாடிய பாடல்களிலும் சிற்சில வேறுபாடுகள் இருந்தன. உதாரணமாக, திருநெல்வேலியில் பாடப்பட்ட பாடல்களின் தாக்கம் மலையகத்தில் அட்டன், டிக்கோயா பகுதிகளில் செல்வாக்குச் செலுத்துவதையும் மதுரை சீமையில் காணப்பட்ட நாட்டுப் புறப்பாடல்களின் தாக்கம் அக்கரைப்பத்தனை பகுதிகளில் அதிகமாகக் காணப்படுவதையும் காணலாம். இதனை முழுமையாக அல்லாவிடினும் நூலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். இது பூரணமாக ஆராயப்பட வேண்டியது.

'சூழலில் பிறக்கும் பாடல்கள்' என்ற தலைப்பின் கீழ் தென்னிந்திய பண்பாட்டு பாரம்பரியத்தின் பின்புலத்தில் ஊறித்திளைத்த மக்கள் கூட்டம் இலங்கையிலுள்ள முதலாளித்து பொருளாதார அமைப்பில் தன்னை ஒரு பரந்துபட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றிக்கொண்ட அதே சமயம் தென்னிந்திய நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சங்களையும் உள்வாங்கிய ஒரு சமூக அமைப்பாகக் காணப்பட்டது. இந்தப் பின்புலத்தில் இம்மக்களின் உற்பத்தி முறையில், வாழ்நிலையில் ஏற்பட்ட மாற்றமே மலையக நாட்டார் பாடல்கள். மலையக சூழலுக்கேற்ற அடிப்படைப் பண்புகளுடன் விளங்குவதற்கான அடிப்படைக் காரணமாகும். இப்பின்னணியை நூலாசிரியர் மேலெழுந்தவாரியாக விவரித்துள்ளார்.

மலையக நாட்டார் பாடல்கள் என்பது தோட்டத் தொழில் துறையினைப் பொறுத்தமட்டில் தங்களுடன் நேரடித் தொடர்பில்லாத உத்தியோகத்தர்களான கிளார்க்கர், டீ மேக்கர், ரப்பர் மேக்கர், டொக்டர் போன்ற உத்தியோகஸ்தர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டாலும் தொழிலாளர்களோடு நேரடிச் சம்பந்தம் இல்லாததால் அவர்களைப் பற்றி பாடல்கள் தோன்றியதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை என்று சாரல்நாடன் குறிப்பிடுவது பொருத்தப்பாடுடையதே. காலனித்துவவாதிகள் விவசாய நிலவுடமை அமைப்பில் கட்டுண்டு கிடந்த தொழிலாளர்களைச் சுரண்டுவதற்காக அவர்களின் கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களுடன் இணைந்த ஒருவரை தேர்ந்தெடுத்தது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சற்று அதிகமான கூலிக்காகவும், கடின உழைப்பு முறையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காகவும் இம்மக்களை கடுமையான சுரண்டலுக்கு உட்படுத்தினர். இவர்களே கங்காணிகள் என்றழைக்கப்பட்டனர். கங்காணி முறை பெரிய கங்காணி, சில்லறைக் கங்காணி எனவும் காணப்பட்டது. இவர்கள் தோட்டப் பெண்களைத் தங்களின் பாலியல் இச்சைகளுக்கு உட்படுத்தியதுடன் துரைமார்களின் (Suprintendent) பாலியல் இச்சைக்கும் பலியாக்கிக் கொடுப்பதில் தரகர்களாக நின்று செயற்பட்டனர். தென்னிந்தியாவில் ஜமீன்தார்களின் வாழ்க்கை நிலையினை ஒத்த அதிகாரம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இதனை தமிழக நாட்டார் பாடல் ஒன்றுடன் மலையக நாட்டார் பாலொன்றினை ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் அறியலாம்.

அடுத்த இதழில் முடியும்



## 107 கவிதைகள்

*பசுவய்யா*

காலச்சுவடு பதிப்பகம்
151, கே.பி.சாலை,
நாகர்கோவில் 629001,
இந்தியா.
விலை: இந்தியரூபா 60

பசுவய்யா என்ற புனைபெயரில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாகக் கவிதை எழுதிவரும் சுந்தரராமசாமியின் 1959ம் ஆண்டிலிருந்து 1995ம் ஆண்டு வரை எழுதப்பட்ட 107 கவிதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே வெளிவந்த இவரின் 'நடுநிசி நாய்கள்', 'யாரோ ஒருவனுக்காக' என்ற தொகுதிகளும் 1987க்குப் பிறகு இவர் எழுதிய கவிதைகளும் இணைந்து இப்பெருந் தொகுப்பாக வெளிவந்திருக்கிறது.


இந்த 35 ஆண்டு காலப்பயணத்தில் பசுவய்யா என்ற தமிழ்க் கவிஞரின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அவருக்கே உரிய பலம் பலவீனங்களுடன் இதில் தெளிவாகத் தெரிகிறது. விமர்சகர்களினால் மிக மோசமான கவிதை என விமர்சிக்கப்பட்ட எவற்றையும் இத்தொகுப்பில் நீக்கிவிட பசுவய்யா விரும்பவில்லை என்பது நடுநிசி நாய்கள் தொகுப்பிலுள்ள மந்த்ரம் (1964) கொள்கை (1964) முதலிய கவிதைகள் நீக்கப்படாமல் இருப்பதிலிருந்து தெரிகிறது. இவ்வம்சமே இத்தொகுப்புக்கு ஒரு சிறப்பம்சமாகிறது.

பசுவய்யா எழுதத்தொடங்கிய போது எது கவிதை அல்லது எது நல்ல கவிதை என்பதில் குழப்பமுற்றிருந்தார் என்பதற்கு கொள்கை, மந்த்ரம் முதலிய கவிதைகளே சாட்சி. ஆனால் இன்றைக்கும் பெரும்பாலான தமிழகக் கவிஞர்கள் இவ்வாறு குழப்பமுற்றிருப்பது தான் தமிழ்க் கவிதைக்கு நேர்ந்த மிகப்பெரிய அவலம்.

இந்த 35 ஆண்டு கால பயணத்தின் முடிவில் அவர் அடைந்திருக்கின்ற முதிர்ச்சி பிரமிப்பூட்டுகிறது. ஒரு பழுத்த கவிஞராக அவர் பின்னாட்களில் எழுதிய கவிதைகளில் ந.பிச்சமூர்த்தியிலிருந்து ஆரம்பித்த தமிழகக் கவிதை மரபுத் தன்மைகள், மஹாகவியிலிருந்து ஆரம்பித்த ஈழத்துக்கவிதை மரபுத்தன்மைகள் என வேறுபடுத்தச் சிரமமான ஒரு உலகளாவிய பொதுமை இருக்கிறது. இதற்கு உதாரணமாக இத்தொகுப்பிலுள்ள சிறந்த கவிதைகளான இல்லாதபோது வரும் நண்பன் (1985), ஒரு நிலவுக்குக் காத்திருத்தல் (1985), உன் கவிதையை எழுது (1985), அங்கு போக வழி (1987), வெட்கப்படாமல் துக்கப்படு (1987), யாரோ ஒருவனுக்காக (1987), மனிதாபிமான ஃபாசிஸ்டின் ஜனநாயகக் குரல் (1994), நீ யார் (1994), ஒரு போர்வீரரின் முறையீடு (1994), நம் சவுக்கின் சொடுக்கல்கள் (1994), ஒரு படைத்தலைவர் மேலதிகாரிக்கு மனதில் எழுதும் சொற்கள் (1995) முதலியவற்றைக் காட்டலாம்.

இறுதியாக இப்புத்தகத்தின் அச்சமைப்பைப்பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். இன்று இந்தியாவில் கிடைக்கின்ற தொழில் நுட்பங்கள் அனைத்தையும் பயன்படுத்தி அச்சிடப்பட்டுள்ளது எனக் கூறத்தக்க வகையில் மிகச் சிறப்பாக இதன் அட்டையும் பக்கங்களும் அமைந்துள்ளன.

புத்தகத்திலிருந்து



**மனிதாபிமான ஃபாசிஸ்டின் ஜனநாயகக் குரல்**

*யார் சொன்னது*
*நான்.:பாசிஸ்ட் என்று?*
*வரலாற்றில் நாங்கள்*
*'கருத்து வேற்றுமை கொள்பவர்களை*
*நிர்மூலமாக்கி வருவது*
*சிந்தித்துப்பார்*
*யாருக்காக?*
*உங்களுக்காகத்தானே?*
*ஆகச்சரியான சிந்தனைகள்*
*எங்களிடம் கூடிவந்து*
*இறுதிவிடைகளை நாங்கள்*
*வார்த்தெடுத்து வரும்போது*
*வெண்ணெய் திரள தாழியை உடைப்பது போல்*
*நேர் எதிர் நிலையில் நின்று நீ மறித்தால்*
*உன் உயிரை வாங்குவதில் தவறென்ன?*
*நாற்று நட்டு களை பிடுங்கி*
*பயிர் காத்து கதிர் காணும்*
*எங்கள் மனித நேயம்*
*கோணல் கலைஞர்களுக்கு*
*ஒரு போதும் புரிவதில்லை*
*கோணல்கலைஞர்களின்*
*வக்கிர புத்திகள்*
*எப்போதும் ஏந்திப் பிடிப்பது*
*மாறுபடும் சிந்தனைகளைத் தானே*
*தம்பி அன்புடன் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன்*
*என் சீரிய சிந்தனைகளை உருப்போடு*
*என் தடங்களை மோப்பம் பிடித்து*
*முன்னால் போய் உறுதிப் படுத்து*
*என் குரலுக்கு வாயசைத்துப் பழகு*
*அப்போது தெரியும் உனக்கு*
*நான் எவ்வளவு பெரிய*
*ஜனநாயகவாதி என்று*

*நட்சத்திரன் செவ்விந்தியன்*

www.tamilarangam.net



# தமிழ்த் தேசியவாதம் ஓர் ஆய்வு-4

## தமிழினம் என்ற குரல் முதலில் தோன்றியது தமிழ் நாட்டிலல்ல ஈழத்திலேயே!

– டி.சிவராம்





இன்று தமிழகத்தில் திராவிட இயக்கம் பற்றிப் பல மீள்பரிசீலனைகள் நடைபெறுகின்றன. இவற்றுக்கு அடிப்படையான காரணம் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமே. எண்பதுகளில் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுடன் ஏற்பட்ட நெருக்கம் காரணமாகவும், இலங்கையின் வடகிழக்கில் தொடர்ந்து கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் போர் காரணமாகவும் தென்னகத்தில் தமிழ் தேசிய உணர்வு ஏன் ஓர் முனைப்பான விடுதலைப்பாதையில் செல்லாமல் சந்தர்ப்பவாத அரசியலினுள் முடங்கிப் போய்விட்டது என்ற கேள்வி சில சிந்தனையாளர், அரசியலாளர் மத்தியில் எழுந்துள்ளது. இதையொட்டி சில வாதப்பிரதிவாதங்களும் நடைபெற்று வருகின்றன.

திராவிடக் 'கருத்தியலே' தென்னிந்தியாவில் தமிழ்த் தேசிய உணர்வு மழுங்கடிக்கப்பட்டதற்குப் பிரதான காரணம் எனக் குணாவும், அவரைச் சார்ந்த சில அரசியலாளரும் இன்று அடித்துக் கூறுகின்றனர். அத்துடன் தமிழகத்தின் திராவிடக் கட்சிகளால் (தி.மு.க, தி.க, அ.இ.அ.தி.மு.க, ம.தி.மு.க.) இன்று வரை விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட ஒரு பிதாமகராகக் கருதப்பட்டு வந்த பெரியாரையும் இவர்கள் கடுமையாக விமர்சிக்கின்றனர். இந்த வகையில் அண்மையில் வெளிவந்த நூல்களில் முக்கியமாக குணாவின் 'திராவிடத்தால் வீழ்ந்தோம்', 'தமிழக மீட்சி', 'தமிழர் வரலாறு', 'இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும்', 'பிரபாகரனை நெஞ்சில் நிறுத்துவோம்' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

திராவிட இயக்கத்தில் காணப்பட்ட தெலுங்கு கன்னட ஆதிக்கமே (பொப்பிலி ராஜா- தெலுங்கர்; பெரியார் - கன்னட பாலிஜ நாயுடு) தமிழகத்தில் தமிழ்த் தேசிய உணர்வு வீரிய மற்றுப்போனதன் பிரதான காரணியாகக் காண்கிறார் குணா.

''நம் தமிழ் மொழி இன்று சேரி மக்களின் மொழியாகி நிற்கின்றது. தமிழில் பேசுவதை தாழ்வு என்றும், தமிழனாக இருப்பதே ஒரு தாழ்நிலை என்றும், தமிழினத்தவரிடையே மிகக் கேடான தாழ்வு மனப்பான்மையை மக்கள் உளவியலாக்கி விட்டதில் தமிழினப் பகைவர்கள் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளனர். இந்நிலைக்கு தமிழ் நாட்டுக் கன்னடத் தெலுங்கு அரசியலாகிய திராவிட அரசியலே காரணமாகும்'' (தமிழர் வரலாறு பக்.10)

''தமிழ்த் தேசியக் கொள்கையின் தாழி உடைந்த வரலாற்றைச் சுருங்கச் சொல்லப் புகுந்தபோது தமிழரல்லாதார் தமிழினத்தின் மீது சுமத்திய திராவிடக் கொள்கையை சிலுவையைப் போல் சுமந்ததனால் வந்த வினையைச் சுட்டிக் காட்டுவதே இந்த நூலின் நோக்கம்'' (திராவிடத்தால் வீழ்ந்தோம். பக்.39)

''தமிழருக்கு என தமிழ்த் தேசியத் தன்மையுடனான ஓர் அரசியலமைப்பு ஏற்படுவதை பெரியார் என்றுமே தடுத்தும், கெடுத்தும் வந்துள்ளார்.'' (திராவிடத்தால் வீழ்ந்தோம் பக். 33) என்பது போன்ற குற்றச்சாட்டுகளை திராவிடக் கோட்பாட்டாளர் மீது சுமத்துகிறார் குணா.

திராவிட இயக்கம் பற்றிய இதுபோன்ற சில விமர்சனங்களின் பின்னணியிலேயே நாம் பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரை தமிழ் - திராவிட தேசியக் கருத்து நிலை என் ஒன்றை வரையறை செய்து 'புனைந்து கட்டி' உருவாக்க எடுத்த முயற்சிகளை ஆராய வேண்டும்.

தமிழ் நாட்டின் கன்யாகுமாரி மாவட்டத்தில் உள்ள ஆரல்வாய்மொழி என்ற ஊரில் 1907ம் ஆண்டு பிறந்தவர் அப்பாதுரை. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். (இக்கல்லூரியில் தான் அண்ணா மாணவர் தலைவராக அரசியலில் இறங்கினார்.) நீதிக்கட்சியின் (பின்னர் திராவிடர் கழகம்) ஆங்கில ஏடுகளான (ஜஸ்டிஸ், லிபரேட்டர்) என்பவற்றிகும் தமிழ் ஏடுகளான திராவிடன், விடுலை என்பவற்றிற்கும் ஆசிரியராக இருந்தவர். அக்காலத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் இருந்தார். இவ்வகையில் திராவிட இயக்கத்தின் மூத்த அரசியலாளர் மீது இவருடைய கருத்துச் செல்வாக்கு மிகப் பெரியது.

அவருடைய திராவிடம், தென்னாடு பற்றிய கருத்துக்களைப் பார்க்கும்போது, தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடித்த 'திராவிட தேசியக் கற்பிதத்தின்' ஒரே காரணி பெரியார்தான் எனக் குணா கூறுவது தவறென்பதைக் காணலாம்.

பெரியாரின் கருத்துக்கள் பிராமண எதிர்ப்பு - சாதி எதிர்ப்பு- இந்து மத எதிர்ப்பு என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டவையாகும். இதற்கான தத்துவ - வரலாற்று அடிப்படையாக அவர் ஆரியர் - திராவிடர் என்ற மரபினக் (race) கோட்பாட்டைக் கைக்கொண்டவர். கருணா மனோகரன் அண்மையில் குணாவிற்கு விடையிறுத்து எழுதிய நூலில் சரியாகவே குறிப்பிட்டுள்ளபடி ''தமிழின விடுதலை என்பது அவரைப் (பெரியாரை) பொறுத்தவரை இரண்டாம் பட்சமானதுதான். (அவரது) தமிழ் விடுதலையும் ஆதிக்க எதிர்ப்பு (இந்திஎதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, மார்வாரி எதிர்ப்பு) என்ற பொருளில் அமையுமே அல்லாது தேசிய இன வரலாற்று விடுதலை என்ற அடிப் படையில் அமையாது''

பெரியார் திராவிடத் தேசிய விடுதலை என்ற ஒரு திட்டவட்டமான அரசியல் போராட்ட நோக்கில் (தமிழ் ஈழ விடுதலை என்பது போல) திராவிடக் கருத்து நிலையை உருவாக்கவுமில்லை, கையாளவுமில்லை என்பதை அவரே தெளிவாகக் கூறியுள்ளார்.

''திராவிட நாடு என்பது ஒரு பொருளாதார, சமுதாய சீர்த்திருத்தப் பிரச்சினையே ஒழிய (அது) ஒரு அரசியல் பிரச்சினையல்ல. தீண்டாமை ஒழிய வேண்டும் என்பது போலவே சுரண்டல் ஒழிய வேண்டும் என்கிறோம். அந்நியருக்கு நம்நாடு சந்தையாய் இருக்கக் கூடாது என்பது போலவே அந்நிய மாகாணத்துக்கு நம்நாடு சந்தையாய் இருக்கக் கூடாது என்கிறோம்'' (குடியரசு 28.09.1945) என்பது அவரது தெளிவான கூற்று.

ஆனால், திராவிட தேசியம் என்பதை ஒரு தேசிய இன விடுதலைக்குரிய கருத்து நிலையாக உருவாக்கி அதனடிப்படையில் தமிழகம், இலங்கை, மலாயா, சிங்கப்பூர் என எங்கும் ஒரு இன இயக்க வேகத்தையும் மக்கட் திரட்சியையும் உண்டாக்கியவர்கள் தமிழர்களாகிய அண்ணா, கலைஞர், சி.பி. சிற்றரசு மற்றும் இவர்களது கோட்பாட்டுக் குருவாகிய பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை ஆகியோரே. எனவே குணாவினது குற்றச்சாட்டுக்கள் இவர்களையே முதலிற் சார வேண்டும்.

'திராவிட தேசியம்' என்பதை ஒரு தீவிர தேசிய விடுதலைக் கோட்பாடாக பிரபலப்படுத்த எடுக்கப்பட்ட முதற் பெரும் முயற்சி அண்ணாவின் 'ஆரிய மாயை'. எழுபதுகள் வரை இதை வாசித்து 'அள்ளுப்படாத' தமிழ்த் தேசிய வாதிகள் தமிழகத்திலோ, இலங்கையிலோ, மலாயாவிலோ இல்லையென்றே கூறலாம்.

''இந்த இந்துஸ்தானம், இந்து, இந்துமதம், ஆகியவற்றிற்கும் திராவிட நாடு, திராவிடர், திராவிடர் சமயம் ஆகியவற்றிற்கும் அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. நிலவளம் முதற்கொண்டு மக்கள் மனவளம் வரை வேறுபாடுகள் உண்டு. மிகத் தந்திரத்தோடு ஆரியர் காங்கிரசின் துணையை நாடியோ, இந்து மகாசபையின் துணைகொண்டோ வெள்ளையரின் துணைகொண்டோ, திராவிட மறுமலர்ச்சியைத் தடுக்க முயன்றால் தாமதம் ஏற்படக்கூடுமே யொழியத் தடை ஏற்படாது. முடிவு பிரிவினை தான்.'' (ஆரிய மாயை 1943 ப.30) என இந்நூலில் முழக்கமிடுகிறார் அண்ணா.

12.3.47 அன்று சென்னையில் நடைபெற்ற மாகாணத் தமிழ் ஆசிரியர் மாநாட்டில் அண்ணாவும், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானமும் பேசினர். அக்காலத்தில் ம.பொ.சி. வெள்ளையர் போனபின் இந்திய கூட்டாட்சியுள் அதிகூடிய சுயாட்சி அதிகாரமுள்ள தனித் தமிழ் மாநிலம் வேண்டுமென தமது தமிழரசுக்கழகம் ஊடாகக் கோரிவந்தார். (இது பற்றி பின்னர் பார்ப்போம்)

வழக்கமாக ம.பொ.சி. ஒலிபெருக்கி முன்நின்று ''தமிழ்'' என்றதும் கூட்டம் ''வாழ்க'' எனமுழங்கும். அதுபோல ''தமிழினம்'' அதன்பின் ''தமிழ்நாடு'' என அவர் கூற கூட்டம் ''வாழ்க'' என்னும். ஆனால் மேற்கண்ட கூட்டத்தில் அண்ணாவின் ஆதரவாளர்கள் ம.பொ.சி. ''தமிழினம் வாழ்க' என்ற போது ''திராவிட இனம் வாழ்க'' எனவும் அவர் ''தமிழ் நாடு வாழ்க'' என்ற போது ''திராவிட நாடு வாழ்க'' என்றும் போட்டிக் குரல் எழுப்பினர்.

இக்கூட்டத்தில் ''திராவிடத் தனியரசு'' ஓரணா போன்றதென்றும் ''தமிழரசு'' காலணா போன்றதென்றும் ''நான் கேட்கும் ஓரணாவில் ம.பொ.சி. கேட்கும் காலணா இருக்கிறது. ஆனால் ம.பொ.சி. கேட்கும் காலணாவில் ஓரணா இல்லை'' என்றும் பேசினார் அண்ணா.

ஒரு பக்கம் இவ்வாறு திராவிட நாடு திராவிடர் என்பவற்றை தமிழ், தமிழ்நாடு என்பவற்றிற்கு மாறானதாகவும், மறுபுறம் திராவிடம் என்பதன் அடிப்படையாக தமிழ், தமிழர் பொற்காலம், என்பவற்றைப் பேசியும் ஒரு குழம்பிய 'இரண்டுங்கெட்டான்' பாணியிலான ஒரு 'தேசியக்' கருத்துநிலையை கற்பிதம் செய்து அதைத் தமிழ் பேசும் மக்களின் இனவிடுதலைக் கோட்பாடாக்கினர் அண்ணாவும், அப்பாதுரையும், கலைஞரும்.

இத் தமிழ் - திராவிட கருத்து நிலையை உலகெங்கும் பரந்து கிடந்த தமிழருக்குப் பொதுவான ஒரு அகண்ட தேசியமாக வரையறுக்கவும் அப்பாதுரை முயன்றார். இம்முயற்சி கோட்பாட்டு மட்டத்தில் திராவிட - தமிழ் தேசியம் எனும் கற்பிதத்துடன் இலங்கைத் தமிழ்ப்பற்றாளர் பலரை பிணைக்க வழிவகுத்தது.

உதாரணமாக 1957இல் வெளிவந்த செந்தமிழ் செல்வம் எனும் நூலில் அவர் பின்வருமாறு கூறுகிறார்.

''தமிழ், தமிழர், தமிழினம் என்ற குரல்கள் தமிழ்நாட்டில் எழுந்து 30 - 40 ஆண்டுகள் ஆகின்றன. இவற்றுள் முதல் குரலும் முதன்மையான குரலும் தமிழ்க் குரலே. ஆனால் இக்குரல் முதல் முதலாக எழுந்தது தமிழ் நாட்டிலன்று; அதாவது இன்று நாம் 'தமிழ் நாடு' என்று குறிப்பிடும் 'குணகடல்' குமரி, குடகம், வேங்கடம்' எனும் நான்கெல்லையுட்பட்ட இந்தியத் துணைக் கண்டப்பகுதியாகிய தமிழ் நாட்டிலன்று! துணைக் கண்டத்திலிருந்து கடற்காலினால் பிரிக்கப்பட்ட பழந்தமிழ் தாயகத்தின் பகுதியான இலங்கை அல்லது ஈழநாட்டு யாழ்ப்பாணத் தமிழரிடையே தான் அக்குரல் எழுந்தது. அது மலேயா, பர்மா, தென் ஆபிரிக்கா, தமிழகம், மோரிசு, பிஜி, ஜமெய்கா, கயானா முதலிய தமிழுலகப்பகுதியெங்கும் பரவி பெரும்பான்மைத் தமிழர் வாழும் தமிழ் நாட்டிலும் புத்துணர்ச்சியூட்டிற்று.

கடல் கடந்த தமிழகம் தந்த இத்தமிழியக்கத்துக்குத் தமிழ்நாடே தலைமை வகித்து வழிகாட்ட வேண்டுமென்று தமிழுலகம் எதிர்பார்ப்பது இயல்பன்றோ? இவ்விருப்பம் இன்று நிறைவேறி வருகிறது என்பதில் தடையில்லை. தமிழ்க் குரலால் எழுப்பப்பெற்ற தமிழியக்கம் தமிழ்நாட்டில் இன்று தமிழியக்கமாய், தமிழின (திராவிட) இயக்கமாய் வளர்ந்து வருகிறது.

தமிழர் குரல் தமிழியக்கமாக அதாவது மொழியியக்கமாக நிலைபெற்றால் போதும் என்று விரும்புபவர் உண்டு. அது தமிழியக்கமாக அதாவது அரசியலியக்கமாக அமைந்து விட்டால் போதும் என்று கருதுபவர்களும் உண்டு. ஆயினும் அது படிப்படியாக (தேசிய) இயக்கமாகவும் இனநாகரிக இயக்கமாகவும் இனக்கலை இயக்கமாகவும் வளர்ந்து கொண்டு வருகிறது. இவ்வளர்ச்சியைக் காரணகாரியத் தொடர்புடன் மரபு வழியில் நின்று உணராதவர் நாட்டையோ தமிழ்ப் பண்பையோ உணர முடியாது. இவற்றை உணராமல் தமிழ் வளர்ச்சிக்கு வழி காண்பதும் அரிது.

தமிழியக்கத்துக்கு யாழ்ப்பாணம் தலைமை வகிக்கும் வரை அது மொழியியக்கமாகியிருக்க முடிந்தது. ஆனால் இலங்கையிலே உள்ள தொழிலாளர் உரிமை பிறகடல் கடந்த தமிழகத் தொழிலாளர் உரிமை ஆகியவற்றுக்கான தொண்டாற்றி அவர்களை உயர்வுபடுத்த வேண்டுமானால், தமிழரியக்கம் தமிழியக்கமாய்த் தீரவேண்டும். தமிழ்நாடு அரசியல் உரிமை பெற்றாக வேண்டும்.''

இத்துடன் அப்பாதுரை தனது யாழ்ப்பாண நண்பராகிய 'ஆய்வாளர்' தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை எழுதிய 'தமிழன் எங்கே?' (மாருதி பிரஸ் சென்னை 1958) என்ற நூலுக்கு அளித்த சால்புரையில் ''ஆசிரியர் ஏடு இது போன்ற பல நல்ல தமிழின ஆராய்ச்சிகளுக்கு ஒரு சீரிய வழிகாட்டி ஆகும். இனியேனும் தமிழ் தமிழின தமிழ்ப்பண்பாட்டு ஆராய்ச்சிகள் துணைக்கண்டத் தமிழகத்துடன் நின்று விடாமல், பண்டைத் தமிழகப் பகுதியான இலங்கையிலும் அதே வகைத் தொடர்பும், வரலாறு, நாகரீக, இன உறவுகளும் மிக்க மலாய், தென்கிழக்காசியா, பர்மா, வங்கம், திபெத்து, சீனம், தென் ஆபிரிக்கா, அமெரிக்கா, நடுநிலக் கடலகம் முதலிய பகுதிகளிலும் சென்று பரவவேண்டுவது அவசியம். மறுமலர்ச்சியூழி அத்தகைய ஆராய்ச்சிகளில் புகுந்து பரவி ஓங்க ஆசிரியர் ஏடு பெரிதும் உதவுமாக!'' எனக்கூறுகிறார்.

(வரும்)

www.tamilarangam.net

# விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணம்!

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இருந்து ஏப்ரல் மாதம் மீண்டும் தமது இருப்பிடங்களில் நிம்மதியாக இருக்கலாம் என வந்த மக்களுக்கு இப்போது கெடுபிடிகள், சுற்றி வளைப்பு, பொருட்கள் விலையேற்றம் போன்ற பெரிய பிரச்சினைகள் உருவாகி விட்டன.

அதிகாலையில் இருந்து நண்பகல் வரை சுற்றிவளைக்கப்பட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட ஆலயம், அல்லது பாடசாலைக்கு மக்கள் செல்லுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படுகின்றது. படையினரும் வீடு வீடாகச் சென்று எல்லோரையும் அழைத்துச் செல்கின்றனர்.

அதிகாலை தேநீர்கூட அருந்த முடியாமல் பெண்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள், வயோதிபர் என பாகுபாடின்றி கூட்டிச் செல்லப்பட்டு முகமூடி முன்பாக நிறுத்தப்படுவர். அவர் தலையாட்டினால் கைதுகள் தொடரும்.

சுற்றிவளைப்பின்போது டாக்டராக இருந்தால் என்ன, கிராம சேவையாளராக இருந்தால் என்ன, எல்லோரும் போயாக வேண்டும்.

### *ஒத்துழைப்புத்தாருங்கள்*

உதாரணமாக 16.08.96 அன்று யாழ் பிரதானவீதி, ஸ்ரான்லி வீதி பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டபோது யாழ் பிரதம தபாற்கந்தோரில் அதிகாலைவேலைக்கு வந்த தபால் ஊழியர்கள், தபால் அதிபர்கள் யாவருமே கூட்டிச் செல்லப்பட்டனர்.

அங்கே சுற்றிவளைக்கப்பட்ட மக்கள் முன்பாக இராணுவ அதிகாரி ஒருவர் தமிழில் அல்லது மொழிபெயர்க்க உரையாற்றுவார்.

''நீங்கள் சமாதானமாக நிம்மதியாக வாழவேண்டுமானால் எமக்கு ஒத்துழைப்பு, ஆதரவு தரவேண்டும். ஜே.வி.பி. பயங்கரவாதத்தை எமது இராணுவமே ஒழித்தது. சிங்கள மக்கள் எமக்கு ஒத்துழைப்பு தந்தபடியால் ஜே.வி.பி. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு சிங்கள மக்கள் இன்று நிம்மதியாகவும், சமாதானமாகவும் வாழ்கிறார்கள். அதேபோல நீங்களும் எமக்கு ஒத்துழைப்பு தந்தால் இங்குள்ள பயங்கரவாதத்தை ஒழிக்க முடியும். அல்லது நீங்கள் கஷ்டங்களை எதிர்நோக்குவீர்கள்'' என்று அந்த அதிகாரி கூறுவார்.

சுற்றிவளைப்பு முடிந்ததும் பிடிபட்ட பிள்ளைகள், அவர்களது பெற்றோர் அங்கு நின்று அழுவார்கள். என்ன செய்வது? யாருடன் இது தொடர்பாகக் கதைப்பது?

சில சமயம் மூன்று மாதம் நான்கு மாதம் முடிய நீதிமன்றம் மூலம் விடுதலையாவர்.

ஒருவர் மற்ற ஒருவருடன் கோபமாக இருந்தால் அவரைப் பழிவாங்க பொய்த்தகவல் கொடுத்தும் சிலர் பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

வீதிகளில் சந்திகளில் வீதித்தடை சோதனைகள். சைக்கிளில் மோட்டார் சைக்கிளில் செல்வோர் இறங்கியே செல்ல வேண்டும்.

கொண்டு செல்லும் பொதிகள் பைகள் துருவித்துருவி சோதனையிடப்படும்.

04.08.1996 ஞாயிறு அன்று பிரதான வீதியில் சதொசவுக்கு காவல் பணிபுரிந்தவர்கள் பகல் 2 மணியளவில் வீதியில் வந்த வசந்தன் என்ற இளைஞனை மிருகத்தனமாக தாக்கினர். தாக்கியவர்கள் மதுவெறியில் இருந்தனர்.

இப்பொதெல்லாம் சதொசவுக்கு அருகில் கசிப்பு விற்பனை பகிரங்கமாகவே நடைபெறுகிறது.

மதுவரித்திணைக்களம் இருந்தும் சட்ட விரோத கள், கசிப்பு (உற்பத்தி) வியாபரம் நடைபெறுகிறது. கசிப்பு உற்பத்தி ஒரு தொழிலாகிவிட்டது.

அந்த இளைஞனை விடுவிக்க மதகுரு ஒருவர் வந்தும் அவர் முன்பாகவே அந்த இளைஞன் தாக்கப்பட்டான்.

இதேபோல் பாஷையூர் பகுதியிலும் மீன்வாங்கச் சென்றவர்களை அங்கு பணியாற்றிய ஒருவர் தடியால் அடித்தார். அவருக்கும் மதுவெறி.

### *வயிறு பெரிதா? சோதனை!*

பெண்கள் பெண் பொலிசார் பெண் இராணுவத்தினரால் சோதனையிடப்படுகிறார்கள். சந்தேகம் இருந்தால் அறையில் அழைத்துச் செல்லப்பட்டு அல்லது மறைவிடத்தில் வைத்து அவர்களின் உடைகளை களைந்து சோதனையிடுகின்றனர். கர்ப்பிணிகள் பெரும்பாலும் இவ்வாறு சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். அல்லது பெரிய வயிறு உள்ளவர்களுக்கும் இதேமாதிரி சோதனையைச் சந்திக்க நேரும்.

### *நகருக்கு வர கெடுபிடி*

தட்டாதெருச் சந்தியூடாகவே வலி. வடக்கு, வலி மேற்கு பகுதிகளில் இருந்து யாழ் நகர் வரவேண்டும். சில நாட்களில் உள்ளே வரவே முடியாது. அப்படி வந்தாலும் நகருக்குள் வர பகல் 12 மணியாகிவிடும். கியூவில் நிற்கவேண்டும்.

இதனால் வங்கிகள் மற்றும் அரச அலுவலகங்களுக்கு ஊழியர் அதிகாரிகள் வரமுடியாத நிலை. அப்படி வந்தாலும் அரை நாள் வேலை .அவசர நோயாளிகள் வரமுடியாது. அத்துடன் வலிகாமம் வடக்கு மேற்கு பகுதிகளில் பொருட்கள் விலை அதிகம்; காரணம் அங்குள்ள வியாபாரிகள் வந்து போக முடியாத நிலைமையால் பொருட்களை அப்பகுதிகளுக்கு கொண்டு செல்ல முடியாதுள்ளது.

பொருட்களின் விலைகள் ஒக்டோபர் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் இருந்ததை விட (புலிகள் இருந்தபோது) இப்போது மும்மடங்கு விலை. முன்னர் புலிகளுக்கு வரி. கிளாலியில் ஏற்றி இறக்க, படகு கூலி என்று காரணம் கூறினார்கள் வர்த்தகர்கள். ஆனால் தற்போது பொருட்கள் கப்பல் மூலமே வருகின்றன. ஆயினும் விலை அதிகரித்துள்ளது.

### *தொலைபேசிக்கு தவம்!*

தொலைபேசி வசதி வழங்கப்படுமென பிரசாரம் செய்யப்பட்டது. யாழ் தபால் நிலையத்தில் அதிகாலை 5 1/2 மணி முதல் தொலைபேசி அழைப்புக்காக மக்கள் தவம் கிடக்கின்றனர்.

மன்னார் தொலைபேசித்தொடர்பு ஊடாக மந்த கதியில் இச்சேவை நடைபெறுகிறது. சிலவேளைகளில் ''லைன் அவுற்'', ''பழுது'' என்று கூறுகிறார்கள்.

இராணுவ சற்றிவளைப்புகளால் சில அலுவலகங்களில் அதிகாரிகள், ஊழியர்களே இல்லை. அதனைச் சாட்டாக வைத்து ஊழியர்களும் தாமமாகி வந்துவிட்டு எனது பிள்ளைகள் பாடு என்னவோ என்று வீட்டிற்குப் போய்விடுகிறார்கள். இதனால் மக்கள் தமது தேவைகளுக்காக சில அரச அலுவலகங்களுக்கு அலைகிறார்கள். (உதவி அரச அதிபர் அலுவலகம், கிராம சேவையாளர் அலுவலகம் இவற்றுள் பிரதானமானவை)

### *விளம்பரத்துக்கு ஒரு பத்திரிகை*

யாழ்ப்பாணத்தில் வானொலி கேட்டு செய்திகளை அறிகிறார்கள். பலாலி யாழ் சேவையில் சில முக்கிய செய்திகள் வரும். பத்திரிகையைப் பொறுத்தமட்டில் 'தினகரன்' படையினரால் விற்கப்படும். அதில் முழுவதும் அரச கொழும்பு. தென்பகுதி செய்திகள். விலை 5 ரூபா. வாசிக்க ஒன்றுமில்லை என்பதால் மக்கள் வாங்குகின்றார்கள்.

உதயன் பத்திரிகை வருகிறது. ஓய்வூதியம், விவசாய நடவடிக்கை .உலகச் செய்திகள் என்பவற்றுடன் விளம்பரங்கள் அதிகமாக வரும் 'டெய்லி நியூஸ்' போன்று விளம்பரத்திற்கான ஒரு பத்திரிகை உதயன் என யாழ் மக்கள் கூறுகின்றனர்.

சற்றிவளைப்பு தேடுதல் போன்ற செய்திகள் அதில் வெளிவரா. கராணம் ஈழநாடு, முரசொலி போன்ற பத்திரிகைகள் இந்திய இராணுவ காலத்தில் தாக்குதல் சுற்றிவளைப்பு போன்றவற்றை வெளியிட்டு பல பிரச்சினைகளை அந்த நேரம் எதிர்நோக்கியிருந்தன. அதனால் படையினருக்குப் பாதகமில்லாமல் செய்திகளை வெளியிட்டு வருகிறது உதயன்.

முல்லைத்தீவு தாக்குதல் சம்பவத்தை வெரித்தாஸ் தெரிவித்தது, லண்டனில் புலிகள் தெரிவித்தனர், பி.பி.ஸி. தெரிவித்தது என்று செய்தி வெளியிட்டதால் உதயன் நிர்வாகம் அச்சுறுத்தப்பட்டுள்ளது. அதனால் தற்போது இலங்கை வானொலி தெரிவித்தது, பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை தலைமையகம் தெரிவித்தது என செய்தி வெளியிடுகிறது. 1996 ஏப்ரல் 19 வரை புலிகளின் குரல் தெரிவித்தது எனவும் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.


### *போக்குவரத்து நிறுத்தம்*

கொழும்புக்கான போக்குவரத்து கப்பல் மூலமே நடைபெற்று வந்தது. முல்லைத்தீவு சம்பவத்துடன் அது நிறுத்தப்பட்டது. விமான சேவையும் நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால் அரச சார்பு பத்திரிகைகளும், வானொலியும் விமான மூலம் யாழ் மக்கள் பயணம் என்று கூறப்படுகிறது.

கொழும்புக்கு அவசர தேவைக்கு போக வேண்டியவர்களும் வெளிநாடு போக வேண்டியவர்களும் போகமுடியாத நிலையில் தவிக்கிறார்கள். தபால் சேவை சீர்கேடு, தொலைபேசி சீர்கேடு, ஆக கொழும்புடன் எப்படித் தொடர்பு கொள்வது?

இவ்வாறு சூரியகதிர் 2 நடவடிக்கை மூலம் சொந்த இடங்களுக்கு திரும்பியவர்கள் படும் கஷ்டங்கள் துன்பங்களை ஏனைய பகுதி மக்கள் அறிவார்களா?

தம்பு




## விதையில்லா விவசாயிகள்!

யாழ் குடாநாட்டு விவசாயிகளில் சுமார் 40 வீதமானர்களே தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளதாக அகதிகளின் புள்ளிவிபரம் ஒன்று கூறுகின்றது.

எதிர்வரும் காலபோக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல்லை எவ்வாறு பெறுவது என இந்த விசாயிகள் தெரியாமல் தவிக்கின்றார்கள். 35 ஆயிரம் புசல் விதை நெல் தேவை எனக் கணிப்பிட்டு கொழும்பிற்கு கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனினும் இதுவரையிலும் தேவையான விதைநெல்லை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பதற்கு அரசு இன்னும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லையாம்.

விதைக்கென்று ஒரு நெல்மணி கூட இல்லாத நிலையில் என்ன செய்வது என்று விவசாயிகள் கவலை கொண்டுள்ளார்கள்.

பொதுவாக விதை நெல் பற்றாக்குறை கிடைக்காத கஷ்டத்திற்கிடையில் உழவுக்குத் தேவையான உழவு இயந்திரங்கள் உழவு மாடுகள், மண் வெட்டிகள் மற்றும் இயந்திரங்களுக்கு அவசியமான உதிரிப் பாகங்கள் என்பவை இல்லாமலும் யாழ் விவசாயிகள் கஷ்டமடைகிறார்கள்.

தம்பு

**சட்ட உதவி மற்றும் ஆலோசனைச் சேவை**

* உங்கள் உறவினர்கள் பயங்கரவாதச் சட்டம் அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டோ/ தடுத்து வைக்கப்பட்டோ உள்ளனரா?

அல்லது

* அத்தகையவர்கள் காணாமல் போயுள்ளனரா/ கடத்தப்பட்டுள்ளனரா?
* உங்களுக்கோ நீங்கள் அறிந்த பிறருக்கோ சட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றீர்களா?

*அப்படியாயின் தொடர்பு கொள்ளுங்கள்:-*

**சட்டக்கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டம்**

**"மேர்ஜ்,"**

**4, ஜயரத்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு - 05**
**தொலைபேசி : 584380, 594229**

கடந்த 5 வருடங்களாக மேர்ஜ் வடக்குத் தெற்குப் பிரதேசங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அவசரகாலச்சட்டம் என்பவற்றின் கீழே கைது செய்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சட்ட உதவி ஆலோசனை என்பவற்றை வழங்கி வருகிறது.

சட்ட ஆலோசனைச் சேவையை மேர்ஜ் காரியாலயத்தில் திங்கள், புதன், வெள்ளி தினங்களில் பி.ப.2 மணி முதல் 5மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

*சட்டத்தின் முன் சமத்துவம் - அனைவருக்கும் - ஒரே நேரத்தில்*

- ஏ. என். பர்னாந்து

எல்லாத் தொடர்புகட்கும் : இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. தொலைபேசி : 593615.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்